…: 30.00
…கள் : இருபத்து நான்கு
website : www.valampurii.lk
Viber : 076 636 3378

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

WESTERN UNION WU
moving money for better
உலகெங்குமுள்ள உறவுகளுக்கு துரித தபால்கள், பொதிகள் சேவை உடனுக்குடன் அனுப்ப நாடுங்கள்
உறவுகளிடமிருந்து WESTERN UNION மூலம் அனுப்பிய பணத்தை ஒருசில நிமிடங்களில் நீங்கள் பெற்றுக்கொள்ள.
இவையனைத்தையும் ஒரே கூரையின் கீழ் அதிவிரைவு, பாதுகாப்பு, நம்பகத்தன்மை
(C-397)
Authorised Agent
SRI MURUGAN
TELE COMMUNICATION & AGENCY POST OFFICE
# 303, K.K.S.ROAD, JAFFNA.
TEL: 021 222 5392, 021 222 2670, FAX: 021 222 3214
E-mail:srimurugan303@gmail.com, E-mail:srimurugan09@gmail.com

சங்கு 21 வள்ளுவர் ஆண்டு 2051 புரட்டாதி 16 வெள்ளிக்கிழமை (02.10.2020) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 288

## கட்சியை விட்டு விலகப் போவதில்லை; தேர்தலில் போட்டியிட மன்றாடினார்கள்

### முன்னணியின் உள்விவகாரங்களை போட்டுடைத்தார் மணிவண்ணன்



(யாழ்ப்பாணம்)

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி ஜனநாயக பண்பற்ற கட்சியாக மாறி விடக்கூடாது என்பதற்காகத் தான் தொடர்ந்து கட்சிக்குள் இருந்து போராடவுள்ளதாக அக்கட்சியின் முன்னாள் தேசிய அமைப்பாளரும் ஊடக பேச்சாளருமான சட்டத்தரணி வி.மணிவண்ணன் தெரிவித்தார்.

யாழில் உள்ள தனியார் விருந்தினர் ▷23

## எங்கள் குழந்தைகள் எங்கே? கோட்டா அரசே பதில் சொல்

### யாழில் கவனயீர்ப்புப் போராட்டம்



▷06

## மாகாண சபை இலங்கை உள்விவகாரம்

# இந்தியா கட்டாயப்படுத்தவோ தலையிடவோ முடியாது



## இராஜாங்க அமைச்சர் சரத் வீரசேகர



(கொழும்பு)

***மாகாண சபை இலங்கையின் உள்விவகாரம். ஆகவே மாகாண சபை தேர்தலை நடத்தச் சொல்லி இந்தியா கட்டாயப்படுத்தவோ அல்லது அதில் தலையிடவோ முடியாது என மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி இராஜாங்க அமைச்சர் சரத் வீரசேகர தெரிவித்தார்.***

பாதுக்க பகுதியில் நேற்று முன்தினம் புதன்கிழமை நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு கருத்து தெரிவித்த இராஜாங்க அமைச்சர், மற்ற நாடுகளின் தலைவர்களால் இவை தீர்மானிக்கப்பட வேண்டிய விடயம் இல்லை எனக் கூறினார்.

மேலும் மாகாண சபை முறையினை தொடர்ந்தும் செயற்படுத்தும் விடயத்தில் இந்தியா தலையிடவோ அல்லது கட்டாயப்படுத் ▷23

## அமைச்சர் ஹெகலிய வடக்குக்கு இன்று விஜயம்



(யாழ்ப்பாணம்)

அமைச்சரவை பேச்சாளரும் வெகுஜன ஊடகத்துறை அமைச்சருமான ஹெகலிய ரம்புக் ▷23

## எலிக்காய்ச்சல் பரவும் அபாயம்

### சுகாதார அமைச்சு எச்சரிக்கை

18ஆம் பக்கம் பார்க்க

## வல்லிபுர ஆழ்வார் கோவிலில் 9 பவுண் தாலிக்கொடி, 2 சங்கிலிகள் திருட்டு

(கரணவாய்)

வயோதிப பெண்ணிடம் இருந்து 9 பவுண் பெறுமதியான தாலிக் கொடியையும் மற்றும் 2 சங்கிலிகளையும் திருடர்கள் அறுத்துள்ளனர்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் வல்லிபுர ஆழ்வார் ஆலய தேர்த்திருவிழாவில் இடம்பெற்றுள்ளது. ▷23

## 20ஆவது திருத்தச் சட்டத்தை தான்தோன்றித்தனமாக நிறைவேற்ற அரசு முயற்சி

### லக்ஸ்மன் கிரியெல்ல

(கொழும்பு)

அரசியலமைப்புக்கான 20 ஆவது திருத்த சட்டமூலத்தை அரசாங்கம் நிலையியற் கட்டளைக்கு புறம்பாக தான்தோன்றித்தனமாக நிறைவேற்றிக் கொள்ள முயற்சிக்கின்றது என்று ஐக்கிய ▷23

## கஞ்சாவுடன் துன்னாலையில் ஒருவர் கைது

(கரணவாய்)

துன்னாலை முனியப்பர் கோயிலுக்கு அருகாமையில் உள்ள ஒரு பகுதியில் 10 கிராம் கஞ்சாவுடன் இளைஞர் ஒருவர் நேற்று கைது செய்யப்பட்டுள்ளார்.

நெல்லியடிப் ▷23

## குறிப்பிட்ட ஒரு மக்கள் குழுவினரை புலனாய்வாளர்கள் கண்காணிக்கவில்லை

### ஐ.நாவின் குற்றச்சாட்டுக்கு இலங்கை பதில்




(ஜெனிவா)

இலங்கையில் பாதுகாப்புப் படையினரும் புலனாய்வுப் பிரிவினரும் நாட்டில் எந்தவொரு குறிப்பிட்ட மக்கள் குழுவினரை கண்காணிக்கும் நடவடிக்கையில் ஈடுபடவில்லை என ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையில் இலங்கை தெரிவித்துள்ளது.

ஐக்கிய நாடுகள் செயலாளர் நாயகத்தின் வருடாந்த அறிக்கையில் இலங்கை தொடர்பாக அச்சுறுத்தும் விடயங்கள் கண்காணிப்பு துன் ▷23

## ஆறு அம்சக் கோரிக்கையை முன்வைத்து இந்துக்கள் பேரணி



▷08

# வடக்கில் இருக்கின்ற பிரச்சினைகளே தென்பகுதியிலும் இருக்கின்றது

## வவுனியாவில் சமல் ராஜபக்ச



(வவுனியா)

வடக்கில் இருக்கின்ற பிரச்சினைகளே தெற்கிலும் இருக்கின்றன என உள்ளகப் பாதுகாப்பு, உள்நாட்டலுவல்கள் மற்றும் அனர்த்த முகாமைத்துவ இராஜாங்க அமைச்சர் சமல் ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

வவுனியா மாவட்ட செயலக கேட்போர் கூடத்தை நேற்று திறந்து வைத்து உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,


அம்பாந்தோட்டை மாவட்டத்தின் திஸ்ஸமகாராமை பகுதியின் சுவாத்திய நிலைமைகளை வவுனியாவிலும் உணர முடிகிறது. உண்மையில் வடக்கில் இருக்கின்ற பிரச்சினைகள் தான் தெற்கிலும் இருக்கின்றது. இருவரும் அந்த பிரச்சினைகள் என்ன என்பதை இனங்கண்டு அதற்கு தீர்வு காண்பதில் அந்த வெற்றி இருக்கிறது. எமக்கு வழங்கப்பட்டுள்ள பொறுப்பாணை மக்களது தேவைகளை துரிதமாகவும், சிறப்பாகவும் வழங்குவதே.

பிரதேச செயலக பிரிவுகளில் இருக்கின்ற பிரச்சினைகள் என்ன? அதற்கு என்ன தீர்வு எடுக்கலாம் என்பது தொடர்பாக ஆராய்ந்து வருகின்றோம். அலுவலகங்களில் பணியாற்ற வசதிகள் போதுமானதாக இல்லாமல் இருக்கலாம். அதனை செய்து கொடுக்கவுள்ளோம். பிரதேச செயலாளர்கள் பலரின் விடுதிகள் சீர் செய்ய வேண்டியுள்ளது. அதனை செய்து கொடுக்க வேண்டியுள்ளது.

கிராமிய மக்கள் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்துள்ளனர். மக்களது பிரச்சினைகள் தொடர்பில் அறிந்து அதனை தீர்ப்பதற்கு அரசுக்கு கோரிக்கை விடுவோம். கடந்த தேர்தல் காலத்தில் யாழ்ப்பாணத்திற்கு சென்றேன். அங்கு இருக்கும் மக்களுக்கு குடிநீர் பிரச்சினை பெரிய பிரச்சினையாகவுள்ளது. அந்த பிரச்சினையை தீர்க்க மழை நீர் சேகரிப்பு திட்டம் ஒன்றை ஆரம்பித்துள்ளோம்.

அரச அலுவலகங்களுக்கு... மக்களது பிரச்சினைகள் தீர்க்க... றதா என்பது குறித்தும் கவனம் செலு... வருகின்றோம். மக்களுக்கு காணிக்கான உறுதிப் பத்திரங்கள் இல்லாமை, காணிப் பிரச்சினைகள், குடிநீர் பிரச்சினை என்பன காணப்படுகின்றன.

சிலர் வன ஓதுக்கீட்டுக்கான காணிகளுக்கு உறுதி பெறுகின்றனர். இதனை தடுக்க வேண்டும். மக்களுக்கான காணிகளை வழங்க வேண்டும். அரச அதிகாரிகள் சிலர் மக்களுக்கு சிறப்பாக வேலை செய்கிறார்கள். சிலர் மக்களிடம் ஏதாவது பெற்றுக் கொண்டு வேலை செய்கிறார்கள். இந்த நிலைமைகள் மாற்றப்பட்டு மக்களுக்கு உண்மையாக பணியாற்ற வேண்டும். அரச உத்தியோகத்தர்கள் ஊக்கத்துடன் அர்ப்பணிப்புடன் வேலை செய்ய வேண்டும். மக்களது தேவைகளை நாம் இனங்கண்டு அதனை துரிதமாக தீர்க்க வேண்டும் என்றார். (ம-03)



துன்னாலை வல்லிபுர ஆழ்வார் ஆலய சமுத்திர தீர்த்த உற்சவம் வங்கக் கடலில் நேற்று வியாழக் கிழமை மாலை இடம்பெற்றபோது.....

( கரணவாய் செய்தியாளர் )

# வாளினைக் காட்டி அச்சுறுத்தி தொலைபேசி, பணம் கொள்ளை

## புன்னாலைக்கட்டுவனில் சம்பவம்

(புன்னாலைக்கட்டுவன்)

வீதியால் சென்றவர்களை வழிம றித்து வாளினைக்காட்டி அச்சுறுத்தி தொலைபேசி, பணம் என்பன கொள்ளைக் கும்பலால் அபகரிக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் கடந்த திங்கட்கிழமை இரவு 11.00 மணியளவில் புன்னாலைக்கட்டுவன் தெற்கு மூன்றாம் சந்திப் பகுதியில் இடம் பெற்றுள்ளது.

முகங்களை கறுப்புத் துணியால் மூடிக் கட்டியபடி வாள்களுடன் ஆறு பேர் கொண்ட கொள்ளைக் கும்பல் புன்னாலைக்கட்டுவனில் இருந்து புத்தூர்நோக்கி மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்த இருவரை மறித்து அவர்களிடம் இருந்த பெறுமதியான இரண்டு தொலைபேசி மற்றும் 21 ஆயிரத்து ஐநூறு ரூபாய் பணம் என்பவற்றை கொள்ளையடித்துள்ளது

இதேவேளை புன்னாலைக்கட்டுவன் தெற்குச் சந்திக்கும் நிலாவரைக்கும் இடைப்பட்ட பகுதியில் தொடர்ச்சியாக இவ்வாறான கொள்ளைகள் இடம்பெறுவதாக அப்பகுதி மக்கள் அச்சம் வெளியிட்டுள்ளனர். (ம-03, 78)


காரைநகர்
கிழவன்காடு கலாமன்றம்
நடாத்தும்

பரிசளிப்பும் கலைநிகழ்வும் - அழைப்பு

இடம் : துர்க்கா மணி மண்டபம், நல்லூர்
காலம் : 04.10.2020 ஞாயிற்றுக்கிழமை
நேரம் : பி.ப 2.00 மணி

தலைவர்
திரு. ந. சோதிநாதன் அவர்கள்
(ஸ்தாபகரும் தலைவரும், கிழவன்காடு கலாமன்றம், காரைநகர்)

பிரதம விருந்தினர்
உயர்திரு பா. செந்தில்நந்தனன் அவர்கள்
(செயலாளர் - சுகாதார சுதேச மருத்துவ, சிறுவர் பராமரிப்பு, நன்னடத்தை அமைச்சு, வடமாகாணம்.)

சிறப்பு விருந்தினர்கள்
திரு. தி. ஞானசுந்தரன் அவர்கள்
( பிரதிக் கல்விப் பணிப்பாளர், தாபனமும் பொது முகாமைத்துவமும், யாழ்ப்பாண கல்வி வலயம். )

காரை. திரு. கு. சிவஞானசுந்தரம் அவர்கள்
( பிரதான முகாமையாளர், யாழ். அதிமேற்தரக் கிளை, இலங்கை வங்கி, யாழ்ப்பாணம். )

துறைசார் விருந்தினர்கள்
சங்கீத நாதசாகரம் R. கேதீஸ்வரன் அவர்கள்
( நாதஸ்வர வித்துவான் )

கலாநிதி ஸ்ரீமதி சுகன்ஜா அரவிந்தன் அவர்கள்
( முதுநிலை விரிவுரையாளர், இசைத்துறை, யாழ். பல்கலைக்கழகம்.)

கௌரவ விருந்தினர்
கலைமாடக்கோன்
திரு. திருமதி சிவஞானம் உமாதேவி தம்பதியினர்
( கௌரவ உறுப்பினர், கிழவன்காடு கலாமன்றம், காரைநகர். )

கவியரங்கம் - கலையாலும் உலகாளலாம்
தலைமை – கவிஞர் சோ. பத்மநாதன்
கவிஞர் இ.த. ஜெயசீலன் | கவிஞர் நா. சிவசிதம்பரம்
கவிஞர் ச. முகுந்தன் | கவிஞர் இ. சு. முரளிதரன்

நாட்டியாஞ்சலி

பட்டிமண்டபம்
தலைப்பு
" கல்வி வளர்ச்சியில் பெரிதும் செல்வாக்கு செலுத்துவது "
குடும்ப சூழலே!
திரு. கு. பாலசண்முகன்
திரு. ந. ஐங்கரன்
திரு. T. ஹர்சன்
பாடசாலை சூழலே!
செந்தமிழ் சொல்லருவி ச. லலீசன்
திரு. இ. சர்வேஸ்வரா
திரு. ஜீவா ஷஜீவன்

நடுவர்
பேராசிரியர் S. சிவலிங்கராஜா

நன்றியுரை

குறிப்பு : நிகழ்வுகள் சுகாதார நடைமுறைகளுக்கு அமைய நடைபெறும்.

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
கிழவன்காடு கலாமன்றம், காரைநகர்.

(C-4556)


# புலமைப்பரிசில் மாணவர்களுக்கு முதன்முறையாக அனுமதி அட்டைகள்

## பாடசாலை அதிபர்களுக்கு அனுப்பிவைப்பு

(கொழும்பு)

எதிர்வரும் 11 ஆம் திகதி நடைபெறவுள்ள தரம் 05 புலமைப்பரிசில் பரீட்சைக்கு தோற்றவுள்ள அனைத்து மாணவர்களுக்கும் முதன்முறையாக அனுமதி அட்டைகளை வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கல்வி அமைச்சு வெளியிட்ட விசேட அறிக்கையில் இது தொடர்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த அனுமதி அட்டைகள் ஏற்கனவே பாடசாலைகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சு மேலும்குறிப்பிட்டுள்ளது.இதற்கமைய, குறித்த அனுமதி அட்டைகளில் சுட்டிலக்கம் மற்றும் பரீட்சை நிலையம் என்பன குறிப்பிடப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, தரம் 05 புலமைப்பரிசில் பரீட்சை எதிர்வரும் 11 ஆம் திகதி நாடு முழுவதும் உள்ள 2 ஆயிரத்து 936 பரீட்சை நிலையங்களில் நடத்தப்படவுள்ளது.

இந்த நிலையில், குறித்த பரீட்சையில் 3 இலட்சத்து 31ஆயிரத்து 694 மாணவர்கள் தோற்றவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-03)


பணியாளர்கள் தேவை

வடிவமைப்பாளர் ஆண்/பெண்
அலுவலக ஊழியர் ஆண்
வரவேற்பாளர் பெண்

அனுபவம் உள்ளவர்கள், பழக விரும்புபவர்கள் சுயவிபரக்கோவையுடன் நேரில் வரவும்.

SMART
DIGITAL PRINTING

Tel : 021 221 2958, Mob : 07 1650 1650,
e.mail : smartjaffna@gmail.com

எங்களுக்கு வேறு கிளைகள் இல்லை.

(4347)


# இரத்ததான முகாம்

(யாழ்ப்பாணம்)

கருகம்பனை தமிழ் மன்றம் சனசமூக நிலையம் கருகம்பனை இந்து இளைஞர் கழகம் மற்றும் கருகம்பனை விளையாட்டுக்கழகம் ஆகியவற்றின் ஏற்பாட்டில் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணி தொடக்கம் மதியம் 2.00 மணி வரை கருகம்பனை கலாசார மண்டபத்தில் இரத்த தான முகாம் இடம்பெற உள்ளது. (ம-03)

# பாதுகாப்பான சிறுவர் மற்றும் முதியோர் சமுதாயத்தை உருவாக்க ஒன்றிணைவோம்

(கொழும்பு)

**மிகவும் பாதுகாப்பான சிறுவர் சமுதாயத்தையும் ஆரோக்கியமான முதியோர் சமுதாயத்தையும் உருவாக்க அனைவரையும் ஒன்றிணையுமாறு எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ அழைப்பு விடுத்திருக்கின்றார்.**



சிறுவர் மற்றும் முதியோர் தினத்தை முன்னிட்டு எதிர்க்கட்சி தலைவர் வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தியிலேயே இவ்வாறு அழைப்பு விடுத்துள்ளார்.

சிறுவர் உரிமைகளை பாதுகாப்பதற்கு முதலிடத்தை வழங்கவேண்டும் என்பதை உலக வாழ் அனைத்து மக்களும் ஏற்றுக்கொண்டுள்ளனர். இந்நிலையில் உலகளாவிய ரீதியில் இன்றைய கால கட்டத்தில் சிறுவர்கள் பெரும் சவால்களுக்கு முகங்கொடுக்க வேண்டியேற்பட்டுள்ளது. அதற்கமைய உலகம் முழுவதிலும் நாள் ஒன்றுக்கு 16 ஆயிரம் சிறுவர்கள் உயிரிழக்கின்றனர். இவர்களுள் 50 சதவீதமான சிறுவர்கள் மந்த போசனத்தினால் உயிரிழப்பதாக அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

மேலும் சிறுவர் துஷ்பிரயோகம், குழந்தை திருமணம் மற்றும் குழந்தைகளை வீட்டு பணியாளர் சேவைகளில் ஈடுபடுத்தல் என்பன பாரிய நெருக்கடிகளாக காணப்படுகின்றன. போட்டி நிறைந்த இந்த உலகத்தில் பிள்ளைகள் பெரும் சவால்களுக்கு முகம்கொடுக்க வேண்டி ஏற்பட்டுள்ளது.

இதனால், சிறுவர் உரிமை தொடர்பில் ஐக்கிய நாடுகள் சபையினால் உள்ளடக்கப்பட்டுள்ள விடயங்களை மேலும் வலுப் பொருந்தியதாக மாற்ற வேண்டிய தேவையும் தற்போது மேலோங்கியுள்ளது.

சிறுவர் தினம் போன்று முதியோர் தினமும் கொண்டாடப்படுகின்றது. முதியவர்களை கவனிப்பது என்பது புண்ணியமான செயலாக பௌத்த தர்மத்திலும் கூறப்பட்டுள்ளது. ஆனால் பௌத்த நாடான இலங்கையில் 300 முதியோர் இல்லங்கள் காணப்படுகின்றன.

இவ்வாறான பின்புலத்தில் முதியோர் தொடர்பில் புதிதாக சிந்திக்கவேண்டிய காலகட்டமே தற்போது உருவாகியுள்ளது. இந்நிலையில் மிகவும் பாதுகாப்பான சிறுவர் சமுதாயத்தையும் ஆரோக்கியமான முதியோர் சமுதாயத்தையும் உருவாக்க அனைவரும் ஒன்றிணைவோம் என அவர் மேலும் தெரிவித்தார். (நி-7)

# மாறிவரும் தொழில்நுட்பத்திற்கேற்ப கல்விமுறை மாற்றப்பட வேண்டும்

## இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கம்

(கொழும்பு)

நாட்டில் உள்ள கல்வி முறைமைகளில் பல குறைபாடுகள் இருப்பதாகவும் அதனை சீர்செய்வதற்கான வழிமுறைகள் என்ன என்பதனைக் கண்டறிந்து அதனை இப்போதுள்ள தொழில்நுட்பயுகத்திற்கு ஏற்ப மாற்றி அமைக்க வேண்டும் என இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் கல்வி இராஜாங்க அமைச்சர் சுசில் பிரேம ஜெயந்தவிடம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் உயர்மட்டக் குழுவினர் அண்மையில் அமைச்சர் சுசில் பிரேம ஜெயந்தவை சந்தித்து கலந்துரையாடிய போதே இவ் வேண்டுகோளை விடுத்துள்ளனர்.

மாறிவரும் தொழில்நுட்ப மாற்றங்களுக்கு ஏற்ப மாணவர்களும், ஆசிரியர்களும் பயிற்றுவிக்கப்படவேண்டும் எனவும் அதற்காக வலயம் தோறும் கணனி மூலவள நிலையங்கள் நிறுவப்பட வேண்டும், ஒவ்வொரு ஆசிரியருக்கும் கணனி முறைமூல விசேட பயிற்சி வழங்கப்படுவதுடன் ஒவ்வொருவருக்கும் தனித்தனியான கணனிகள் பெற்றுக்கொள்ள வசதி செய்யப்பட வேண்டும்.

ஒவ்வொரு பாடசாலைகளிலும் ஸ்மாட் (SMART) வகுப் பறைகள் உருவாக்கப்பட வேண்டும். விசேடமாக தமிழ்மொழிமூல பாடசாலைகளுக்கு மொழி மூலமான பயிற்சிகள் வழங்கப் படவேண்டும் என்பதுடன் ஒவ்வொரு கல்வி வலயங்களிலும் தொலைக்கல்வி நிலையங்கள் நிறுவப்பட வேண்டும் எனவும் வலியுறுத்தப்பட்டது.

அதனை ஏற்றுக் கொண்ட அமைச்சர் ஒவ்வொரு மாவட்டத்திலும் கணனி மூலவள நிலையங்கள் சிறப்பாகச் செயற்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என உறுதியளித்தார்.

ஆசிரிய உதவியாளர்களாக நியமனம் பெற்று ஆசிரிய பயிற்சிகளை நிறைவுசெய்த ஆசிரியர்கள் தற்போதும் குறைந்த வேதனத்துடன் கடமையாற்றுவதனை சுட்டிக்காட்டிய தமிழர் ஆசிரியர் சங்க குழுவினர் அவர்களை நிரந்தர ஆசிரிய சேவைக்குள் உள்ளீர்ப்புச் செய்து அவர்களுக்கு அதிகரித்த சம்பளம் வழங்க வேண்டும் எனவும் வேண்டுகோள் விடுத்தனர்.

கொரோனா பாதிப்புக் காரணமாக மாணவர்கள் இழந்த கல்வியை அதே ஆசிரியர்களிடம் பெற்றுக்கொள்ள வசதியாக ஆசிரியர்களின் விருப்பத்திற்கு மாறான ஆசிரிய இடமாற்றங்களையும் அதிபர் இடமாற்றங்களையும் 2021 டிசெம்பர் வரை பிற்போடுமாறும், இவ்வருடம் பொதுப் பரீட்சை எழுதவுள்ள மாணவர்களின் நலன் கருதி இவ்விட மாற்றங்கள் கருத்தில் கொள்ளப்பட வேண்டும் எனவும் வலியுறுத்தப்பட்டது.

அத்தோடு தேவை ஏற்படும் பட்சத்தில் அவர்களுக்கு மீள் நியமனம் வழங்குமாறும் கோரப்பட்டது.

ஆசிரியர்களுக்கான பதவி உயர்வுகள், வேதன அதிகரிப்புகள் நாடு முழுவதும் உரிய காலங்களில் மேற்கொள்வதோடு, நாடு முழுவதும் ஒரே சமயத்தில் செய்யப்பட வேண்டும், ஓய்வுபெறும் ஆசிரியர்கள் எதிர்நோக்கும் இடர்பாடுகள் தொடர்பாக உரிய ஒழுங்கு முறைகள் பின்பற்றப்பட வேண்டும், ஒவ்வொரு பாடசாலைக்கும் தனித்தனியே கல்வி சாரா ஊழியர்கள் நியமிக்கப்பட வேண்டும் எனவும் கேட்டுக் கொண்டனர்.

கல்வி இராஜாங்க அமைச்சருடனான சந்திப்பில் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் சரா. புவனேஸ்வரன், சர்வதேச விவகாரங்களுக்கான சிரேஷ்ட ஆலோசகர் த.மகாசிவம், பெண்கள் விவகார ஆலோசகர் ஈ.ஜே.மகேந்திரா, துணைத் தலைவர் பா.சரஸ்வதி, வடக்கு மாகாணச் செயலாளர் ஜெ. நிஷாகர், மத்திய மாகாணச் செயலாளர் சு.மோகன், மத்திய மாகாண பொருளாளர் அ.பால சிங்கம் ஆகியோர் கலந்து கொண்டனர். (ஜ-4)

# மக்கள் வாக்கெடுப்பு அவசியமற்றது

## 20 ஆவது திருத்தம் தொடர்பில் சிசிர

(கொழும்பு)

அரசியமைப்பின் 20 ஆவது திருத்தம் தொடர்பில் மக்கள் வாக்கெடுப்பினை மேற்கொள்வது அவசியமற்றது. மக்கள் வாக்கெடுப்புக்கு செல்லாத விடயங்களே திருத்தத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

அரசியல் நோக்கங்களை கருத்திற்கொண்டு அரசியலமைப்பின் 20 ஆவது திருத்தத்தை எதிர்க்கும் முயற்சிகளை எதிர்த்தரப்பினர் முன்னெடுத்து வருகிறார்கள்.

அனைத்து சவால்களையும் வெற்றி கொள்ள முடியும் என சுதேச வைத்திய மேம்பாடு, கிராமிய மற்றும் ஆயுர்வேத வைத்தியசாலைகள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் சிசிர ஜயக்கொடி தெரிவித்தார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்,

அரசியலமைப்பின் 20 ஆவது திருத்தம் தொடர்பில் மாறுபட்ட பல கருத்துக்கள் முன்வைக்கப் படுகின்றன. ஜனாதிபதி சர்வாதிகார ஆட்சியை முன்னெடுப்பதாக எதிர்த்தரப்பினர் மாத்திரமே குற்றச்சாட்டுக்களை முன்வைக்கிறார்கள். நாட்டுமக்கள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் ஆட்சியை முழுமையாக ஏற்றுக் கொண்டுள்ளார்கள்.

வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ள அரசியலமைப்பின் 20 ஆவது திருத்தம் தொடர்பில் மக்கள் வாக்கெடுப்பு நடத்த வேண்டிய தேவை ஏதும் கிடையாது. அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட குழுவினர் தயாரித்த முதற்கட்ட சட்டமூல வரைபை சட்டமா அதிபர் முழுமையாக பரிசீலனை செய்தார்.



20ஆவது திருத்தத்தில் பாரதூரமான விடயங்கள் ஏதும் உள்ளடக்கப்படவில்லை. இல்லாத விடயத்தை சுட்டிக்காட்டி எதிர்த்தரப்பினர் அரசியல் இலாபம் தேடிக் கொள்கிறார்கள். வர்த்தமானியில் வெளியிட்டப்பட்டுள்ள 20 ஆவது திருத்தம் அரச நிர்வாகத்தை பலப்படுத்தும் என்பதை நாட்டு மக்கள் தெரிந்து கொண்டுள்ளார்கள்.

பாராளுமன்றில் ஆளும் தரப்பினருக்கு பெரும்பான்மை ஆதரவு உண்டு. 20 ஆவது அரசியலமைப்பு திருத்தம் முழுமையாக நிறைவேற்றப்படும். சுட்டிக்காட்டப்படும் குறைபாடுகள் பாராளுமன்ற குழுவின் ஊடாக திருத்தம் செய்யப்படும் என்பதில் உறுதியாக உள்ளோம் என அவர் மேலும் தெரிவித்தார். (நி-7)

# கிளிநொச்சியில் ஆரம்பமானது விவசாயக் கண்காட்சி





(முறிகண்டி)

கிளிநொச்சி மாவட்டத்தில் வருடந்தோறும் இடம்பெற்று வருகின்ற விவசாய கண்காட்சியானது நேற்று வட்டக்கச்சி விவசாயப் பண்ணையில் ஆரம்பிக்கப்பட்டது.

கடற்றொழில் அமைச்சரும், கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவருமான டக்ளஸ் தேவானந்தா குறித்த கண்காட்சியை சம்பிரதாயபூர்வமாக ஆரம்பித்து வைத்தார். இரண்டு நாட்கள் கொண்ட குறித்த கண்காட்சியின் முதல் நாளான நேற்று விவசாயிகள், மாணவர்கள் பார்வையிட்டனர்.

இக் கண்காட்சியில் விவசாய உற்பத்தி சார்ந்த பல்வேறு விடயங்கள் மற்றும் விவசாய நடவடிக்கைக்கு பயன்படுத்தப்படுகின்ற இயந்திர உபகரணங்கள், கால்நடை வளர்ப்பு போன்றன காட்சிக்கு வைக்கப்பட்டு பார்வையாளர்களுக்கு விளக்கம் அளிக்கப்படுகின்றன. அத்துடன் தன்னிறைவு விவசாய உற்பத்தியில் சிறப்பாக செயற்பட்டவர்களுக்கு சான்றிதழ்களும் வழங்கி வைக்கப்பட்டன. (ஜ-5-100)

# தகவல் வழங்குவோருக்கு பணப்பரிசு



(கொழும்பு)

நாட்டில் செயற்படும் பாதாள உலகக் குழுவினரிடம் துப்பாக்கிகள், வெடிபொருட்கள் உட்பட பாரிய ஆயுதங்கள் உள்ளதாக புலனாய்வுப் பிரிவு உறுதி செய்துள்ளது.

பிரபுக்களை இலக்கு வைத்து நடத்தப்படும் கொலைகள் உட்பட பல்வேறு குற்றச் செயல்கள் மேற்கொள்ளும் நோக்கில் இவ்வாறான ஆயுதங்களைத் தம்வசம் வைத்துள்ளதாகவும், இந்த ஆயுதங்கள், பாதாள உலகக் குழுவினரால் மறைத்து வைக்கப்பட்டுள்ளதாகவும் தகவல் வெளியாகியுள்ளது.

இது தொடர்பில் தகவல் வழங்குபவர்களுக்கு மிகப்பெரிய அளவிலான பணப்பரிசுகள் வழங்கப்படவுள்ளதாக பொலிஸ் ஊடகப்பிரிவு அறிவித்துள்ளது. (ஜ-4)

# பண்டாரநாயக்க விமான நிலையத்தின் நிர்மாணப் பணிகள் 3 வருடத்தில் நிறைவுபெறும்

(கொழும்பு)

பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தின் இரண்டாவது முனையத்தின் நிர்மாணப் பணிகளை 2023 ஆம் ஆண்டுக்கு முன்னர் நிறைவு செய்யுமாறு ஜனாதிபதி ராஜபக்ஷ அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

விமான சேவைகள் ஏற்று மதி வலய அபிவிருத்தி இராஜாங்க அமைச்சின் எதிர்காலத் திட்டங்கள் குறித்து நேற்று முன்தினம் புதன்கிழமை ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே இதனை தெரிவித்தார். விமான நிலைய பணிகள் மட்டுப்படுத்தப்பட்டிருக்கும் சூழலைப் பயன்படுத்தி இரவு-பகலாக நிர்மாணப் பணிகளை மேற்கொண்டு விரைவாக நிறைவு செய்யுமாறு ஜனாதிபதி பணிப்புரை விடுத்தார். (நி)

# கஞ்சா பீடியுடன் ஒருவர் கைது

(தருமபுரம்)

கிளிநொச்சி ஜெயபுரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் நேற்று முன்தினம் சந்தேகத்திற்கிடமான முறையில் நடமாடிய ஒருவரை ஜெயபுரம் பொலிஸார் சோதனையிட்டபோது அவரிடமிருந்து 4 கஞ்சா பீடிகள் கைப்பற்றப்பட்டதுடன் அவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்டவரை கிளிநொச்சி மாவட்ட நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக ஜெயபுரம் பொலிஸார் தெரிவித்தனர் (5-4-316)

# ஈரானுடனான வர்த்தக உறவுகளை வலுப்படுத்த இலங்கை தீர்மானம்

(கொழும்பு)

வேளாண்மை தொடர்பான உபகரணங்களுக்கு ஈடாக ஈரானுடன் வர்த்தகத்தில் ஈடுபட அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக வர்த்தக அமைச்சு அறிவித்துள்ளது.

வர்த்தக அமைச்சர் பந்துல குணவர்தனவுக்கும் ஈரானிய தூதுவருக்கும் இடையே நடந்த கலந்துரையாடலைத் தொடர்ந்து இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

இதன்போது ஈரானில் இலங்கை தேயிலைக்கு உள்ள கேள்வி மற்றும் இலங்கையில் உற்பத்தி செய்யப்படாத விவசாய உபகரணங்களை பரிமாறிக்கொள்வதற்கான சாத்தியக்கூறுகள் குறித்து விவாதிக்கப்பட்டது.



ஈரானிய அரசாங்கம் இங்கு தொழிற் பயிற்சி நிறுவனங்களை நிறுவ உதவவதோடு, நிறுவனங்களிலிருந்து கிடைக்கும் வருமானத்தையும் மகாபொல உதவித் தொகை நிதியில் வைப்பிலிடவும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

இந்நிலையில் சம்பர் ஒப் கொமர்ஸ், தேயிலை வாரியம் மற்றும் ஈரானுக்கு இடையே ஒரு ஒப்பந்தமும் கையெழுத்திடப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஜ-4)

# பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு இழப்பீடு வழங்க நடவடிக்கை

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு - துணுக்காய் பகுதி விவசாயநிலங்களை காட்டுயானைகள் சேதப்படுத்துவதாக கமநலசேவைத்திணைக்கள அபிவிருத்தி உத்தியோகத்தர் த.பிரியதர்சினி தெரிவித்துள்ளார்.

அவ்வாறு கடந்த காலபோகத்தில் காட்டுயானைகளால் பாதிப்பினை பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்குரிய இழப்பீடுகளை வழங்கியுள்ளதாகவும், கடந்த சிறுபோகத்தில் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு இழப்பீடுகளை வழங்குவதற்கு உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்ற துணுக்காய் பிரதேச அபிவிருத்தி ஒருங்கிணைப்புக்குழுக்கூட்டத்தில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மேலும் இவ்வருட சிறுபோகத்தில் நான்கு விவசாயிகள் காட்டுயானைகளினால் ஏற்பட்ட தேசம் தொடர்பில் தம்முடைய மூன்றரை ஏக்கர் விவசாய நிலங்கள் யானைகளால் அழிக்கப்பட்டுள்ளதாக எம்மிடம் முறைப்பாடு செய்துள்ளனர்.

குறித்த விபரங்களை கமநல மற்றும் கமத்தொழில் காப்புறுதி சபைக்கு அனுப்பி, அவர்களுக்குரிய இழப்பீடு களைப் பெற்றுக்கொடுப்பதற்கான நடவடிக்கையினை மேற் கொண்டிருக்கின்றோம் எனவும் தெரிவித்தார். (5-4)

# குற்றச்செயல்களில் ஈடுபடும் பிரதான குற்றவாளிகள் வெளிநாடுகளில்



(கொழும்பு)

குற்றச் செயல்களில் ஈடுபட்டு வரும் பிரதான உறுப்பினர்கள் 25 இற்கும் மேற்பட்டவர்கள் தற்போது வெளிநாடுகளில் இருப்பதாக மேல் மாகாணத்திற்கு பொறுப்பான சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னகோன் குற்றஞ்சாட்டினார்.

அதில் 19 பேருக்கு சர்வதேச சிவப்பு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடக நிகழ்ச்சியில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (ஜ-4)



முல்லைத்தீவு மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் நேற்றையதினம் சிறுவர் தினத்தை துக்க தினமாக அனுசரித்து கறுப்புக் கொடிகளுடன் கவனயீர்ப்புப் போராட்டம் ஒன்றில் ஈடுபட்டனர். முல்லைத்தீவு மாங்குளம் வீதியில் அமைந்துள்ள வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களின் சங்கத்திற்கு முன்பாக நேற்று முற்பகல் 10 மணி முதல் சுமார் ஒரு மணித்தியாலம் இந்தப் போராட்டம் இடம்பெற்றது. (படங்கள்: தவசீலன்)

# நாட்டை குணமாக்கும் உங்களை வெற்றியாளராக்கும் சசிரி




## அபிவிருத்தி லொத்தர் சபையால் அறிமுகப்படுத்தப்படும் இலங்கையின் முதலாவது டிஜிட்டல் லொத்தர்

- புதன் மற்றும் சனிக்கிழமைகளில் சீட்டிழுக்கப்படும் சீட்டிழுப்பில் இலட்சாதிபதிகள் மற்றும் மேலும் பணப் பரிசுகள்.
- வருமானம் ஜனாதிபதி நிதியம் ஊடாக கொவிட்-19 சுகாதார மற்றும் சமூக பாதுகாப்பு நிதியத்திற்கு.
- உங்கள் கையடக்க தொலைபேசி ஊடாக இலகுவாக கொள்வனவு செய்யலாம்.
- www.dlb.lk/apps இணையத்தளம் ஊடாக Sweep App ஐ இன்றே தரவிறக்கம் (டவுன்லோர்ட்) செய்யுங்கள்.
- சசிரி டிக்கட்டுகளை லொத்தர் விற்பனை முகவர்களிடமும் கொள்வனவு செய்யலாம்.

**சசிரி**

**SASIRI**

நாட்டை வெற்றிபெறச் செய்யும் அதிர்ஷ்டம்

1. Sweep App ஐ தரவிறக்கம் (டவுன்லோர்ட்) செய்யுங்கள்.
2. App மீது கிளிக் செய்து தேவையான விபரங்களுடன் பதிவு செய்யுங்கள்.
3. சசிரி லொத்தரை வாங்கி பயனடையுங்கள்.

வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்
நிதி அமைச்சு

# எங்கள் குழந்தைகள் எங்கே? கோட்டா அரசே பதில் சொல்

# வடக்கு-கிழக்கில் சிறுவர்களின் நிலை குறித்து சர்வதேசம் கவனமெடுக்காதது ஏன்?



## போராட்டத்தில் கேள்வி




(யாழ்ப்பாணம்)

சர்வதேச சிறுவர் தினத்தை முன்னிட்டு, காணாமல் ஆக்கப்பட்ட மற்றும் சிறுவர்களின் உரிமைகளை பாதுகாக்க கோரி வடகிழக்கில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் உறவுகளின் அமைப்பினரால் நேற்று முற்பகல் 10.30 மணியளவில் யாழ்ப்பாணம் மத்திய பேருந்து தரிப்பிடத்தில் இருந்து போராட்டம் ஆரம்பமானது.

ஆர்ப்பாட்டத்தின் போது, இராணுவம் மற்றும் துணை இராணுவக் குழுக்களினால் கடத்தப்பட்ட, காணாமல் ஆக்கப்பட்ட சிறுவர்கள் எங்கே, கோட்டா அரசே பதில் சொல், எங்கள் குழந்தைகள் எங்கே, இதற்குப் பதில் கூற யாரும் இல்லையா? எங்கே எங்கே உறவுகள் எங்கே?போன்ற வாசகங்கள் பொறிக்கப்பட்ட சுலோக அட்டைகளை கைகளில் ஏந்தியவாறு கோசங்களை எழுப்பி யாழ்.வைத்தியசாலை வீதி வழியாக மூன்றாம் குறுக்கு வீதியில் உள்ள இலங்கை மனித உரிமைகள் ஆணைக் குழு வரை பேரணியாக சென்றனர்.

அங்கு கையளிப்பதற்கான மகஜரில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

சிறுவர்களுக்கு எதிராக இலங்கை அரசால் நடத்தப்பட்ட துஷ்பிரயோர்கங்கள், சித்திரவதைகள், படுகொலைகள் என்பவற்றுக்கான நீதியைப் பெறும் வகையில் சர்வதேச சமூகம் துணை நிற்க வேண்டும் என ஐக்கிய நாடுகளின் சிறுவர் நிதியத்திற்கு அதன் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதியூடாக அறிக்கையை சமர்ப்பிக்கவுள்ளோம்."

வடகிழக்கு சிறுவர்களின் நிலை குறித்து எவ்விதமான கவனங்களையும் சர்வதேச சமூகமும் எடுத்திருக்கவில்லை. சிறுவர்களின் குடும்பங்கள் மிக மோசமான வறுமை நிலையில் இருக்கின்றன.

2009 ஆம் ஆண்டு இறுதி யுத்தத்தின் போது, பெற்றோர் பாதுகாவலருடன் குடும்பமாக இலங்கை இராணுவத்தினரிடம் ஒப்படைக்கப்பட்ட சிறுவர்களுக்கு என்ன நடந்தது என்பது இன்று வரை கண்டறியப்படவில்லை.

வடகிழக்கு சிறுவர்களின் உரிமைகளைப் பேணும் வகையில் சிறுவர்களுக்கு எதிராக இலங்கை அரசால், நடத்தப்பட்ட துஷ்பிரயோகங்கள், சித்திரவதைகள், படுகொலைகள் என்பவற்றுக்கான நீதியைப் பெறும் வகையில் சர்வதேச சமூகம் துணை நிற்க வேண்டும் என வலியுறுத்தினர்.

இந்த மகஜரை, இலங்கை மனித உரிமைகள் ஆணைக் குழு மற்றும் யுனிசெப் வதிவிடப் பிரதிநிதிகளுக்கும் தொலை நகல் மற்றும் மின்னஞ்சல் வழியாக அனுப்பி வைக்கவுள்ளதாகவும் குறிப்பிட்டனர். (5-4-101)

## விண்ணப்பங்கள் கோரல்

(யாழ்ப்பாணம்)

தேசிய பயிலுநர் கைத்தொழிற் பயிற்சி அதிகார சபையின் கீழ் கணனி வன்பொருள் தொடர்பான **(Computer Hardware Technician - NVQ Level 3)** இற்கான ஒரு வருடகால இலவசப் பயிற்சி நெறிக்கு யாழ்ப்பாணம் பயிற்சி நிலையத்திற்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இதற்கான கல்வித் தகைமைகளாக,

க.பொ.த.(சா/த) கற்றிருத்தல் வேண்டும். அத்துடன் விண்ணப்பதாரி விண்ணப்ப முடிவுத் திகதியன்று 25 வயதிற்கு உட்பட்டவராகவும் இருத்தல் வேண்டும்.

தகுதி உடையவர்கள் சுய விபரக்கோவையை சுயமாகத் தயாரித்து மாவட்ட முகாமையாளர், தேசிய பயிலுநர் கைத் தொழிற் பயிற்சி அதிகார சபை, இல. 44, சோமசுந்தரம் அவனியூ, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு 23.10.2020 இற்கு முன்னர் அனுப்பி வைக்குமாறும் அத்துடன் காகித உறையின் இடது பக்க மேல்மூலையில் கணனி வன்பொருள் கற்கை நெறிக்கான விண்ணப்பம் என குறிப்பிடுமாறும் மாவட்ட முகாமையாளர் ஞா.தே.இரத்தினகுமார் அறிவித்துள்ளார். (5)

## விற்பனை நிலைய திறப்பு விழா

(குருநகர்)

குருநகர் கடலுணவு விற்பனை நிலைய புதிய கட்டட திறப்பு விழா இன்று 2 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் இடம்பெறும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, சிறப்பு விருந்தினராக யாழ்.அரச அதிபர் க.மகேசன், கௌரவ விருந்தினராக யாழ்.பிரதேச செயலாளர் சா.சுதர்சன் ஆகியோர் கலந்து கொள்வர்.(5-106)

## மீன் சந்தைக்கு வெளியே தராசு வைக்கத்தீர்மானம்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நகரசபையின் மீன் சந்தைக்கு வெளியே தராசு ஒன்றினை பொதுமக்களின் பயன்பாட்டிற்கு வைப்பதற்கு சாவகச்சேரி நகரசபை தீர்மானித்துள்ளது.

மீன் சந்தையில் வியாபாரிகள் சிலர் நிறையினைக் குறைத்து மீன் விற்பனை யில் ஈடுபட்டு வருவதாக பொது மக்கள் சிலர் நகரசபை உறுப்பினர்களுக்குச் சுட்டிக்காட்டியதனை அடுத்து நகரசபை உறுப்பினர்கள் மீன் சந்தைக்கு வெளியே தராசு ஒன்றினை வைப்பதற்கு தீர்மானித்துள்ளனர்.

சந்தையில் மீன் கொள்வனவு செய்யும் பொதுமக்கள் நிறை குறித்து சந்தேகம் இருப்பின் குறித்த தராசில் நிறையை அளவிட முடியும்.

எனவே பொதுமக்களின் நலன் கருதி நகரசபையினர் இத் தீர்மானத்தை எடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.(5-4-30)




## நாள் மாற்றம்

(யாழ்ப்பாணம்)

வலி.கிழக்கு கோப்பாய் பிரதேச செயலர் பிரிவுச் சங்க கோப்பாய் பகிரங்க சேவை ஓய்வூதியர்களின் நம்பிக்கை நிதிய செயற்பாடுகள் புதன்கிழமைகளில் நடைபெற்று வந்தன.

எனினும் எதிர்வரும் வாரம் முதல் திங்கட்கிழமைகளில் வழமைபோன்று நடைபெறும் எனவும் திங்கட்கிழமை விடுமுறை நாளாயின் மறுநர்ள் செவ்வாய்க்கிழமை நடைபெறும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (5)




யாழ்.பல்கலைக்கழக கிறிஸ்தவ நாகரிகத்துறையின் ஏற்பாட்டில் அருட் தந்தை சா.ம. செல்வரட்ணம் (அ.ம.தி.) அடிகளாரின் "உலகளாவிய ஆன்மீகம்" என்ற மையப் பொருளில் விரிவுரை அண்மையில் யாழ்.பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெற்றது.

## கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

இலங்கை முதலீட்டு ஊக்குவிப்புச் சபையின் முதலீட்டாளர்களை ஊக்குவிக்கும் கருத்தரங்கு இன்று 2 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 3 மணிக்கு இல. 165 மானிப்பாய் வீதியில் அமைந்துள்ள யாழ்.வணிகர் கழக பணிமனையில் நடைபெறும். முதலீட்டாளர்களையும் ஆர்வமுள்ளவர்களையும் கருத்தரங்கில் கலந்து கொள்ளுமாறு யாழ்.வணிகர் கழக செயலாளர் ச.சிவலோகேசன் அறிவித்துள்ளார். (5-4-18)

# வலம்புரி சங்குகளுடன் நால்வர் கைதாகினர்



(கொழும்பு)

2 வலம்புரி சங்குகளை 60 மில்லியன் ரூபாவிற்கு விற்பனை செய்ய முயற்சித்த நால்வர் காலி - இமதுவ பகுதியில் கைது செய்யப்பட்டனர்.

களுத்துறை பொலிஸ் விசேட அதிரடிப்படையினரும் இமதுவ பொலிஸாரும் இணைந்து மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போது குறித்த சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டனர்.

நுவரெலியா, ஹற்றன் பகுதிகளைச் சேர்ந்த இருவர், பண்டாரகம பகுதியை சேர்ந்த ஒருவருடன் இணைந்து வலம்புரி சங்குகளை விற்பனை செய்ய முயற்சித்துள்ளனர்.

இந்த வலம்புரி சங்குகளைக் கொள்வனவு செய்ய சென்றவரும் கைது செய்யப்பட்டார்.

சந்தேக நபர்களை காலி பிரதம நீதவான் முன்னிலையில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டது.

கைப்பற்றப்பட்ட வலம்புரி சங்குகள் இரண்டையும் பரிசோதனைக்காக நாரா நிறுவனத்திடம் ஒப்படைக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டது. (ஜ-4)

# கோப் குழுவின் செயற்பாடுகள் ஆரம்பம்

(கொழும்பு)

பாராளுமன்றத்தின் கோப் எனப்படும் அரச பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுவின் (கோப்) செயற்பாடுகள் அடுத்த வாரம் முதல் ஆரம்பமாகவுள்ளன.

பாராளுமன்ற தொடர்பாடல் பிரிவு வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதன்படி, எதிர்வரும் 6 ஆம் திகதி முதல் கோப் குழுவின் செயற்பாடுகள் ஆரம்பிக்கப் படவுள்ளதாக அதன் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான பேராசிரியர் சரித ஹேரத் தெரிவித்துள்ளார்.

அத்துடன், எதிர்வரும் 6 ஆம் திகதி முதல் ஆரம்பமாகவுள்ள கோப் குழுவின் செயற்பாடுகள், எதிர்வரும் 23 ஆம் திகதி வரையிலான காலப்பகுதிக்குள் 6 நாட்கள் கூடும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ஜ-4)

# புகையிரத பாதைகளின் இருமருங்கிலும் வசிப்போருக்கு நிரந்தர வீடுகள்

(கொழும்பு)

புகையிரதப் பாதைகளின் இரு மருங்கிலும் சட்டவிரோதமாக வசிப்போருக்கு நிரந்தர வீடுகளை பெற்றுக்கொடுக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

அதன் முதற்கட்டமாக களனிவெலி புகையிரதப் பாதையின் இரு மருங்கிலும் உள்ள சட்டவிரோத குடியிருப்புகளை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய, மருதானை தொடக்கம் பாதுக்க வரை வசிக்கும் ஆயிரத்து 630 குடும்பங்களை வெளியேற்ற தீர்மானிக்கப்பட்டுள்ளதாக கொழும்பு நெரிசல்மிகு புகையிரத செயற்றிட்டத்தின் பணிப்பாளர் பாலித சமரசிங்க குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, களனி ஆற்றின் இருபுறமும் சுமார் 4 ஆயிரம் தொழிற்சாலைகள் அனுமதி பெறாமல் இயங்குவதாகத் தெரியவந்துள்ளது.

சுற்றுச்சூழல் அமைச்சர் மகிந்த அமரவீர உட்பட அமைச்சகத்தின் அனைத்து சுற்றுச்சூழல் அமைப்புகளின் பிரதிநிதிகளுக்கும் இடையே இடம்பெற்ற சிறப்புக் கலந்துரையாடலின்போது இவ்விடயங்கள் வெளிவந்துள்ளதாக சுற்றுச்சூழல் அமைச்சகம் தெரிவித்துள்ளது. (ஜ-4)

# பெறுகை அறிவித்தல்
# பச்சிலைப்பள்ளி பிரதேச சபை,பளை
# சபை நிதி - 2020

1. சபை நிதியின் ஒரு பகுதி கீழ்க்காட்டப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்ட வீதி விளக்குகளை கொள்வனவு செய்வதற்கான கொடுப்பனவுக்கென பயன்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

2. தவிசாளர், உள்ளூராட்சி மன்ற பெறுகைக் குழு, பச்சிலைப்பள்ளி பிரதேச சபை, பளை தகுதிவாய்ந்த வழங்குநர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகளை கீழ்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட வீதி மின் விளக்குகளை கொள்வனவு செய்வதற்கான விலைக் கேள்விகளைக் கோருகின்றார்.

3. தேசிய போட்டி விலைக்கேள்வி கோரல் நடைமுறைக்கு அமைவாகவே கேள்வி கோரப்படுகின்றது.

4. கேள்வி பெறத் தகுதியுடையவராவதற்கு வெற்றி பெறும் கேள்விதாரர் கறுப்புப் பட்டியலில் **(Black List)** சேர்த்துக்கொள்ளப்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.

5. அக்கறை கொண்டுள்ள தகைமையுடைய விலைக் கேள்வியாளர்கள் பச்சிலைப்பள்ளி பிரதேச சபை, பளை (தொலைபேசி 021-205-0037, தொலைநகல் 021-205-0036 இல் இருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம். அத்துடன் அம் முகவரியில் மு.ப 9.00 மணியிலிருந்து பிற்பகல் 16.00 மணிவரை அலுவலக நாட்களில் விலைக் கேள்வி ஆவணங்களைப் பரிசீலனை செய்யலாம்.

6. அக்கறை கொண்டுள்ள விலைக்கேள்வியாளர் ஆங்கில மொழியிலான விலைக் கேள்வி ஆவணங்களின் பூரணமான தொகுதி ஒன்றை தவிசாளர், பச்சிலைப்பள்ளி பிரதேச சபை, பளை என்னும் முகவரியில் 02.10.2020 ஆம் திகதியிலிருந்து 16.10.2020 ஆம் திகதி வரை காலை 9.00 மணியிலிருந்து பிற்பகல் 16.00 மணிவரையும், மீளளிக்கப்படாத கட்டணமாக ஒவ்வொரு கேள்வி ஆவணத்திற்கும் ரூபா 2000.00 (வரி நீங்கலாக) பணமாகச் செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம்.

7. விலைக்கேள்விகள் இரு பிரதிகளில் தயாரித்து தவிசாளர், உள்ளூராட்சி மன்ற பெறுகைக்குழு, பச்சிலைப்பள்ளி பிரதேச சபை, பளை எனும் முகவரிக்கு 19.10.2020 ஆம் திகதி பிற்பகல் 14.00 மணிக்கு முன்பதாக கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்கப்படல் வேண்டும். அல்லது அலுவலகத்தில் வைக்கப்பட்டிருக்கும் கேள்விப் பெட்டியில் இடப்படல் வேண்டும். பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது கேள்வி நேரம் முடிவடைந்த உடனேயே வருகை தரும் கேள்விதாரர் அல்லது அவரால் எழுத்துமூலம் அதிகாரம் வழங்கப்பட்ட பிரதிநிதி முன்னிலையில் திறக்கப்படும்.

8. சமர்ப்பிக்கப்பட்ட கேள்விகளை நிராகரிக்கவோ அல்லது மீள்கேள்வி கோரவோ பெறுகைக் குழுத் தலைவருக்கு அதிகாரம் உண்டு.

9. கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டவாறான கேள்விப் பிணைப் பொறுப்பு இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

| கேள்வி அடையாள இலக்கம் | வேலை விபரம் | வீதி விளக்குகளின் எண்ணிக்கை | வேண்டப்படும் கேள்விப் பிணை | |
|---|---|---|---|---|
| | | | பிணைவைப்பு (ரூபா) | செல்லுபடியாகும் காலம் |
| NP/14/45(3)/PL/03/ C.F/12/2020 | Supplying of 50W LED Street Light at Pachchillaipalli Predeshiya Sabah | 250 Nos ±10% | 20,000.00 | 18.01.2021 |

(C-446)

**சுப்பிரமணியம் சுரேன்,**
**தவிசாளர்,**
**உள்ளூராட்சிமன்ற பெறுகைக் குழு, பளை.**

**பச்சிலைப்பள்ளி**
**பிரதேச சபை**

# சூதாட்டத்தில் ஈடுபட்ட ஒன்பது பேர் கைது

(கொழும்பு)

நவகத்தேகம பகுதியில் சூதாட்டத்தில் ஈடுபட்ட பிரதேச சபை உறுப்பினர் உட்பட 9 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நவகத்தேகம பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற தகவலுக்கமைய முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையின் போது குறித்த சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களிடம் இருந்து 63 ஆயிரம் ரூபா பணம் கைப்பற்றப்பட்டுள்ளது.

இந்த நிலையில் இச் சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ஜ-4)


# கல்யாணமாலை
## சர்வதேச திருமண சேவை

**இவர்களுக்கு மணமகள் தேவை**

பிறப்பு: 1990 இந்து
நட்சத்திரம்: ஆயிலியம் 3
கி.பா: செவ் 7 இல்
தகைமை/தொழில்: MBBS, Doctor
எதிர்பார்ப்பு: வைத்தியர், பொறியியலாளர், கணக்காளர், வங்கி முகாமையாளர் போன்ற உத்தியோகமுள்ளவர்கள்
தொ.இ: B/11242

பிறப்பு: 1993 இந்து
நட்சத்திரம்: பரணி
கி.பா: செவ் 9 இல்
தகைமை/தொழில்: பட்டதாரி அபிவிருத்தி உத்தியோகத்தர்
எதிர்பார்ப்பு: படித்த பெண்
தொ.இ: B/11243

பிறப்பு: 1990 இந்து
நட்சத்திரம்: பூசம் 2
கி.பா: செவ் 12 இல் உயரம்: 5'6"
தகைமை/தொழில்: க.பொ.த.சா/த. மின்சார சபையில் ஒப்பந்த வேலை
எதிர்பார்ப்பு: சாதாரண படித்த பெண்
தொ.இ: B/11244

பிறப்பு: 1982 இந்து
நட்சத்திரம்: பரணி
கி.பா: செவ் 10 இல்
உயரம்: 5'9"
தகைமை/தொழில்: க.பொ.த.உ/த. வியாபாரம்
எதிர்பார்ப்பு: சாதாரண படித்த பெண்
தொ.இ: B/11245

**இவர்களுக்கு மணமகன் தேவை**

பிறப்பு: 1974 இந்து
நட்சத்திரம்: திருவாதிரை 2
கி.பா: செவ் 8 இல்
உயரம்: 5'4"
தகைமை/தொழில்: க.பொ.த.சா/த.
எதிர்பார்ப்பு: பிள்ளைகளற்ற விவாகரத்து மணமகனும் ஏற்கப்படும்
தொ.இ: G/019

பிறப்பு: 1985 இந்து
நட்சத்திரம்: உத்திரட்டாதி 1
கி.பா: செவ் 8 இல் உயரம்: 5'3"
தகைமை/தொழில்: MBBS, Doctor in Norway
எதிர்பார்ப்பு: வைத்தியர், பொறியியலாளர், கணக்காளர் போன்றோர்
தொ.இ: G/021

பிறப்பு: 1981 இந்து
நட்சத்திரம்: மிருகசீரிடம் 1
கி.பா: 21 செவ் 5 இல்
உயரம்: 5'5"
தகைமை/தொழில்: க.பொ.த.உ/த.
எதிர்பார்ப்பு: சாதாரண உத்தியோகத்தர்
தொ.இ: G/062

பிறப்பு: 1988 இந்து
நட்சத்திரம்: கேட்டை 3
கி.பா: செவ் 7 இல் உயரம்: 5'1"
தகைமை/தொழில்: Software Engineer
எதிர்பார்ப்பு: ஆசிரியர், வைத்தியர் தவிர்ந்த அரச உத்தியோகத்தர்
தொ.இ: G/080

**கல்யாணமாலை**
**இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்**
**தொடர்பு:- 021 720 1005, 021 221 5434**
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.



இந்து மக்கள் எதிர்நோக்குகின்ற முக்கிய பிரச்சினைகளை உள்ளடக்கிய ஆறு அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து அனைத்து இந்து அமைப்புக்களின் ஏற்பாட்டில் முன்னெடுக்கப்பட்ட மாபெரும் ஊர்வலம் வவுனியாவில் நேற்று நடைபெற்றது. ஊர்வலத்தில் நல்லை ஆதீன குரு முதல்வர், அகில இலங்கை இந்துசாசனத்தின் தலைவர் ஐயப்பதாசக்குருக்குள், வேலன் சுவாமிகள் முத்து ஜெயந்தி நாதக்குருக்கள், பிரபாகரக்குருக்கள்; தமிழருவி சிவகுமாரன் உட்பட நூற்றுக்கணக்கான இந்துமதக் குருமார், ஆலயத்தொண்டர்கள், வர்த்தகர்கள், பொது அமைப்பினர் என பலர் கலந்துகொண்டனர். (படங்கள்-சதீஸ்)

## துணுக்காயில் மணல், கிரவல் அகழ்விற்கு அனுமதி வழங்கப்படவில்லை-லதுமீரா

(கண்டாவளை)

முல்லைத்தீவு துணுக்காய் பிரதேசத்தினால் மணல் மற்றும் கிரவல் அகழ்வுகளுக்கான எந்த வித அனுமதிகளும் இது வரை வழங்கப்படவில்லை என துணுக்காய் பிரதேச செயலாளர் திருமதி.ச.லது மீரா தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு துணுக்காய் பிரதேச செயலர் பிரிவின் கீழ் உள்ள புத்துவெட்டுவான், பழைய முறிகண்டி ஆகிய பகுதிகளில் அளவுக்கு அதிகமான கிரவல் மற்றும் மண் அகழ்வுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

இவ்வாறு அகழ்வு செய்யப்படும் கிரவல் பிரதான வீதிகளினூடாகவும் ஏனைய குடியிருப்பு வீதிகளினூடாகவும் கனரக வாகனங்களில் கொண்டு செல்லப்படும் போது வீதிகள் மிக மோசமாக சேதமடைந்து வருகின்றது எனவும் இவற்றை தடுக்குமாறும் மேற்படி கிராம மட்ட அமைப்புகளால் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இதேபோல் கல்விளான் பாலியாறு ஆகிய பகுதிகளிலும் தொடர்ச்சியாக இடம்பெறும் மணல் அகழ்வுகளால் பல் வேறு பாதிப்புக்கள் ஏற்படுவதாகவும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

எனவே தமது பகுதிகளில் மேற்கொள்ளப்படுகின்ற மணல் மற்றும் கிரவல் அகழ்வுகளை தடுத்து நிறுத்துமாறும் கடந்த செவ்வாய்க்கிழமை துணுக்காய் பிரதேச செயலகத்தில் நடைபெற்ற பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தின் போது கிராம மட்ட அமைப்புக்களின் பிரதிநிதிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இவற்றுக்கான அனுமதிகள் எதுவும் பிரதேச செயலகத்தினால் இது வரை வழங்கப்படவில்லை என்றும் துணுக்காய் பிரதேச செயலர் தெரிவித்தார்.

குறித்த பகுதிகளில் தொடர்ந்தும் மணல், கிரவல் கொள்ளை நடைபெறுவதாகவும் இதனைக் கட்டுப்படுத்த ஒருங்கிணைப்புக் குழுவின் இணைத் தலைவர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், அரசியல் வாதிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக் கோரி க்கை விடுத்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (5-4-315)

## 9 முதிரைக் குற்றிகளுடன் ஒருவர் கைது



(வவுனியா)

வவுனியா ஓமந்தை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பால மோட்டை பகுதியில் 9 முதிரை மரக்குற்றிகளுடன் ஒருவர் பொலிஸாரால் கைது செய் யப்பட்டுள்ளார்.

பாலமோட்டை காட்டுப்பகுதியில் நேற்று முன்தினம் சட்ட விரோத செயற்பாடுகள் நடைபெறுவதாக ஓமந்தை பொலிஸாருக்குக் கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் குற்றத்தடுப்பு பிரிவு பொறுப்பதிகாரி சுகுமார் சுகந் தலைமையிலான பொலிஸார் காட்டுப் பகுதியில் விசேட சோதனை நடவடிக்கை மேற் கொண்டனர்.

இதன்போது பாலமோட்டை காட்டுப்பகுதியில் முதிரை மரம் வெட்டப்பட்டு துண்டாடப்பட்ட நிலையில் கைப்பற்றியதுடன் சந்தேகநபர் ஒருவரையும் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்டவரை விசாரணையின் பின்னர் நீதி மன்றில் ஆஜர்படுத்துவதற்கான நடவடிக்கைகளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (5-4-250)

## வைத்தியசாலை ஆளணி வளங்களை நிவர்த்தி செய்து தருமாறு

### பொது அமைப்புகள் கோரிக்கை

(கண்டாவளை)

முல்லைத்தீவு ஒட்டுசுட்டான் பிரதேச வைத்தியசாலையில் காணப்படுகின்ற வைத்தியர் உள்ளிட்ட ஆளணிப் பற்றாக்குறைகளை நிவர்த்தி செய்து தருமாறு ஒட்டுசுட்டான் பிரதேச பொது அமைப்புக்கள் கோரிக்கை விடுத்துள்ளன.

முல்லைத்தீவு மாவட்டத்தின் ஒட்டுசுட்டான் பிரதேச வைத்தியசாலையானது ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் பிரிவின் கீழ் உள்ள பத்தாயிரத்திற்கும் அதிக குடும்பங்களுக்கும் அதேபோல் வவுனியா வடக்குப் பிரதேச செயலர் பிரிவின் கீழான எல்லையோரக் கிராமங்களிலும் உள்ள மக்களுக்குமான மருத்துவ தேவையை நிறைவு செய்ய வேண்டிய ஒரு வைத் தியசாலையாகக் காணப்படு கின்றது.

இங்கு போதிய வைத்தியர்கள் இன்மை மற்றும் பௌதீக வளப்பற்றாக் குறைகள் காரணமாக ஒட்டுசுட்டான் வைத்தியசாலைக்கு சிகிச்சைக்காக செல்லும் நோயாளர்கள் மேலதிக மாஞ்சோலை வைத்தியசாலைக்கு செல்லவேண்டிய நிலையுள்ளது.

இதனால் நோயாளர்கள் பெரும் சிரமங்களையும் எதிர் கொள்வதாகவும் சுட்டிக் காட்டியுள்ள பொது அமைப்புக்கள் மேற்படி வைத்திய சாலையின் தேவைகளைப் பூர்த்தி செய்து தருமாறு கோரிக்கை விடுத்துள்ளன.

கடந்த செவ்வாய்க்கிழமை ஒட்டுசுட்டான் பிரதேச செயலகத்தில் நடைபெற்ற பிரதேச ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தின் போதே குறித்த கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

இதன்போது பிராந்திய சுகாதார வைத்திய அதிகாரி சார்பாக பதிலளித்த திட்டமிடல் வைத்திய அதிகாரி ப.சத்தியரூபன், ஒட்டு சுட்டான் வைத்தியசாலையில் இரண்டு வைத்தியர்கள் கடமையாற்ற வேண்டிய நிலையில் ஒரு வைத்தியர் மாத்திரம் கடமையாற்றுவதாகவும் நான்கு தாதியர்கள் பணியாற்றி வருகின்றபோதும் அவர்களுக்கான தங்குமிட வசதிகளில் பற்றாக்குறை இருப்பதாகவும் தெரிவித்தார். (5-4-315)

## மின்னுற்பத்தி செயற்பாடுகளை ஆராய அமைச்சர் குழு மன்னாருக்கு விஜயம்



(மன்னார்)

ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதி உதவியில் இலங்கை மின்சார சபையினால் மன்னார் தலைமன்னார் பிரதான வீதி, நடுக்குடா பகுதியில் மேற்கொள்ளப்பட்டு வரும் காற்றாலை மின் உற்பத்தி திட்ட செயற்பாடுகள் நடைபெற்று வருகின்றன.

இது தொடர்பான விடயங்களை ஆராய்வதற்கு மின்வலு அமைச்சர் டலஸ் அழகப்பெரும மற்றும் காற்று சூரிய சக்திவலு இராஜாங்க அமைச்சர் துமிந்த திசநாயக்க தலைமையிலான விசேட குழுவினர் நேற்று முன்தினம் புதன் கிழமை மன்னார் நடுக்குடா பகுதிக்கு விஜயம் மேற்கொண்டனர். சுமார் 30 காற்றாலைகளை கொண்டு அமைக்கப்பட்ட 103.5 மெகா வோள்ட் மின் உற்பத்தி திறனைக் கொண்ட குறித்த திட்டத்தின் செயற்பாடுகள் தொட ர்பாக அமைச்சர் குழு ஆராய்ந்ததுடன் நேரடியாக காற்றாலை மின் உற்பத்தி இடம் பெறும் பகுதி மற்றும் காற்றாலை மின் பிறப்பாக்கி செயற்பாடுகள் இடம் பெறும் பகுதிகளுக்கும் விஜயம் மேற்கொண்டனர்.

குறித்த குழுவில் அமைச்சர்கள் உட்பட இலங்கை மின்சார சபையின் மேலதிக முகாமையாளர், திட்டப்பணிப்பாளர், திட்ட முகாமையாளர் மற்றும் பொறியியலாளர்களும் கலந்து கொண்டனர். (5-4-285)

# இராசிபலன்

02.10.2020
புரட்டாதி 16, வெள்ளிக்கிழமை
பிரதமை பின்னிரவு 4.46 மணிவரை
உத்திரட்டாதி காலை 7.01 மணிவரை
சுபநேரம் 6.02-7.32 மணிவரை
இராகுகாலம் 10.32-12.02 மணிவரை
சந்திராஷ்டமம் - உத்தரம்

வளவன்


மேஷம்
தொழில் நலன் கருதிய பயணங்கள் இடம்பெறலாம், குடும்பத்திற்குத் தேவையான பொருட்களை வாங்க முற்படுவீர்கள், வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள்.


ரிஷபம்
பிரபலமானவர்களின் அறிமுகம் கிடைக்கும், வீட்டை அலங்கரிப்பதில் ஆர்வம் காட்டுவீர்கள், தொலைபேசி வழியில் ஆச்சரியம் தரும் தகவல்கள் வந்து சேரலாம்.


மிதுனம்
நீண்ட நாளைய விருப்பமொன்று நிறைவேறலாம், திறமைகள் வெளிப்படும் நாள், தொட்ட காரியங்களில் வெற்றி பெறுவீர்கள், கௌரவமான சம்பவங்கள் இடம்பெறலாம்.


கடகம்
ஆன்மீக சிந்தனை மேலோங்கும் நாள், முன்னேற்றம் பெற பெரிதும் பாடுபடுவீர்கள், உடல்நலன் சீராகும், ஆன்றோர்களின் சந்திப்பு இடம்பெறலாம்.


சிம்மம்
சில பிரச்சினைகளைக் கண்டும் காணாமலும் இருப்பது நல்லது, வீண் விவாதங்களைத் தவிர்ப்பது நல்லது, எடுத்த காரியங்களை நிறைவேற்ற முடியாமல் போகலாம், உடல் நலனில் கவனம் தேவை.


கன்னி
பொறுமையால் பெருமைகள் வந்து சேரலாம், விலகிச் சென்றவர்கள் விரும்பி வந்து இணைவர், எடுத்த காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், போசன சுகமுண்டு.


துலாம்
வழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள், தொழில் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், எடுத்த காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், மறைமுக எதிர்ப்புகள் விலகும்.


விருச்சிகம்
விருந்துகளில் கலந்து கொள்ள அழைப்புகள் வந்து சேரலாம், புதிய முயற்சிகளில் ஆர்வம் காட்டுவீர்கள், எதிர்கால முன்னேற்றத்திற்கு நண்பர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும்.


தனுசு
திட்டமிட்ட காரியங்களைச் செய்து முடிப்பீர்கள், வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், பெற்றோர் வழியில் பிரியம் கூடும், பயணங்களால் பலனுண்டு.


மகரம்
வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், உடன் பிறப்புக்கள் வழியில் ஒத்துழைப்புகள் கிடைக்கும், விடாமுயற்சிக்கு வெற்றி கிடைக்கும் நாள், போசன சுகமுண்டு.


கும்பம்
நல்லவர்களின் தொடர்புகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, விரதங்களில் நம்பிக்கை கூடும், ஆரோக்கியத்தில் கவனம் தேவை, எதிர்பார்ப்புகள் நிறைவேறும் நாள்.


மீனம்
பொருளாதார நலன் கருதிய பயணங்கள் இடம்பெறலாம், எப்படி நடக்குமோவென நினைத்த காரியம் நல்லவிதமாக நடைபெறலாம், நிதானத்தோடு செயற்பட வேண்டிய நாள்.

நான் என்ற அகந்தையிருக்குமிடத்தில் நிச்சயமாகக் குழப்பமிருக்கும்


# நூறாவது பிறந்தநாள் நினைவஞ்சலி

## அமரர். செல்லத்தம்பி நாகபூரணம்

| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 02.10.1920 | 07.01.1997 |



மண்டைதீவு கிழக்கு அமரர் செல்லத்தம்பி நாகபூரணம் அவர்கள் இம் மண்ணில் மலர்ந்த 100 ஆவது தினத்தில், அன்னாரை அனைவரும் ஒன்றிணைந்து அன்புடன் நினைவுகூருகின்றோம்

"அறிவகம்"
மண்டைதீவு-02

மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள், உடன் பிறவா மக்கள், சகோதரியின் மக்கள், சகோதரனின் மக்கள்.

# 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



## பொன்னுத்துரை மகாலிங்கம்

[தாரகா ட்ரான்ஸ்போட் உரிமையாளர்]

| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 1949.05.27 | 2018.09.25 |

திதி: 02.10.2020

ஆண்டுகள் இரண்டு கடந்ததும்
தாளாத்துயரில் தவிக்கின்றோம் நாம்
எமை ஆற்றிட ஆளில்லை அப்பா
எங்களுடன் நீங்கள் இல்லையே
எண்ணிட மனம் மறுக்கிறது அப்பா
கோடி வருடங்கள் ஓடி மறையும்
உங்கள் நினைவுகள் மட்டும்
நீங்காது வாழும்

(4334)

பலாலி வீதி,
உரும்பிராய் கிழக்கு,
மடத்தடி.

குடும்பத்தினர்.

# 6ம் மாத நினைவினில்...

அமரர்.
## திருமதி கோணேஸ்வரன் சிவகௌரி



காலம் இன்னும் இருக்கையிலே
காலன் அவன் முந்திவிட்டான்
ஓலம் இடும் பிள்ளைகளுக்கு
ஒளிந்து நீ சென்று விட்டாய்
கோலம் போல் இருந்த வாழ்வு
கொள்ளையிட்டுப் போன பின்னே
ஆல மரமொன்று
அடியோடு சாய்ந்ததாய்
ஆடித்தான் போய்விட்டோம்
வழியின்றி நாமே

பிறப்பு
1976.10.20

இறப்பு
2020.04.02

(4344)

சிறுப்பிட்டி தெற்கு,
நீர்வேலி.

குடும்பத்தினர்.

யாழ்ப்பாண விஞ்ஞான சங்க A பிரிவு வழங்கும்

# கொரோனாவும் PCR பரிசோதனையும்

PCR என்றால் என்ன? இதை எப்படி செய்வார்கள்? எதற்காக செய்வார்கள்? இதில் இருக்கக்கூடிய நன்மைகள் எல்லாம் என்ன? என்று பல கேள்விகளுக்கு பதிலை பார்ப்போம் வாருங்கள்.

**P-Polymerase**
**C -Chain**
**R-Reaction**

இது மூலக்கூற்று உயிரியலில் உள்ள ஒரு முக்கியமான ஆய்வுகூட தொழில் நுட்பம்.

எம்மிடம் எந்த ஒரு உயிரியினதும் ஒரு **DNA** யோ அல்லது சில **DNA** இருந்தாலே போதும் அதை ஆய்வுகூடத்தில் வைத்து பல மில்லியன் **DNA** யாக உற்பத்தி செய்யலாம். இதைத் தான் **POLYMERASE CHAIN REACTION** என்று சொல்லுகிறோம். இது எப்படி என்றால் எம்மிடம் ஒரு தாள் இருந்தால் அதை **Photo copy** இயந்திரத்தை வைத்து நிறைய பிரதிகளை எடுக்கலாம். அதுபோலவே நம்மிடம் ஒரு சிறிய உயிரினத்தினது சிறிய **DNA** இருந்தால் போதும் அதை வைத்து மில்லியன் கணக்கான **DNA** களை உற்பத்தி செய்யமுடியும். இது தான் **PCR**. இதனால் தான் **PCR**யை **molecular photo copying** என்று அழைக்கின்றோம்.

**PCR** பரிசோதனை மிகவும் சுலபமான ஒன்று. இதனை மேற்கொள்வதற்கான செலவு மிகவும் குறைவு. குறைந்த நேரம் தான் எடுக்கும். ஏறக்குறைய 3 அல்லது 4 மணித்தியாலத்தில் மில்லியன்கணக்கான **DNA** யை உற்பத்தி செய்யமுடியும். **DNA** தொடர்பாக படிப்பதாக இருந்தால், முதலில் படிப்பது **PCR** பரிசோதனை தான்.

தடய அறிவியல் துறையில் **(Forensic Science) PCR** தான் பெரும் பங்காற்றுகிறது. எந்த ஒரு இடத்திலும் ஒரு கொலை நடந்தது என்றாலோ, பலாத்காரம் நடந்தது என்றாலோ அந்த இடத்தில் குறித்த நபருடைய இரத்தம், முடி போன்ற எதுவாக இருந்தாலும் அதில் உள்ள **DNA** பிரித்தெடுத்து **PCR** செய்வார்கள். **PCR** பரிசோதனையின் மூலம் அதிகளவு **DNA**யை பெருக்கி அந்த **DNA** யாருடன் பொருந்துகிறது என்று பார்ப்பதன் மூலம் குற்றவாளியை கண்டு பிடிக்கலாம்.

ஒரு குழந்தையினது பெற்றோர் யார் என தெரியாது இருக்கும் போது **DNA testing** செய்வார்கள். அப்படி செய்யும் போது கூட **PCR**தான் செய்யப்படுகிறது. முதலில் பெற்றோரினது **DNA**யை **PCR** செய்தபின் தான் குழந்தையின் **DNA** யுடன் பொருந்துகிறதா எனப் பார்க்கப்படுகிறது. நிறைய **Coloning experiment, Human genomproject** மற்றும் **Biomedical research** இல் அடிப்படையாக இருப்பது இந்த "**PCR**" தான்.

உடலில் இருக்கும் எந்த ஒரு நோய்க் கிருமியாக இருந்தாலும் அது பக்றீரியா அல்லது பங்கசு அல்லது வைரஸ் எதுவாக இருந்தாலும் அது உடலில் இருக்கின்றதா என அறிந்து கொள்வதற்கு அதனது சிறிய மாதிரியை எடுத்து **PCR** மூலம் கண்டுபிடிக்கலாம். அந்த மாதிரியில் **positive** வந்தால் அந்த நோய்க் கிருமி நமது உடலில் உள்ளது என அர்த்தம்.

**PCR** எவ்வாறு செய்வது? என்று தெரிந்து கொள்வதற்கு முன் **DNA** என்றால் என்ன? என்பதை அறிந்து கொள்ள வேண்டும். எல்லா உயிர் அங்கிகளினுடைய கலங்களில் அதனைப் பற்றிய தகவல்கள் நிரம்பிய பகுதி **DNA** எனபபடும். இதனை மரபணு தகவல்கள் அதாவது **Genatic information** என சொல்லுவார்கள். இந்த **DNA** இன் குறிப்பிட்ட சிறிய பகுதிதான் **Gene**கள். இந்த **gene**கள் தான் கலத்தினுடைய அடிப்படை விடயம். **DNA** யின் உடைய அமைப்பை பார்த்தோம் என்றால் அது இரட்டை விரி பரப்பு சுருள் அமைப்பை கொண்டது. அதாவது அதனுடைய அமைப்பு இரண்டு இழைகள் ஒன்றோடு ஒன்று பிணைக்கப்பட்டு இருக்கும். ஒவ்வொரு இழையிலும் 4 நியூக்கிளியோரைட்டு உப்பு மூலங்கள் இருக்கும். இவை அடினின், தைமின், குவானின், சைரோசின் என்பன ஆகும். இப்படி இரண்டு இழை யிலுள்ள நைதரசன் உப்புக்கள் இணைந்து காணப்படுவதற்கு காரணம் அவற்றிற்கு இடையே காணப்படும் ஐதரசன் பிணைப்புக்கள்.

அடினின்(A), தைமின்(T), நைதரசன் உப்பு மூலங்களிற்கு இடையே இரண்டு ஐதரசன் பிணைப்பும், குவானின்(G), சைரோசின்(C), நைதரசன் உப்பு மூலங்களிற்கு இடையே மூன்று ஐதரசன் பிணைப்பும் காணப்படும். இதில் A எப்போதும் T உடன் மட்டுமே தான் இணையும். அதே போல் G எப்போதும் C உடன் மட்டுமேதான் இணைந்திருக்கும். ஆகவே இந்த மாதிரி நியூக்கிளியோரைட்டுக்கள் இணைந்து இருப்பதில் ஒரு சிறிய மாற்றம் ஏற்பட்டாலும் நமது உடலில் சரியான புரத உற்பத்தி நடைபெறாது. இதனால் மரபியல் நோய்கள் ஏற்படும்.

• இப்போது மனித உடலில் **DNA** இரட்டிப்பு எப்படி நிகழ்கின்றது என்று தெரிந்து கொள்வோம்?

பொதுவாக எல்லா உயிரினங்களும் வளரும் போது ஒருகலம் இரண்டு கலமாக இனப்பெருக்கம் அடையும். இது கலப் பிரிப்பு **(cell devision)** ஆகும். கலப்பிரிப்பு நடைபெறும் போது அந்த இடத்தில் அதனுள் இருக்கும் **DNA** இரட்டிப்பு அடையும். ஒருகலம் இரண்டு கலமாக மாறும் போது அதனுள் உள்ள எல்லாம் பிரதி எடுக்கப்பட்டு அடுத்த கலத்திற்கு செல்லும். அப்போது **DNA** உம் பிரதி செய்யப்படும். இதனைத்தான் இரட்டிப் படைதல் என்று கூறுகின்றோம். இந்த செயற்பாட்டை இயற்கையாக ஒருவரின் உடலின் உள்ளேயோ அல்லது எந்த ஒரு உயிரினத்தின் உள்ளேயோ **DNA** இரட்டிப்பு நடைபெறுவதற்கு தேவையான சூழ்நிலைகள் என்னவோ அதேதான் **PCR** பரிசோதனையின் போது நாம் செயற்கையாக ஆய்வு கூடத்தில் செய்கின்றோம்.

● **PCR** செய்வதற்கான 5 அடிப்படை விடயங்கள்

**1.DNA template**

அதாவது எவ்வாறான **DNA** களை அதிகம் உருவாக்க வேண்டுமோ அவ்வாறான **DNA** களே **DNA template** எனப்படும். அதாவது ஒரு நோயாளியின் உடலில் இருந்து எடுக்கப்படும் ஒரு பக்றீரியாவாக இருக்கலாம் அல்லது வைரஸ் ஆக இருக்கலாம் அல்லது ஒரு உயிரினமாக இருக்கலாம்.

2. **DNA Primer**

நாம் எடுத்துக் கொண்ட **DNA** இழையின் குறிப்பிட்ட **DNAtemplate** சிறிய பகுதி ஏறக்குறைய 20-30 பகுதி நைதரசன் உப்பு மூல நீளத்தில் இருக்கும். இந்த குறிப்பிட்ட பகுதியை செயற்கையாக உருவாக்குவது **DNA Primer** எனப்படும். இது **DNAtemplate** உருவாக்குவதற்கு தேவையான தொடக்கப்பகுதி.

3. **Nucleotide Bases**

**A, T,G, C** என்ற 4 நைதரசன் உப்பு மூலங்களும் தேவை.

4.**Taq Polymerase** என்ற நொதி யம் தேவை

பயன்படுத்தும் **DAN**யை நீளமாக செய்வதற்கு ஒரு நொதியம் தான் எமது உடலினுள் உதவி செய்கிறது. அந்த நொதியத்தினது பெயர் **DNA Polymerase** ஆகும். மனிதனது **DNA**யை நாம் ஆய்வுகூடத்தில் உற்பத்தி செய்ய வேண்டும் என்றால் மனிதனது நொதியத்தை வைத்து செய்ய முடியாது. ஏனென்றால் ஆய்வுகூட நிபந்தனையில் அதிகளவான வெப்பம் வழங்க வேண்டியிருக்கும். மனிதனது **Polymerase** இன் வெப்பநிலை 37°C உடலின் வெப்ப நிலையைத்தான் நொதியமும் கொள்ளும். எனவே 37°C மேல் வெப்பம் கொடுத்தால் நொதியம் அமைப்பழிவுக்கு உட்படும். எனவே **TaqPolymerase** என்ற விசேட நொதியத்தில் நாம் ***Thermusa quaticus*** என்ற பக்றீரியாவில் இருந்து எடுக்கின்றோம். இந்த பக்றீரியாக்கள் சுடும் நீர் ஊற்றுக்களில் (கொதிக்கும் நீரில்) வாழும் பக்றீரியாக்கள். இதனது **Polymerase** அதிகளவான வெப்பத்தை (70 - 82°C) தாங்கக் கூடியது. இந்த பக்றீரியாக்களிலுள்ள **Polymeraseia** பயன்படுத்தி ஆய்வுகூடத்தில் **PCR** பரிசோதனை மேற்கொள்ளப்படுகின்றது.

5.**Buffers**

இறுதி உற்பத்தி பொருள் **(DNA Copies)** தேவைக்கேற்ப உருவாக்கிய பின் மேலதிக தாக்க செயற்பாட்டை நிறுத்த பயன்படுத்தப் படும் இரசாயனப் பதார்த்தம்.

இந்த எல்லாப் பொருட்களையும் நாம் ஒரு சிறிய பரிசோதனைக் குழாயில் இட்டு கலந்து, ஒரு கலத்தில் ஒரு **DNA** எப்படி இரட்டிப்பு அடைகின்றதோ அதே நிபந்தனையை வழங்கி ஆய்வுகூடத்தில் மேற் கொள்வோம். கலக்கப்பட்ட பரிசோதனைக் குழாயை **Thermal cycler** என்ற இயந்திரத்தினுள் வைக்க வேண்டும். இந்த இயந்திரத்தின் மூலம் வெப்ப நிலையை கூட்டியோ அல்லது குறைத்தோ நாம் மாற்றியமைத்து கொள்ளலாம். இதுதான் **Thermalcyclar** இன் பயன்பாடு ஆகும். **PCR** பரிசோதனையின் போது வெப்ப நிலையை கூட்ட வேண்டியிருக்கும். பின் குறைத்து குளிராக்கி அதன் பின் வெப்பப் படுத்த வேண் டி இருக்கும். இவ்வாறு வெப்பத்தை கூட்டிக் குறைக்க **Thermal cyclar** பயன்படுத்தப்படுகின்றது. **Thremal cyclar** இயந்திரம் ஒரு தன்னியக்க இயந்திரம். ஒரு தடவை பரிசோதனைக் குழாயை ஒழுங்கமைத்து வைத்தால் தானாக பல மில்லியன் **DNA** கள் உருவாகும்.

ஒரு **DNA** மாதிரி எப்படி பல மில்லியன் **DNA** ஆகமாறுகின்றது என பார்ப்போம்?

**PCR** இன் 3 படிமுறைகள்

● முதலாம் படி- **Denaturation**

எடுக்கப்பட்ட மாதிரி **DNA Thermal cyclar** இயந்திரத்தில் வைத்து 96°C வெப்பப்படுத்தப்படும். அதிக வெப்பத்தில் இரட்டை விரிபரப்பு சுருள் அமைப்பிலுள்ள **DNA**ன் ஐதரசன் பிணைப்பு உடைந்து **DNA** இழை தனித்தனி இரண்டு இழையாக மாறும்.

● இரண்டாம் படி - **Annealing**

இதில் மேற்படி மாதிரி 56°Cற்கு குளிராக்கப்பட்டு பின்பு **DNA Primers** சேர்க்கப்படும். **DNA Primers** தனித் தனி **DNA** இழையின் பொருத்தமான பகுதிக்கு அருகில் பொருந்தும்

● மூன்றாம் படி - **Extension**

மீண்டும் வெப்பநிலை 72°C க்கு கூட்டப்படும்.பின்பு **Taqpolymerase** நொதியம் மற்றும் நியூக்கிளியோடைட்டுக்கள் சேர்க்கப்படும் போது (**DNA** இழை புதிதாக உருவாக்கப்படும்) **Primer** விரிவடைந்து **DNA**க்கு எதிராக உள்ள இழை உருவாகும்.

இப்படி ஒரு இரட்டை விரிபரப்புச் சுருள் இரண்டு இரட்டை விரிபரப்பு சுருளாக மாற 10 நிமிடம் எடுக்கும். இப்படி மூன்று படிகளில் மாற்றம் நிகழும். **PCR** செயன்முறையில் இருபது அல்லது நாற்பது தடவை **DNA** செயன்முறைக்கு உட்படுத்தப்படும். இதில் **DNA** ஒன்று இரண்டாகி இரண்டு நாளாகி நான்கு எட்டாகி இப்படி இரட்டித்துக் கொண்டுபோகும். இப்படியே 40 ஆவது தடவையில் மில்லியன் அளவிலான **DNA** கள் உருவாகும்.

• **PCR** பரிசோதனையின் பின் எப்படி தொற்று உண்டா? இல்லையா? எனப் பார்த்தல்?

பரிசோதனை செய்தபின் மில்லியன் கணக்கான **DNA** உருவாகும். அதை பார்க்கவும் முடியாது. **DNA** உருவாக்கிய பின் அதனை அடையாளம் காண **Agarose gel Electrophoresis** பயன்படும். இதன் போது உருவாக்கிய புதிய **DNA** மாதிரிகள் ஒரு ஜெல்லில் இடப்பட்டு மின்னழுத்தம் வழங்கப்படும். **DNA** மாதிரியின் நிறைக்கேற்ப **DNA** மாதிரிகள் நகர்ந்து ஏற்கனவே ஜெல்லில் உள்ள நிறை அறிந்த **DNA** உடன் இணையும்.

**DNA** மாதிரியானது **DNA band** வடிவில் புளொரசென்ட் சாயத்தின் உதவியுடன் புளொரசென்ட ஒளியில் அடையாளம் காணலாம். இவ்வாறு **band** ஒழுங்கமைப்பு இருந்தால் **positive,band** ஒழுங்கமைப்பு இல்லை என்றால் **Negative.** இந்த அக்றொஸ் ஜெல்லில் இருக்கின்ற **DNAband** இல் இருப்பது நாம் உற்பத்தி செய்த மில்லியன்கணக்கான **DNA** ஆகும். சாதாரணமாக **DNA** கண்ணிற்கு தெரியாது. சாயமூட்டப்படுவதாலும் மில்லியன்கணக்காக இருப்பதாலும் கண்ணிற்கு தெரிகின்றது. தொற்று **positive** ஆ **negative** ஆ என்று பார்ப்பதற்கு இந்த செயற்பாடு போதுமானது. ஆனால் இதை வைத்து குளோனிங்க் செய்யவும் **Research** செய்யவும், முறையான பரிசோதனை செய்யவும் **DNA** மாதிரி தேவைப் படும். அப்போது இந்த ஜெல்லில் இருந்து முறையான **DNA** ஐ பிரித்தெடுத்து பயன் படுத்திக் கொள்ளலாம்.



**PCR** முறையை 1983 இல் அமெரிக்காவை சேர்ந்த **Kary. B. Mullis** கண்டு பிடித்தார். **PCR** இல் பலவகை உண்டு. இதில் தற்போது பெரும்பாலும் பாவனையிலிருப்பது **Reverse transcription (PCRC). Toika hd DNA** இல் இருந்து தான் **DNA** பல உருவாக்கப்படுகின்றது. ஆனால் இங்கே யாதாயினும் ஓர் உயிரியின் **RNA** மட்டும் இருந்தால் **RNA** யை **DNA** ஆக முற்றாக மாற்றி இரட்டிப்படைய செய்யமுடியும்.

பெரும்பாலாக **Sars, HIV** வைரஸ். தற்போதுள்ள கொரோனா வைரஸ் என்பவற்றில் **DNA** காணப்படாது. **DNA** தான் உள்ளது. அதனை இனங்காண் பதற்கு **PCR (RT-PCR)** பரிசோதனையே மேற்கொள்ளப்படுகின்றது.

கொரோனா தொற்றுள்ள நோயாளியின் மூக்குத் துவாரத்தில் இருந்தோ அல்லது தொண்டையில் இருந்தோ **swap** எடுக்கப்படும். இந்த **swap** இல்வைரஸ் தொற்று தொற்று ஏற்பட்டவரில் இருக்கும். அந்த வைரசை **RTPR** செய்வதன் மூலம் ஒருவரில் கொரோனா **Positive** ஆ **Negative** ஆ என அறிய முடியும்.

செல்வி ஸ்ரீசண்முகவேல் அனுஷிகா
முகுழ்நிலைஆசிரியமாணவி (விஞ்ஞானம்)
யாழ்ப்பாணம் தேசியகல்வியியற் கல்லூரி

# 20 ஆவது திருத்தச் சட்டம் நாட்டு மக்களுக்கு எதிரானது

(கொழும்பு)

20 ஆவது திருத்தத்தின் நகல் வடிவம் காரணமாக மக்களின் இறைமைக்கு பாதிப்பு ஏற்படும் என ஐக்கிய தேசிய கட்சியின் பிரதித்தலைவர் ருவான் விஜேவர்த்தனவின் சட்டத்தரணி இராஜ் டி சில்வா சுட்டிக் காட்டினார்.

20 ஆவது திருத்தத்திற்கு எதிரான மனுக்கள் மீதான விசாரணை நேற்று முன்தினம் இடம்பெற்ற வேளை அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

அரசமைப்பிற்கான எந்த திருத்தம் மூலமும் மக்களின் இறைமைக்கும் பௌத்தத்தின் முன்னுரிமைக்கும் ஆபத்து ஏற்பட அனுமதிக்கக்கூடாது.

20 ஆவது திருத்தம் காரணமாக மக்களின் இறைமை இழக்கப்படும், அனைத்து அதிகாரங்களும் ஜனாதிபதிக்கு வழங்கப்படும், பாராளுமன்றம் நீதித்துறையின் அதிகாரங்கள் அற்றுப்போகும்.

நகல்வடிவின் மூன்றாவது முதல் 57 வரையான வாக்கியங்கள் நாட்டின் அரசமைப்பிற்கு எதிரானவையாகும். இதன் காரணமாக மக்களின் இறைமை பறிபோகும்.

நகல் வடிவம் முற்றுமுழுதாக நாட்டு அரசமைப்பின் அடிப்படை கட்டமைப்புக்கு எதிரானது. நகல்வடிவம் பாராளுமன்றத்தினதும் நீதித் துறையினதும் அதிகாரங்களை ஜனாதிபதியின் கரங்களில் ஒப்படைக்கிறது.

இந்த நகல் வடிவின் அடிப்படையில் சட்டத்தின் ஆட்சி பொறுப்புக்கூறுதல் அரசாங்கத்தின் மூன்று முக்கிய பிரிவுகள் மத்தியிலான சமநிலை என்பன காணாமல்போகும். இது அதிகாரத்தை பகிர்வதற்கு எதிரான விடயம் என்று அவர் சுட்டிக்காட்டினார். (ஜ-4)

## உள்நாட்டு உற்பத்தியின் உண்மையான தரவுகளை மாற்ற சிலர் முயற்சி



(கொழும்பு)

இவ்வருடத்தின் இரண்டாம் காலாண்டிற்கான மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சி வீதம் ஏன் இன்னும் வெளியிடப்படவில்லை என்று கேள்வி எழுப்பியிருக்கும் ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா, அதனுடன் தொடர்புடைய உண்மையான தரவுகளை மாற்றுவதற்கு சிலர் முயற்சிப்பதாகவும் குற்றஞ்சாட்டினார்.

அத்துடன் பல்வேறு பொய்யான குற்றச்சாட்டுக்கள் மற்றும் வதந்திகளுக்கு மத்தியில், நான்கு வருடங்களுக்கு முன்னர் "1990 - சுவசரிய" இலவச அம்புலன்ஸ் சேவையை அறிமுகப்படுத்தினோம் என்றும் சுட்டிக்காட்டினார். (ஜ-4)

## மதுவரித் திணைக்களத்தை மறுசீரமைக்க பிரதமர் அழைப்பு

(கொழும்பு)

மதுவரித் திணைக்களத்தை மறுசீரமைப்பதற்கு இணைக் குழுவை நியமிக்க பிரதமர் மகிந்த ராஜபக்ஷ அழைப்பு விடுத்துள்ளார்.

மதுவரித் திணைக்கள அதிகாரிகள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பில் விவாதிக்க தொழிற்சங்க பிரதிநிதிகளுடன் நேற்று முன்தினம் அலரிமாளிகையில் நடைபெற்ற கலந்துரையாடலின்போது பிரதமர் இதனை தெரிவித்தார்.

மதுவரித் திணைக்கள அதிகாரிகளின் தொழில்சார் பிரச்சினைகள் குறித்து பிரதமர் கவனம் செலுத்தியதுடன், அரசியல் அழுத்தம் காரணமாக மதுவரித் திணைக்கள அதிகாரிகளின் இடமாற்றங்களை உடனடியாக நிறுத்தவும், தகுதியான அதிகாரிகளை மட்டும் இடமாற்றம் செய்யவும் பிரதமர் இதன் போது அறிவுறுத்தினார். (ஜ-4)



## தொலைபேசி பாவனையாளர்களுக்கு முக்கிய வேண்டுகோள்

(கொழும்பு)

பதிவு செய்யப்படாத கையடக்கத் தொலைபேசிகளில் பயன்படுத்தப்படும் அனைத்து சிம் அட்டைகளும் இரத்துச் செய்யப்படும் என இலங்கை தொலைத் தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு எச்சரித்துள்ளது.

தனிப்பட்ட பயன்பாட்டிற்காக வெளிநாடுகளில் இருந்து கையடக்க தொலைபேசிகளை கொண்டு வந்தவர்கள் தங்கள் தொலைபேசிகளை இலங்கை தொலைத் தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவின் வலைத்தளத்தின் மூலம் பதிவு செய்து கொள்ளுமாறும் அறிவுறுத்தியுள்ளது.

அதேநேரம் கையடக்கத் தொலைபேசி உள்ளிட்ட தொலைத் தொடர்பு சாதனங்கள் உரிமம் பெற்ற விற்பனையாளர்களிடமிருந்து மாத்திரம் கொள்வனவு செய்யுமாறும் ஆணைக்குழு வலியுறுத்தியுள்ளது.

எந்தவொரு கையடக்கத் தொலைபேசியின் 15 இலக்க IMEI எண்ணை 1909 என்ற எண்ணுக்கு குறுந் தகவல் அனுப்புவதனூடாக பதிவினை சரிபார்க்கலாம் என்றும் அறிவித்துள்ளது. (ஜ-4)

## மைத்திரிக்கு எதிராக முறைப்பாடு



(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு எதிராக கத்தோலிக்க வெளிப்பாடு (The Catholic Expression) என்ற அமைப்பு கொழும்பு குற்றப்புலனாய்வு பிரிவில் முறைப்பாடளித்துள்ளது.

நேற்று முன்தினம் இவ்வாறு முறைப்பாடளிக்கப்பட்டுள்ளது. உயிர்த்த ஞாயிறு தினத்தன்று மேற்கொள்ளப்பட்ட குண்டு தாக்குதல்களில் நீதி நிர்வாகத்தின் போது மறைக்கப்பட்ட காரணிகள் குறித்து 28 ஆம் திகதி திங்கட்கிழமை ஜனாதிபதியின் ஆலோசனைக்கமைய ஜனாதிபதியின் பிரத்தியேக செயலாளர் மற்றும் ஏனைய முக்கிய அதிகாரிகளுடன் விசேட கலந்துரையாடலொன்று நடைபெற்றது.

அதற்கமையவே முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு எதிராக முறைப்பாடளிக்கப்பட்டதாக சங்கத்தின் தலைவர் சிரந்த ஆர். அன்டனி அமரசிங்க தெரிவித்துள்ளார். (ஜ-4)

## ஊடகவியலாளர்களின் செயற்றிறனை மேம்படுத்த பயிற்சி நிலையம்

### ஸ்தாபிக்க அரசு திட்டம்

(கொழும்பு)

ஊடகவியலாளர்களின் தொழிற்றிறன்களை மேம்படுத்துவதற்கு பயிற்சி நறுவனம் ஒன்றை ஸ்தாபிப்பதற்கு அரசாங்கம் திட்டமிட்டுள்ளதாக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்தார்.

வெகுசன ஊடகவியலாளர்கள் தொழில் அபிவிருத்தி உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சின் எதிர்காலத் திட்டங்கள் தொடர்பாக கடந்த வியாழக்கிழமை ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலிலே ஜனாதிபதி இவ்வாறு குறிப்பிட்டார்.


அச்சு இலத்திரனியல் மற்றும் சமூக ஊடகங்களினால் நபர்களுக்கும் நிறுவனங்களுக்கும் வர்த்தகத் துறைகளுக்கும் ஏற்படும் முறையற்ற அழுத்தங்கள் மற்றும் தவறான அபிப்பிராயங்கள் குறித்த முறைப்பாடுகள் அதிகரித்திருப்பதாக தகவல்கள் கிடைத்துள்ளன.

அனைத்து விடயங்களையும் கருத்தில் கொண்டு பத்திரிகை பேரவை சட்டத்தை திருத்த வேண்டியதன் அவசியம் குறித்தும் இதில் கலந்துரையாடப்பட்டது.

இக் கலந்துரையாடலில் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல, இராஜாங்க அமைச்சர் எஸ்.வியாழேந்திரன், ஜனாதிபதியின் செயலாளர் பீ.பி. ஜயசுந்தர, அமைச்சுக்கள் மற்றும் இராஜாங்க அமைச்சுக்களின் செயலாளர்கள், துறைசார் நிறுவனங்களின் தலைவர்கள் இக் கலந்துரையாடலில் பங்கு பற்றினர். (நி-7)

# பாரதம்

# சீனாவிடமிருந்து எல்லைப் பகுதியைக் காக்க லடாக்கில் ஏவுகணைகளை நிறுத்தியது இந்தியா



**(பீஜிங்)**

**கிழக்கு லடாக்கில் எல்லைக் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் முன்பிருந்த நிலையைத் தாண்டி சீன இராணுவம் தனது படையினரை நிறுத்தி வைத்துள்ளதால் அங்கு பதற்றம் நிலவுகிறது.**

சீனாவிடம் இருந்து எல்லைக் கட்டுப்பாட்டுப் பகுதியைக் காக்கக் கிழக்கு லடாக்கில் நிர்பய் ஏவுகணைகளை இந்திய இராணுவம் நிறுத்தியுள்ளது.

இந்த நிலையில், ஆயிரம் கிலோமீற்றர் தொலைவில் உள்ள இலக்கைத் தாக்கும் நிர்பய் ஏவுகணையை இந்திய இராணுவம் எல்லைக் கட்டுப்பாட்டுப் பகுதிக்குக் கொண்டு சென்றுள்ளது.

இவ்வகை ஏவுகணைகளின் ஏழாம் கட்டச் சோதனையை அடுத்த மாதத்தில் நடத்த இராணுவமும் கடற்படையும் திட்டமிட்டுள்ளன.

எல்லையைக் காப்பதற்காக அதை முன்கூட்டியே படையில் இணைக்க பாதுகாப்புத்துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் தலைமையிலான குழு ஒப்புதல் அளித்துள்ளது. (நி)

# ஒரு தலைப்பட்சமாக எல்லையை மாற்றக் கூடாது

## இந்திய–சீன பேச்சுவார்த்தையில் தீர்மானம்

(காஷ்மீர்)

கிழக்கு லடாக்கில் 5 மாதங்களாக நீடிக்கும் எல்லைப் பிரச்சினையைத் தீர்க்க, இரு நாடுகளுக்கு இடையில் எட்டப்பட்ட ஐந்து அம்ச ஒப்பந்தத்தை நடைமுறைப்படுத்துவது குறித்து இந்தியாவும் சீனாவும் பேச்சுவார்த்தை நடத்தின.

இந்த ஒப்பந்தத்தை நிறைவேற்றுவது தொடர்பான பேச்சுவார்த்தை காணொளி மூலம் இரு நாட்டு பிரதிநிதிகள் இடையே நேற்று முன்தினம் புதன்கிழமை நடைபெற்றது.

இதன்போது ஒருதலைப்பட்சமாக எல்லையை மாற்றக் கூடாது மற்றும் சிக்கலாக்கும் எந்தவொரு நடவடிக்கைகளையும் தவிர்க்க வேண்டும் போன்ற முடிவுகள் எடுக்கப்பட்டுள்ளன.

அதில் துருப்புக்களை விரைவாக வெளியேற்றுவது, பதற்றங்களை அதிகரிக்கக் கூடிய நடவடிக்கைகளைத் தவிர்ப்பது, எல்லை மேலாண்மை தொடர்பான அனைத்து ஒப்பந்தங்கள் மற்றும் நெறிமுறைகளைப் பின்பற்றுவது மற்றும் எல்லையில் அமைதியை மீட்டெடுப்பதற்கான நடவடிக்கைகளைத் தொடர்வது ஆகியவை அதில் அடங்கும் என்பது குறிப்பிடத்தக்கது. (நி)



# மரியாதை குறைவாக பேசிய கிளிகள் தனிமைப்படுத்தப்பட்டன




(லண்டன்)

இங்கிலாந்தில் பார்வையாளர்களிடம் மரியாதை குறைவாக பேசிய கிளிகளை தனியாக வேறொரு இடத்திற்கு பூங்கா நிர்வாகத்தினர் மாற்றியுள்ளனர்.

இங்கிலாந்து தலைநகர் லண்டனில் உள்ள லின்கோல்ன்ஷைர் என்ற உயிரியல் பூங்காவில் கிளிகள் இருப்பிடத்திற்கு கடந்த ஓகஸ்ட் மாதம் பில்லி, எரிக், டைசன், ஜேடே மற்றும் எலிசி என்ற பெயர்கள் கொண்ட 5 ஆபிரிக்க கிளிகள் புதிய வரவாக வந்து சேர்ந்தன. இவை வந்த சில நாட்களிலேயே பார்வையாளர்களிடம் கிண்டலாகவும் மரியாதைக் குறைவாகவும் நடந்து கொள்வதாக நிர்வாகத்தினருக்கு புகார் வந்தது.

ஒரு கிளி பார்வையாளரிடம் சத்தியம் செய்யும், மற்றொரு கிளி பார்வையாளரை பார்த்து சிரிக்கும், இன்னொரு கிளி மரியாதை குறைவாக பேசும். மனம் புண்படும் படி கிளிகள் நடந்து கொண்டதாக பார்வையாளர்கள் இதுவரை புகார் அளிக்கவில்லை என்றாலும் நிர்வாகத்தினர் அவற்றை தனியாக வேறொரு இடத்திற்கு மாற்றியுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஆபிரிக்க சாம்பல் கிளிகள் குறிப்பாக அனைத்து வகையான சத்தங்களிலிருந்தும் குரல்களைக் கற்றுக்கொள்வதில் திறமையானவை என்று பூங்கா நிர்வாகத்தின் தலைமை நிர்வாக அதிகாரி ஸ்டீவ் நிக்கோல்ஸ் தெரிவித்தார். (நி)



**அமீரகத்தின் ராசல் கைமா பகுதியில் நேற்று முன்தினம் ஆ… பொதுமக்கள் மகிழ்ச்சியடைந்தனர். இளைஞர்கள் சிலர் ஆலங்… மகிழ்ச்சியுடன் விளையாடினர்.**

# வெளிநாடு

## அர்மீனிய - அசர்பைஜான் போர் விவகாரம் கிளர்ச்சியாளர்களை களமிறக்கியது துருக்கி

### எச்சரிக்கை விடுத்தது ரஷ்யா



(யெரிவன்)

அர்மீனிய- அசர்பைஜான் போரில் வேறுநாட்டை சேர்ந்த கிளர்ச்சியாளர்களை களமிறக்குவதை உடனடியாக நிறுத்த வேண்டும் என துருக்கிக்கு ரஷ்யா மறைமுக எச்சரிக்கை விடுத்துள்ளது. இதற்கிடையில், அர்மீனியா- அசர்பைஜான் இடையே அமைதியை ஏற்படுத்த 1992 ஆம் ஆண்டு ஒ.எஸ்.சி.இ.மின்ஸ்க் குழு என்ற அமைப்பு உருவாக்கப்பட்டது.

இந்தக் குழுவின் தலைமைகளாக அமெரிக்கா, ரஷ்யா, பிரான்ஸ் ஆகிய நாடுகள் உள்ளன.

தற்போது அர்மீனிய-அசர் பைஜான் மோதல் அதிகரித்து வரும் நிலையில், இந்த அமைதிக் குழு போரை முடிவுக்குக் கொண்டுவர பல்வேறு முயற்சிகள் மேற்கொண்டு வருகின்றன.


நகோர்னோ-கராபத் என்ற மாகாணத்துக்கு உரிமை கொண்டாடும் விவகாரத்தில் அர்மீனிய- அசர்பைஜான் நாடுகளுக்கிடையில் மோதல் முற்றியுள்ள நிலையில், அசர்பைஜானுக்கு ஆதரவாக சிரியா மற்றும் லிபியாவில் உள்ள தனது ஆதரவு கிளர்ச்சியாளர்களை துருக்கி களமிறக்கியுள்ளது.

நூற்றுக்கணக்கான சிரியா மற்றும் லிபிய கிளர்ச்சியாளர்களை துருக்கி, விமானம் மூலம் அசர்பைஜானுக்கு அனுப்பிவைத்துள்ளது. இந்த கிளர்ச்சியாளர்கள் அசர்பைஜானுக்கு ஆதரவாகவும் அர்மீனியாவுக்கு எதிராகவும் சண்டையிட்டு வருகின்றனர்.

இந்தநிலையில், சர்வதேச அங்கீகாரம் பெற்ற அரசுப் படைகளுடன் போரிட்டு வரும் கிளர்ச்சியாளர்களை ஒடுக்க ரஷ்யா தனது படைகளை அர்மீனியாவுக்கு ஆதரவாக எந்நேரமும் களமிறக்கலாம் என தகவல் வெளியாகியுள்ளது.

அர்மீனியா, அசர்பைஜான் நாடுகளுக்கு இடையேயான எல்லையாக பிரிக்கும் பகுதியில் நகோர்னோ-கராபத் என்ற மாகாணம் அமைந்துள்ளது.

அசர்பைஜானில் அமைந்திருந்த இந்த மாகாணத்தில் பெரும்பான்மையானோர் அர்மீனிய ஆதரவாளர்களே ஆகும். 1994 ஆம் ஆண்டு இரு நாடுகளுக்கும் இடையே நடந்த போரில் இந்த மாகாணத்தின் பெரும் பகுதியை அர்மீனியா கைப்பற்றியது. மேலும், இந்த நகோர்னோ -கராபத் மாகாணத்திற்கு தன்னாட்சி அதிகாரம் வழங்கப்பட்டது. அன்றிலிருந்து நகோர்னோ -கராபத் மாகாணத்தை மையமாகக்கொண்டு அர்மீனியா-அசர் பைஜான் நாடுகளுக்கு இடையே மோதல் நிலவி வருகிறது. (நி)





சவுதி அரேபியாவில் உள்ள கடல் நகரமான அல் கோபாரில் நாய்களுக்கான முதலாவது உணவகம் திறக்கப்பட்டுள்ளது. அங்கு செல்லப்பிராணிகளின் உரிமையாளர்கள் தங்கள் நாய்க்குட்டிகளுடன் உணவருந்த முடியும். இந்நாட்டில் குறிப்பிட்ட சில இடங்களுக்கு மட்டுமே செல்லப்பிராணிகளை அழைத்துச் செல்ல முடியும் என்ற கட்டுப்பாடு உள்ளமை குறிப்பிடத்தக்கது.



ங்கட்டி மழை பெய்தது. இதனால்
ட்டிகளை கையில் எடுத்து வைத்து

## 32 ஆயிரம் பணியாளர்களை பணி இடைநீக்கம் செய்யும் அமெரிக்க விமான நிறுவனங்கள்

(வோஷிங்டன்)

1600 விமானிகள் உட்பட 32,000 விமான சேவை நிறுவன ஊழியர்களை கட்டாய பணி இடை நீக்கம் செய்யும் நடவடிக்கையை அமெரிக்காவில் இரண்டு பெரிய விமான சேவை நிறுவனங்கள் ஆரம்பித்துள்ளன.

32,000 பணியாளர்களை பணி இடை நீக்கம் செய்யும் நடவடிக்கை தொடங்கப்பட்டுள்ளதாக அமெரிக்கன் ஏர்லைன்ஸ், யுனைடெட் ஏர்லைன்ஸ் ஆகியன அறிவித்துள்ளன.

கொரோனாத் தொற்று நோயால் விமான சேவைகள் முடங்கியுள்ளதால் ஊழியர்களின் சம்பளம் உள்ளிட்ட செலவுகளைச் சமாளிக்க முடியாமல் உலகெங்கும் விமான சேவை நிறுவனங்கள் திண்டாடி வருகின்றன. அமெரிக்காவில் வேலையிழப்புக்களைத் தவிர்க்கும் நோக்கில் விமான நிறுவனங்களுக்கு அரசு வழங்கிய மானியங்களும் தீர்ந்துவிட்ட நிலையில் ஊழியர்களை பணி இடை நீக்கம் செய்யும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

எனினும் கட்டாய பணி இடை நீக்கம் செய்யப்படும் ஊழியர்கள் நிலைமை சீரானால் மீண்டும் பணிக்கு அமர்த்தப்படுவார்கள் என ஒப்பந்தத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி)

## மூடப்பட்ட அறையில் கொரோனா விரைவாக பரவும்

### ஆய்வில் தகவல்

(வோஷிங்டன்)

கொரோனா வைரஸ் மூடப்பட்ட அறைகளில் விரைவாக பரவும் என்று ஆய்வில் தெரிவிக்கப்பட்டு இருக்கிறது.

கொரோனா வைரஸ் பரவல் குறித்து பல்வேறு ஆய்வுகள் நடத்தப்பட்டு வருகின்றன. வைரஸால் பாதிக்கப்பட்ட நபர் இருமும் போதும், தும்மும் போதும், பேசும் போதும் வெளிப்படும் நீர்த்துளிகளால் பரவும் என்று தெரிவிக்கப்பட்டு இருந்தது.

அதன்பின் நடந்த ஆய்வுகளில் கொரோனா வைரஸ் காற்றிலும் பரவும் என்றும் தெரிவிக்கப்பட்டது. ஆனால் நீண்ட தூரம் காற்றில் பரவாது என்று சில விஞ்ஞானிகள் கருத்து தெரிவித்துள்ளனர்.

இந்த நிலையில் கொரோனா வைரஸ் மூடப்பட்ட அறைகளில் விரைவாக பரவும் என்று ஆய்வில் தெரிவிக்கப்பட்டு இருக்கிறது.

சீனாவில் நடத்தப்பட்ட ஆய்வில் மூடப்பட்ட அறையில் புழக்கத்தில் இருக்கும் இடத்தில் நீர்த்துளிகள் மூலம் கொரோனா பரவக்கூடும் என்பது தெரிய வந்துள்ளது. மூடப்பட்ட அறைகளில் கொரோனா வைரஸ் விரைவாக பரவும்.

மூடப்பட்ட அறைகளில் ஒரு நபர் பேசும்போது வெளியாகும் சிறிய நீர்த்துளிகளின் தெளிப்பை விரைவாக மீற்றர் இடைவெளியில் கொண்டு செல்கிறது. இதுவும் கொரோனா பரவலுக்கான முக்கிய காரணமாகும் எனத் தெரியவந்துள்ளது. (நி)

# மட்டக்களப்பில் பறிபோகவிருந்த காணிகள் தடுத்து நிறுத்திய பாராளுமன்ற உறுப்பினர்

(கல்முனை)

**மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள மேய்ச்சல் தரை காணிகள் 1500 ஏக்கரை சிங்கள மக்களுக்கு வழங்கும் திட்டத்தை பாராளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் தற்காலிகமாக தடுத்து நிறுத்தியுள்ளார்.**



மட்டக்களப்பு எல்லை பகுதியான மயித்தமடு, மாதவனை பகுதிகளில் உள்ள மேய்ச்சல் தரை காணிகள் அம்பாறை, பொலநறுவை மாவட்டங்களைச் சேர்ந்த சிங்கள மக்களுக்கு விவசாயம் செய்வதற்கு வழங்கப்பட இருந்தது.

கிழக்கு மாகாண ஆளுநர், மகாவலி அபிவிருத்தித் திணைக்களத்திடம் அம்பாறை, பொலநறுவை மாவட்டத்தில் உள்ள சிங்கள மக்களுக்கு சோளம் பயிர்ச்செய்கை செய்வதற்கு என சுமார் மூவாயிரம் ஏக்கர் காணிகளை கோரியிருந்த நிலையில் முதல் கட்டமாக 1500 ஏக்கர் காணிகளை வழங்க மகாவலி அபிவிருத்தி அதிகாரசபையினர் இணக்கம் தெரிவித்து அதனை வழங்குவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வந்தது.

குறித்த சம்பவம் தொடர்பாக மட்டக்களப்பு மாவட்ட சிவில் சமூகங்களின் ஒன்றியம் மற்றும் பண்ணையாளர்கள் இணைந்து தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியனின் கவனத்திற்கு இந்த விடயத்தை கொண்டு வந்தனர்.

இதனையடுத்து நேற்று முன்தினம் கொழும்பில் உள்ள மகாவலி அபிவிருத்தி அதிகார சபையின் பணிப்பாளர் நாயகம் எஸ்.பெரேராவை சந்தித்து மேற்படி விடயம் தொடர்பாக கலந்துரையாடினார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள கால்நடைகளை வளர்ப்பதற்காக பயன்படுத்தப்படும் மேய்ச்சல் தரைகளை வெளி மாவட்டங்களில் உள்ள மக்களுக்கு விவசாயம் செய்ய வழங்கினால் மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள பண்ணையாளர்கள் தங்களிடம் உள்ள மாடுகளை மேய்ப்பதற்கு இடம் இல்லாமல் போகும்.

அத்துடன் மட்டக்களப்பு மாவட்டத்தில் வருடா வருடம் செய்துவரும் விவசாய நடவடிக்கைகளுக்கு அது பாதிப்பை ஏற்படுத்தும்.

பிரதமர் மகிந்த ராஜபக்ஷ மாடுகளை இறைச்சிக்காக வெட்டுவதை நிறுத்த உள்ள நிலையில் இனிவரும் காலங்களில் மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள மாடுகளை மேய்ப்பதற்கு மேலும் இடங்கள் தேவைப்படும் ஏற்கனவே மட்டக்களப்பு மாவட்ட பண்ணையாளர்கள் காலம் காலமாக மேய்ச்சல் தரை நில மாக பயன்படுத்தி வந்த காணிகளை விவசாயத்திற்கு வழங்கினால் பண்ணையாளர்கள் முழுமையாக பாதிக்கப்படுவர்.

எனவே அவர்கள் தங்களிடம் உள்ள மாடுகளை விற்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டு மாவட்டத்தின் பால் உற்பத்தி இல்லாமல் போவதுடன் அது அரசாங்கத்தின் சுய தொழில் திட்டங்களை வெகுவாக பாதிக்கும்.

எனவே உடனடியாக மேய்ச்சல் தரை காணிகளை விவசாயத்திற்கு வழங்குவதை தடுத்து நிறுத்துமாறும் இல்லை என்றால் தான் மகாவலி அபிவிருத்தி அதிகாரசபைக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப் போவதாகவும் பாராளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் வலியுறுத்தி உள்ளார்.

இந்நிலையில் இந்த திட்டத்தை தற்காலிகமாக நிறுத்துவதாக கூறிய மகாவலி அபிவிருத்தி அதிகார சபையின் பணிப்பாளர் நாயகம், இது குறித்து ஆராய்வதற்கு தனது மேல் அதிகாரிகளை மட்டக்களப்பு மாவட்டத்திற்கு அனுப்பி மேலதிக நடவடிக்கைகளை எடுப்பதாக தன்னிடம் உறுதியளித்துள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் ஊடகங்களுக்கு தெரிவித்துள்ளார். (நி-7)

# ஏமாற்றுப் பேர் வழிகளை உடனடியாக கைது செய்யுங்கள்

## அலி சப்ரி உத்தரவு



(கொழும்பு)

தொழில் வழங்குவ்தாக பணம் பெற்று ஏமாற்றும் மோசடி நபர்கள் குறித்து அவதானமாக இருக்குமாறு நீதி அமைச்சு பொதுமக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

தொழில் பெற்றுத் தருவதாக பணம் பெறும் நபர்களை உடனடியாக கைது செய்யுமாறு நீதி அமைச்சர் அலி சப்ரி பொலிஸாருக்கு பணிப்புரை வழங்கியுள்ளார்.

நீதி அமைச்சில் எழுதுவினைஞர்,அலுவலக உதவியாளர், சாரதி மற்றும் காவலாளி போன்ற பதவிகளுக்கு நேர்முக பரீட்சைக்கான கடிதம் மற்றும் நியமனக் கடிதம் வழங்கி பணம் மோசடி செய்வது தொடர்பாக தகவல் கிடைத்துள்ளதாக நீதி அமைச்சு தெரிவித்தது.

இவ்வாறு ஏமாற்றப்பட்ட பல இளைஞர், யுவதிகள் கடந்த சில நாட்களாக நீதி அமைச்சிற்கு வருகை தந்துள்ளனர்.

அம்பாறை, நீர்கொழும்பு, கல்கிஸை, தங்கொடுவ போன்ற பல்வேறு பகுதிகளிலிருந்து இவ்வாறு நேர்முக பரீட்சைக்கு வந்துள்ளதோடு வந்த பின்னர்தான் அவர்கள் ஏமாற்றமடைந்தது தெரிய வந்துள்ளது.

அவர்கள் 17,500 ரூபா முதல் 1,85, 000 ரூபா வரை பணம் வழங்கியுள்ளனர்.

சமந்த என்ற பெயருள்ள நபரே இவர்களை ஏமாற்றியுள்ளதோடு தொலைபேசியில் தொடர்பு கொண்டே இந்த மோசடியைச் செய்துள்ளதாக தெரிய வந்துள்ளது. (நி-7)

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## இளமையாய் இருக்க

இது எனக்கு நடக்கக்கூடாது என்றுதான் எல்லோருமே ஆசைப்படுகின்றோம். அது வயதாகின்ற விடயம்தான். வயதாகக் கூடாது என்கின்றது தான் நம்முடைய ஆசை. ஆனால் அது நம்முடைய கட்டுப்பாட்டிலே உள்ள விடயம் இல்லை.

ஆனால் ஒன்று, வயதானாலும் இளமையாக இருக்க முடியும். அது நம் முடைய கையிலேதான் இருக்கு. சரி, ரொம்ப நாளைக்கு இளமையாகவும் சுறுசுறுப்பாகவும் இருப்பதற்கு என்ன வழி? நிபுணர்கள் இதற்கென்று சில யோசனைகளை சொல்லியிருக்கின்றார்கள்.

முதல் விடயம், உடம்பு குண்டாகாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். உடம்பு பெரிதாக இருந்தால் நீரிழிவு நோய், இதய நோய் இதெல்லாம் வருவதற்கான சந்தர்ப்பம் அதிகம். சரி உடம்பைக் குறைப்பது எப்படி?

சில பேர் இதற்காக கலோரியைக் குறைப்பதற்கு முயற்சி செய்வார்கள். கொழுப்பைக் குறைக்க வேண்டும். பட்டாணி, பருப்பு, தானிய வகையெல்லாம் சாப்பிடலாம். விற்றமின் E,C,A மூன்றும் அவசியம் தேவை.

மஞ்சள் கலோரி இருக்கின்ற பழங்கள், காய் கறிகளிலே பீற்றா கரோட்டின் (விற்றமின் A) இருக்கின்றது. மாம்பழம், பப்பாசி, கரட், கீரை வகை தாராளம் சாப்பிட வேண்டும். உடம்பு, தசை, எலும்பு நன்றாக இருக்க புரோட்டின் தேவை. ஆனால் அது அதிகமாகப் போனால் feel பண்ணுவோம். வயதான காலத்திலே அதிகமாக வெயிலில் அலைய வேண்டாம். போதுமான தூக்கம் குறைந்தால் சோர்வாகி விடுவோம்.

இந்த உலகத்திலே வயதான பின்பும் ரொம்ப சௌக்கியமாக சந்தோசமாக பலபேர் இருக்கிறார்கள் அல்லவா அப்படிப்பட்டவர்களை எல்லாம் ஆராய்ந்து பார்த்தார்களாம். அவர்கள் எல்லாம் சும்மா இருக்கிறதில்லை. தொண்டு தோட்ட வேலை இது மாதிரி ஏதாவது செய்கிறவர்களாக இருக்கிறார்களாம். இப்படி இருக்கிறவர்களுக்கு அதிகமான இரத்தம் மூளைக்குப் போகிறது. அவர்களை சுறுசுறுப்பாக இருக்க வைக்கிறது. புத்திக்கூர்மையாக இருந்தால் அவர்கள் ரொம்ப நாளைக்கு சௌக்கியமாக இருப்பார்களாம்.

நிறைய டாக்டர்கள் என்ன சொல்கிறார்கீள் என்றால் You will stay young it you think young. இளமை எண்ணங்கள் உங்களை இளமையாக வாழ வைக்கும். நாற்பது வயது ஆனவுடனே நான் வாழ்ந்து முடித்து விட்டேன் என்று பேசிக் கொண்டிருக்கக்கூடாது. வேலையிலேயிருந்து ஓய்வாகி அறுபது வயதுக்கு மேலே இனிமேல் தான் எனக்கு வாழ்க்கையே ஆரம்பம் என்று சொல்கிறவர்களும் இருக்கிறார்கள்.

எப்பவும் இளமை எண்ணத்தோடு இருக்கப் பழகிக்கொள்ளுங்கள் சேர். அப்படியிருக்கப் பழகிக்கொண்டால் உங்களுக்கு வயதாகிற களைப்பே வராது. மூச்சு இழுத்து விடுகிறது நுரையீரலுக்கு நல்ல பயிற்சி. முடிந்த அளவுக்குக் காற்றை உள்ளே இழுத்து வெளியே விடுங்கள்.

ஒருத்தர் தன்னுடைய 70 வயதிலே இப்படி செய்து கொண்டு அதேநேரம் புகைப்பிடிக்கிற பழக்கத்தையும் விட்டு விடுகிறார் என்று வைத்துக்கொள்ளுங்கள். அப்படி இருந்து விட்டால் அவருடைய நுரையீரல் 40 வயதுக்காரருக்கு இருக்கிற மாதிரி இருக்குமாம். சோம்பல் தளர்ச்சி இருக்காதாம்.

வயதான நாம் களைப்பாக இருக்கிறதுக்கு முக்கிய காரணமே நம்ம (Body System) உடம்பிலே ஒட்சிசன் குறைகிறதுதான். நுரையீரல் நல்லா இருந்தா இந்தக் குறை வராது. அதனாலே முதுமையை நீங்கள் வெல்ல வேண்டுமா? அப்படியென்றால் சத்தான உணவு, தவறாத உடற் பயிற்சி, நல்ல மனநிலை இவை மூன்றும் அவசியம்.

ஒரு கடற்கரையிலே மூன்று தாத்தாக்கள் உட்காந்து பேசிக் கொண்டிருந்தார்களாம். தங்களுடைய இளமையின் இரகசியம் என்ன என்பதைப் பற்றி ஆராய்ந்து கொண்டிருந்தார்கள். அந்த மூன்று பேரிலே கொஞ்சம் இளமையாக தெரிந்த ஒருத்தர் சொன்னார்...நான் சின்ன வயதிலேயிருந்து சிகரெட் குடிக்கிறதில்லை. அதனாலே தான் இப்ப நான் இப்படி இருக்க முடியுது என்றார்.

அப்படியென்றால் இப்ப உங்க வயது என்னவென்று கேட்டார் அடுத்தவர். 80 முடிந்து 81 ஆரம்பம் என்றார் அவர். இன்னொரு தாத்தா சொன்னார்...நான் சின்ன வயதிலேயிருந்தே சிகரெட்டும் குடிக்கிறதில்லே. மதுவும் அருந்திறதில்லே. அதனாலே தான் இப்ப நான் இப்படி இருக்க முடியுது என்றார்.

உங்க வயது என்ன என்று கேட்டார்கள் மற்றவர்கள். 90 முடிந்து 91 ஆரம்பம் என்றார். கடைசியாக மூன்றாவது தாத்தா சொன்னார்...நான் சின்ன வயதிலேயிருந்து சிகரெட் குடிப்பேன், மது அருந்துவேன், மாமிசம் சாப்பிடுவேன். எதையும் தவிர்ப்பது இல்லை. அதனாலேதான் இப்ப நான் இப்படி இருக்கிறேன் என்றார். மற்ற இரண்டு பேருக்கும் ஆச்சரியம்! அப்படியென்றால் இப்ப உங்கள் வயதென்ன என்று கேட்டார்கள். அவர் ரொம்ப நிதானமாக இப்ப தான் 40 முடிந்து 41 ஆரம்பம் என்றார்.

# வெளிநாட்டு முதலீடுகளுக்கு சிறந்த நாடு

## ஜனாதிபதி கோட்டா வெளிப்படை

(கொழும்பு)

**சீன நிதியுதவியில் அம்பாந்தோட்டை துறைமுகம் நிர்மாணிக்கப்பட்டதை கடன் வலையில் சிக்கிக் கொண்டதாக சில தரப்பினர் குறிப்பிட்ட போதும் அம்பாந்தோட்டை துறைமுகம் பாரிய அபிவிருத்தி ஆற்றல் கொண்ட செயற்றிட்டமாகும். கடந்த அரசாங்கம் அம்பாந்தோட்டை துறைமுகத்தை சீன நாட்டு நிறுவனத்துக்கு குத்தகைக்கு வழங்கிய போதும் அது வர்த்தக நோக்கத் திற்காக மாத்திரம் பயன்படும் என ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்தார்.**

இலங்கைக்கு புதிதாக நியமிக்கப்பட்டுள்ள கொரிய மக்கள் குடியரசின் தூதுவர் ஜோங் வூன்ஜின்ங், ஜேர்மனி சமஷ்டி மக்கள் குடியரசின் தூதுவர் ஹொல்கர் லோத்தர் செய்பெட், புனித வத்திக்கான் அப்போஸ்தலிக்க நன்சியோ தூதுவர் பேரருட் மொன் சிங்ஞோர் பிரயன் உடைக்வே ஆண்டகை, சுவிஸ் தூதுவர் டொமினிக் பேர்க்லர் ஆகியோர் நேற்று முன்தினம் ஜனாதி பதி மாளிகையில் ஜனாதி பதியைச் சந்தித்தனர். இதன் போது ஜனாதிபதி தூதுவர் களிடம் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக் கையில்,

எமது நாடு ஒரு மூலோபாய முக்கியத்துவம் வாய்ந்த இடத் தில் அமைந்துள்ளது.

எமது நாடு பல தரப்பின ரையும் ஈர்த்துள்ளது. இவ்வா றான நிலையில் இலங்கை நடுநிலையான வெளிநாட்டுக் கொள்கையை தெரிவு செய் துள்ளது. பரஸ்பர தன்மையு டன் கூடிய அபிவிருத்தி ஒத்து



ழைப்பு எமது முதலாவது முன்னுரிமையாகும். ஆகவே வெளிநாட்டு முதலீடுகளுக்கு இலங்கை சிறந்த நாடு.

இந்து சமுத்திரம் அனை த்து நாடுகளுக்கும் திறந்த சுதந்திர வலயமாகக் காணப்பட வேண்டும். இந்து சமுத்திர த்தை அமைதி வலயமாக மாற்ற வேண்டும் என இல ங்கை சுமார் ஐந்து தசாப்தங் களுக்கு முன்னர் முன்மொழிந் ததையும் நினைவுபடுத்த வேண்டியது அவசியமாகும்.

2009 ஆம் ஆண்டு யுத் தம் முடிவுக்குக் கொண்டு வரப் பட்டதன் பின்னர் துரித அபி விருத்தியை அடைவது அர சாங்கத்தினதும் நாட்டு மக்க ளினதும் பிரதான எதிர்பார் ப்பாகக் காணப்பட்டது. பயங்கர வாதத்தின் காரணமாக பொரு ளாதாரம் பெரிதும் வீழ்ச்சியு ற்றிருந்தது.

துரிதகர பொருளாதார அபிவிருத்திக்கு பிற நாடுகளின் உதவிகள் தேவைப்பட்டன. அபிவிருத்தித் திட்டங்களுக்கு ஒத்துழைப்பு வழங்க சீனா முன்வந்தது. இரு நாடுகளு க்குமிடையில் வர்த்தக ரீதி யான கொடுக்கல்-வாங்கல் இடம்பெற்றன. எனினும் இதனை ஒரு தரப்பினர் சீனா விற்கு சார்பாக வியாக்கியானம் செய்தார்கள். இலங்கை அனைத்து நாடுகளுடனும் நட் புறவுடனே உள்ளது என தெரி வித்தார். (ஜ-4)

# தேசிய மரக்கன்று நடும் வாரம் இன்று



(கொழும்பு)

தேசிய மரக்கன்று நடும் வாரம் தொடர்பான ஊடகவிய லாளர் மாநாடு அரசாங்க தக வல் திணைக்களத்தின் கேட்போர் கூடத்தில் நேற்று முன்தினம் நடைபெற் றது.

இதில் சுற்றாடல் அமைச்சர் மகிந்த அமரவீர, அரசாங்க தகவல் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் நாலக கலுவெவ உள்ளிட்ட பலர் கல ந்துகொண்டனர்.

தேசிய மரக்கன்று நடும் வாரம் இன்று 2 ஆம் திகதி வெள்ளிக்கிழமை அநுராதபுரம் ருவான்வெலிசாயவில் ஆரம்ப மாகவிருப்பதாக சுற்றாடல் அமைச்சர் மகிந்த அமரவீர இதன்போது தெரிவித் தார்.

இந்த தேசிய மரக்கன்று நடும் வாரத்தில் நாடு முழுவ திலும் சுமார் 2 மில்லியன் மரக்கன்றுகளை நடுவதற்கு எதிர்பார்ப்பதாகவும் இதற்கு முன்பு மேற்கொள்ளப்பட்ட இவ் வாறான நிகழ்ச்சிகளின் போது நாட்டப்பட்ட மரக்கன்றுகளை பராமரித்திருந்தால் நாட்டில் வன வளம் அதிகரித்திருக்கு மென்றும் அவர் சுட்டிக்காட்டி னார்.

இதன் காரணமாக நடப் படும் ஒவ்வொரு மரக் கன் றுக்கும் உரிமையாளர் ஒரு வரை பெயரிடுவதற்கும் தீர் மானித்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (ஜ-4)

# சமூக ஊடகங்களில் பரவிய காணொளி பொலிஸார் அதிரடி நடவடிக்கை

(கொழும்பு)

சமூக ஊடகங்கள் மற்றும் தொலைக்காட்சிகளில் வெளி யாகிய காணொளிப் பதிவுக ளின் அடிப்படையில் மூடப்பட்ட புகையிரதக் கடவையூடாக பயணித்த பேருந்தின் சாரதி மற்றும் நடத்துநர் கைது செய் யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.


பயாகல பொலிஸ் பிரிவிற் குட்பட்ட தெற்கு பயாகல புகை யிரதக் கடவையின் மூடப்ப ட்டுள்ள கடவையூடாக அளுத் கமவிலிருந்து கொழும்பு நோக்கி பயணித்த அதிசொகுசு



தனியார் பேருந்தின் சாரதி மற்றும் நடத்துநரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

இது தொடர்பான மேலதிக விசா ரணைகளை பொலிஸார் முன் னெடுத்து வருகின்றனர். (நி-7)

# காலி கோட்டையில் நிலக்கரி அடுக்கு கண்டுபிடிப்பு



(கொழும்பு)

உலக பாரம்பரிய தளமாகக் கருதப்படும் காலி கோட்டையில் பண்டையகால மதிப்புள்ள நில க்கரியின் ஒரு அடுக்கு கண்டு பிடிக்கப்பட்டுள்ளதாக மத்திய கலாசார நிதியத்தின் மத்திய மாகாண திட்ட பணிப்பாளர் கலாநிதி நிலன் கூரே தெரி வித்துள்ளார்.

பிரிட்டிஷ் ஆட்சியின் போது "கருங்கோட்டையில்" சிறை ச்சாலையாக பயன்படுத்தப்பட்ட தளத்தில் இந்த நிலக்கரி அடுக்கு கண்டு பிடிக்கப்பட்டு ள்ளது.

இது குறித்து கலாநிதி நிலன் கூரே கூறுகையில்,

"இது ஆயுதங்களை தயாரிப்பதற்கான இடமாக பயன்படுத்தப்பட்டதாக ஆவணங்கள் காட்டுகின்றன. இந்த நோக்கத்திற்காக நிலக்கரி பயன்படுத்தப்பட்டது. புகை களால் சுவர்கள் கருகி விட்டன. அதனால்தான் "கறுப்புக் கோட்டை" என்ற பெயர் உருவாக்கப்பட்டது."

இந்த நிலக்கரி எந்த காலத்துக்குரியது என எவ்வித காலமும் நிர்ணயிக்கப்பட வில்லை என்றாலும், இது போர்த்துக்கீச மற்றும் டச்சு காலத்தைச் சேர்ந்ததாக இரு க்கலாம் என்று கலாநிதி நிலன் கூரே தெரிவித்தார். (நி-7)

# துப்பாக்கி முனையில் 3 கோடி ரூபா கொள்ளை

(கொழும்பு)

கட்டானவில் அமைந்துள்ள வீடொன்றில் துப்பாக்கி முனை யில் மூன்று கோடி ரூபா கொள் ளையடிக்கப்பட்ட சம்பவம் தொடர்பான விசாரணைகளுக் காக 60 பொலிஸ் அதிகாரி களை உள்ளடக்கிய ஆறு சிறப் புக் குழுக்கள் நிறுத்தப்பட்டு ள்ளன.

நீர்கொழும்பு - பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கட்டானை, 50 ஏக்கர் பகுதியில் வர்த்தகரொரு வரின் வீட்டிலேயே நேற்று முன்தினம் மூன்று கோடி ரூபா பணம் மற்றும் நகைகள் என் பன கொள்ளையிடப்பட்டன.

இது தொடர்பில் சந்தேக நபர்களை பொலிஸார் கைது செய்யும் நடவடிக்கையில் ஈடுபட்டனர். (ஜ-4)

# கடல் புறா

## ஏத்தனை படைக்கலங்கள்!

காலத்தின் பதிவு




இப்படி எண்ணங்களும், இதயமும் ஒருங்கே மயங்க மலைத்து நின்று, திரைச்சீலைக்கு மேலிருந்தே கண்களால் எதிரே இருந்த மோகன பிம்பத்தை எடை போட்டுக் கொண்டிருந்த இளைய பல்லவன், "வா வெளியே!" என்று இரண்டாம் முறை எழுந்த அதிகாரக் குரலின் காரணமாகக் கனவுலகத்திலிருந்து நனவுலகத்துக்கு வந்தவன், மெள்ளச் சமாளித்துக்கொண்டு, இடது கை பற்றிய சீலையை விடுத்து திரை மறைவிலிருந்து வெளியே வந்தான்.

வலது கையில் வாளை உருவிப் பிடித்த வண்ணம் வந்த அந்த வாலிபனை அந்த ஏந்திழையும் எந்தவிதப் படபடப்புமின்றி ஆராய்ந்தாள். ஆடவன் ஒருவன் தனது அறையில் ஒளிந்துகொண்டு இருக்கிறான் என்பதை அறிந்தும் கூச்சல் போடாமலும், அந்த அறையிலிருந்த ஒரு வாளை உருவிப் பிடித்துக் கொண்டு தன்னை மிரட்டி வெளியில் அவள் அழைத்ததையும் கண்ட கருணாகர பல்லவன், அச்சத்தை சொப்பனத்திலும் காணாத வீராங்கனை ஒருத்தியிடம் தான் சிக்கிக் கொண்டிருப்பதை உணர்ந்தான்.

அப்பொழுதுதான் அந்த அறையைச் சுற்றிக் கவனித்த இளைய பல்லவன், சுவர்களில் பல இடங்களில் பலவிதமான வாள்கள் தொங்கிக் கொண்டிருப்பதைப் பார்த்ததன்றி, அந்தப் பெண் வாளைப் பிடித்துக்கொண்டிருந்த முறையையும் பார்த்து, அவளுக்கு ஓரளவு வாள் பயிற்சி இருக்க வேண்டுமென்றும் ஊகித்துக் கொண்டான்.

அறையைச் சுற்றி அவன் கண்கள் சுழன்றதையும் தன் கைவாளின் மீது அவை கடைசியாக நிலைத்ததையும் கவனித்த அந்த அழகி, அவன் உள்ளத்தே ஓடிய எண்ணங்களைப் புரிந்துகொண்டவள் போல், "ஆம் எனக்கு வாளைப் பிடிக்கத் தெரியும். அவசியமானால் சுழற்றவும் முடியும். ஆகவே உன் கையிலுள்ள வாளைக் கீழே எறிந்துவிடு! எதிர்ப்பு பயனளிக்காது", என்றாள் திடமான குரலில்.

அவள் பேச்சும், பேச்சில் கண்ட துணிவும், கருணாகர பல்லவனுக்கு மென்மேலும் பிரமிப்பை அளித்தாலும் அவள் சொற்படி வாளைக் கீழே எறிய இஷ்டப்படாமல், "மன்னிக்க வேண்டும். இந்த வாள் என் ஆயுள் துணைவன். பல வருடங்களாக நாங்கள் இணை பிரியாதிருக்கிறோம். ஆகவே இப்பொழுது இதைப் புறக்கணிப்பதற்கில்லை, தவிர..." என்று பதில் சொல்ல முயன்று மென்று விழுங்கி இழுத்தான்.

அவள் வண்டு விழிகள் வியப்பினால் மலர்ந்தன. "தவிர, உம், சொல் மேலே!" என்று மலர் அதரங்கள் உத்தரவிட்டன.

அவள் அஞ்சன விழிகளை ஒரு முறை கருணாகர பல்லவனின் விழிகள் நன்றாக ஏறெடுத்துப் பார்த்தன. "வீரர்கள் தோல்வியுறும் போதுதான் வாளைக் கீழே எறிவார்கள்" என்று சுட்டிக் காட்டினான் துணிவுடன்.

அவள் இதழ்கள் இகழ்ச்சியால் சற்றே மடிந்தன. அப்படி அவை கடைசியில் மடிந்ததால் கன்னங்களில் விழுந்த குழிகளும் அவளுக்குப் புதுவிதமான அழகை அளித்ததைக் கருணாகர பல்லவன் கவனித்தான். அவன் தன்னைப் பல இடங்களிலும் கவனிப்பதைக் கண்டதால் மிகுந்த சங்கடமும் சீற்றமும் அடைந்த அழகி, "நீ ஆண்மகனானதால் என்னிடம் தோற்கமாட்டாய். சற்று விளையாடிப் பார்க்கலாம் என்று மனப்பால் குடிக்கிறாயா?' என்று இகழ்ச்சியும் கோபமும் தொனித்த குரலில் வினவினாள்.

கருணாகர பல்லவன் இளநகை புரிந்தான். "அப்படி நான் நிச்சயமாகச் சொல்லவில்லையே."

"எதை நிச்சயமாகச் சொல்லவில்லை?" மீண்டும் சீற்றத்துடன் எழுந்தது அவள் கேள்வி.

"உங்களிடம் தோற்கமாட்டேன் என்பதை".

"பெண் என்பதால் என்னைப் பார்த்து நகைக்கிறாயா?"

"இல்லை. இல்லை. நகைப்புக்கு இடமில்லை."

"வேறெதற்கு இடமிருக்கிறது?"

"பிரமிப்பிற்கு."

அந்த வாலிப வீரன் தன் அழகைப் பற்றிக் குறிப்பிடுகிறான் என்பதைச் சந்தேகமற உணர்ந்து கொண்ட அந்தப் பெண், ஒரு விநாடி தன் கால் பெருவிரலால் நிலத்தைக் கீறி இடையைச் சிறிது நெளித்துச் சற்றே சங்கடப்பட்டாலும், அடுத்த விநாடி அதை உதறிவிட்டு, "நீ சீக்கிரம் அந்த வாளைக் கீழே எறியாவிட்டால் உன் பிரமிப்பு இன்னும் அதிகமாகும்!" என்று கூறிவிட்டுக் கோபம் துளிர்த்த புன்முறுவலொன்றையும் உதடுகளில் படர விட்டாள்.

இப்பொழுதிருப்பதை விட அதிக பிரமிப்பு எப்படி ஏற்பட முடியும்?" என்று விஷமத்துடன் வினவினான் கருணாகர பல்லவன்.

"ஏற்பட வழியிருக்கிறது" என்றாள் அவளும் இகழ்ச்சியுடன்.

"என்ன வழி?"

பதிலுக்கு, "இதோ பார்!" என்று கூறிய அந்தப் பெண் என்ன செய்ய உத்தேசிக்கிறாள் என்பதை அவன் ஊகிக்கு முன்பாகவே அவள் கைவாள் திடீரெனச் சுழன்று இளைய பல்லவனது வாளை மின்னல் வேகத்தில் விர்ரென்று ஒருமுறை சுழற்றிடவே, திக்பிரமையடைந்த அந்த வீரன் எல்லையில்லாப் பிரமிப்புடன் அந்தப் பெண்ணைக் கூர்ந்து நோக்கினான். இன்னும் ஒரு விநாடி தான் அசந்திருந்தால் அவள் வாள் சுழன்ற வேகத்தில் தன் வாள் அந்த அறையின் மூலைக்குச் சென்றிருக்குமென்பதை உணர்ந்து கொண்ட அந்தப் பல்லவ வீரன், இத்தனை லாகவமாக வாளைச் சுழற்றக்கூடிய பெண்களும் இந்த நாட்டில் இருக்கின்றார்களா? என்று எண்ணிப் பார்த்து, மிதமிஞ்சிய வியப்புக்கு உள்ளாகி அந்த வியப்பின் குறிகள் முகமெங்கும் படரவும் நின்றான்.

பிரமிப்புக்கு உள்ளானது அவன் மட்டும் அல்ல, அந்தப் பெண்ணின் கண்களும் பிரமிப்பைக் கொட்டின. அதையும் கருணாகர பல்லவன் கவனிக்கத்தான் செய்தான். ஆனால், அவள் பிரமிப்படைய வேண்டிய காரணம் என்னவென்பதைப் புரிந்து கொள்ள முடியாததால் கேட்டான், "நீங்கள் என்ன அதிசயத்தைக் கண்டுவிட்டீர்கள்?" என்று.

"இதுவரை காணாத அதிசயத்தை இன்று கண்டேன்!" என்றாள் அவள். இதைச் சொன்ன அவள் குரலில் கோபமில்லை, இகழ்ச்சியுமில்லை. வியப்பும் பிரமிப்புமே மிதமிஞ்சி ஒலித்தன.

"என்ன அப்பேர்ப்பட்ட அதிசயம்?" என்று மீண்டும் வினவினான் கருணாகர பல்லவன்.

"என் வாள் சுழன்று, எதிரியின் வாள் பறக்காதது இதுதான் முதல் தடவை" என்றாள் அந்த அழகி.

"நான் எதிரியா?" என்று கேட்டான் கருணாகர பல்லவன்.

"இல்லையா?" என்று பதிலுக்குக் கேட்டாள் அந்தப் பெண்.

"இல்லை"

"அப்படியானால் கள்வனாய் இருக்க வேண்டும்."

"கள்வனுமல்ல."


"அப்படியானால் தமிழனா?"

இந்தக் கேள்வி மேலும் பிரமிப்பையே அளித்தது இளைய பல்லவனுக்கு. "கள்வனாயிராவிட்டால் தமிழனாயிருக்க வேண்டுமா?" என்று வினவினான் ஆச்சரியத்துடன்.

அவள் நிதானமாகப் பதில் சொன்னாள். "நீ நாணயமாக வாயில் வழியாக வரவில்லை. சாளரத்தின் மூலம் உள்ளே குதித்திருக்கிறாய்.

(தொடரும்...)

# தீமைகளை அகிம்சையால் வென்ற அண்ணல் காந்தி அடிகள்



**இன்று மகாத்மா காந்தியின் 151 ஆவது ஜெயந்தி தினமாகும்**

ஆயுதங்களில் வலிமையானது அகிம்சை. வாழ்வில் நிலையானதும் உயர்வானதும் சத்தியம் என்பதை அனைவருக்கும் உணர்த்திய காந்தியடிகளின் வாழ்வு மக்களுக்கு ஒரு சிறந்த பாடமாக அமைகின்றது. காந்தி அரசியல் ஞானி, ஆன்மீக ஞானி என்பதற்கப்பால் கீழைத்தேசத்தில் பெயர் குறிப்பிடக்கூடிய தத்துவவியலாளராகவும் விளங்குகின்றார்.

மகாத்மா என்று பாசத்துடன் அழைக்கப்படும் காந்தி, இந்தியாவின் சுதந்திரப்போராட்டத்தின் முக்கிய கதாநாயகர்களில் ஒருவராவார். அகிம்சையின் மீது அசைக்க முடியாத நம்பிக்கை கொண்டிருந்த அவர் சுதந்திரத்திற்கான அவரது போராட்டத்தில் அதே அணுகுமுறையைக் கையாண்டார். காந்திஜி அரசியல் சுதந்திரத்திற்காக மட்டும் போராடவில்லை. சாதி, மதம், பொருளாதார நிலை மற்றும் ஆண், பெண் சமத்துவ சமூகத்தினைக் கொண்ட ஒரு தேசத்திற்காகவும் போராடினார்.

புகழ்பெற்ற தத்துவார்த்த இயற்பியலாளர் ஆல்பர்ட் ஈன்ஸ்டீன் ஒருமுறை மகாத்மா காந்தியைப் பற்றிக் கூறும்போது, “வருகின்ற தலைமுறைகள் நன்றாக இருப்பினும் இதுபோன்ற ஒரு மனிதர் இரத்தமும் சதையுமாக இந்தப் பூமியின் மேல் உலாவினார் என்பதை அரிதாகவே நம்புவார்கள்” எனக் கூறியுள்ளார்.

காந்தியின் வாழ்க்கை இருவேறுபட்ட துருவங்களைக் கொண்டது. அவர் குஜராத் மாநிலத்திலுள்ள போர்பந்தரில் ஒரு சாதாரண குடும்பத்தில் பிறந்தார். ஆனால் செல்வந்தர் பிரிலாவின் மாளிகையில் டில்லியில் மறைந்தார். பல் துலக்கும் வேம்பிலைக்குச்சி ஒன்றையே நறுக்கி நறுக்கிப் பயன்படுத்திய அந்தச் சிக்கனக்காரர் உடல், அடுக்கிய சந்தன மரங்களின் சிதையில்தான் எரியூட்டப்பட்டது. அவர் தனது ஆரம்பக் கல்வியைப் பயின்றது ராஜ்கோட்டில். ஆனால் சட்டம் பயின்றது லண்டனில். அவரது போராட்ட பயிற்சிக்காலம் தென்னாபிரிக்கா பயிற்சியின் முதிர்ந்த நிலையின் பயன் இந்திய விடுதலை.

ஆரம்ப சட்டத்தரணியாக நீதிமன்றத்தில் பேச முடியாமல் திணறியவர் குரல் தான் பின்னர் பிரிட்டிஸ் அரசாங்கத்தையே நடுங்க வைத்தது. பிறப்பால் அவர் ஓர் இந்துதான். ஆனால் அவரைவிட இஸ்லாமியர் நலனில் அக்கறை உடைய வேறொருவரைக் காண்பது அரிதாயிருந்தது. நான் ஒரு கிறிஸ்தவர், இந்து, முஸ்லிம், யூதர் என்று சொல்லிக் கொண்ட சமரச ஞானியாக திகழ்ந்தார் காந்தி.

இந்திய தேசத்தின் தந்தை என்று போற்றப்படும் மோகனதாஸ் கரம்சந்த் காந்தி, காபா காந்தி - புத்லி பாய் தம்பதியருக்கு 1869 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் இரண்டாம் திகதி மகனாகப் பிறந்தார்.

அண்ணல் காந்தியடிகளின் அஹிம்சை முறையைக் குறித்து டாக்டர் எஸ். இராதாகிருஷ்ணன் பின்வருமாறு கூறியுள்ளார்,

“ஆயுதங்களே இல்லாத உலகில் நாம் எப்படி ஒற்றுமையுடனும் இசைவுடனும் வாழ முடியும் என்று காந்திஜி தயார் செய்து வந்தார். அதற்கு அவர் பயன்படுத்திய முறையானது அன்பு, சத்தியம், வலிந்து துன்பம் ஏற்கும் வலிமை ஆகியவற்றின் ஆதரவில் அமையும் சத்தியாக்கிரக முறை”

அண்ணல் காந்தியடிகளின் நினைவு நாளில் உலகில் எவருக்குமே சட்டென்று தோன்றக்கூடியவை அவர் உலகிற்கு வாழ்ந்து உணர்த்திய சத்திய நெறியும் அஹிம்சை வழியும் தான். அஹிம்சை வழியை மக்களுக்கு உணர்த்த மகான்களும் இறை தூதர்களும் எவ்வளவோ முயன்றிருக்கிறார்கள். ஆனால் காந்தியடிகள் வாழ்ந்தகாலம் ஆன்மீகமும் விஞ்ஞானமும் ஒன்றுடன் ஒன்று இரண்டறக் கலந்து உருவான காலமாகும்.

அறிவியல் வளர்ச்சியில் முழு அழிவை நோக்கி நாம் செல்லாமல் எப்படி அதே அறிவியலைப் பயன்படுத்தி மெஞ்ஞானத்தை வளர்த்து ஓர் அமைதியான உலகைப் படைக்க முடியும் என்று அண்ணல் காந்தியடிகள் நமக்குக் காட்டிவிட்டுச் சென்றார். ஒரு நாட்டுத் தலைவரை மற்றொரு நாட்டில் வாழும் மக்கள் தலைவராக ஏற்றுக்கொண்டதில்லை. தங்கள் நாட்டுத் தலைவர்களை மட்டுமே அவர்கள் தலைவர்களாக ஏற்றுக்கொண்டனர். ஆனால் இதற்கு விதிவிலக்காகத் திகழ்ந்தவர் மகாத்மா காந்தியடிகள். அவரை உலக மக்கள் அனைவரும் உலக நாடுகளின் தலைவர்களும் தங்களின் தலைவர் என ஏற்றுக்கொண்டனர். போற்றிக் கொண்டாடுகின்றனர்.

அண்ணல் காந்தியடிகள் நடத்திய அஹிம்சைப் போராட்டத்தின் ஆழத்தை உணர்ந்து கொண்ட மார்ட்டின் லூதர் கிங், நெல்சன் மண்டேலா தங்களுக்கு அண்ணல்காந்தியடிகளிடமிருந்தேதூண்டுதல் கிடைக்கிறது என்கிறார்கள். தீமையை எதிர்த்தே ஆக வேண்டும். அது வன்முறையிலா அஹிம்சையாலா என்பதுவே நம்முன் உள்ள கேள்வி. அஹிம்சை முறையில் அதிகப்படியான் வீரம், ஒழுங்கு, கட்டுப்பாடு, முயற்சி தேவைப்படுகிறது என்று மார்ட்டின் லூதர் கிங் காந்தியடிகளைப் பின்பற்றி முழங்கினார்.

இவ்வாறு எல்லோருக்கும் உதாரண புருஷராகத் திகழும் காந்தியடிகள் உலகம் போற்றும் உன்னத மனிதராக விளங்குகிறார்.

எம்.ஷாந்தன் சத்தியகீர்த்தி,
ஆசிரியர் “காந்தீயம்”
அகில இலங்கை காந்திசேவா சங்கம்.

## இயற்கைக்கும் மனிதனுக்குமிடையிலான உறவில் புதிய மாற்றத்தை ஏற்படுத்தும் தேவை உண்டு

### ஐ.நா.உயிர்ப்பல்வகைத்தன்மை மாநாட்டில் ஜனாதிபதி

(கொழும்பு)

இயற்கை வளங்களைப் பாதுகாப்பதற்கும் பேண்தகு முகாமைத்துவத்திற்கும் இலங்கை அரசாங்கம் அர்ப்பணிப்புடன் உள்ளதாக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் சபையின் 75 ஆவது பொதுச் சபை கூட்டத் தொடருடன் இணைந்ததாக ஐ.நா.தலைமையகத்தில் ஏற்பாடு செய்யப்பட்ட ஐ.நா.உயிர்ப் பல்வகைத்தன்மை தொடர்பான அரச தலைவர்கள் மாநாடு நேற்று முன்தினம் நடைபெற்றது.

இதில் காணொளி தொழில்நுட்பத்தினூடாக ஜனாதிபதி உரை யாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மத்திய மலை நாடு, சிங்கராஜ மழைக்காடுகள் ஆகிய இரண்டும் யுனெஸ்கோ இயற்கை மரபுரிமைகளின் தாயகமாக திகழ்கிறது.

மேலும் ஆறு இடங்கள் ஈர நிலம் பற்றிய ரம்சார் ஒப்பந்தத்தின் மூலம் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. எமது தனித்துவமான வளம் நிறைந்த உயிர் பல்வகைத்தன்மைக்கு பங்களிப்பு செய்யும் இந்த இயற்கை வளங்களை பாதுகாப்பதற்கும் நிலையாக அதனை முகாமைத்துவம் செய்வதற்கும் இலங்கை மிகுந்த அர்ப்பணிப்புடன் உள்ளது.

அண்மைய சில தசாப்தங்களாக பூகோள உயிர்ப்பல்வகைத்தன்மைக்கு ஏற்பட்ட பல அழிவுகளுக்கு மத்தியிலும் உயிர்ப்பல்வகைத்தன்மை பற்றிய ஒப்பந்தத்தில் விபரிக்கப்பட்டுள்ள உயிர்ப் பண்புகளை பாதுகாப்பதற்கு இலங்கை மிகுந்த அர்ப்பணிப்புடன் உள்ளது.

இயற்கைக்கும் மனிதர்களுக்கும் இடையிலான உறவுக்கும் தற்கால பூகோள சூழல் முகாமைத்துவத்திற்கும்இடையே ஒரு முழுமையான மாற்றத்தை ஏற்படுத்துவதற்கான தீர்க்கமான தேவை ஏற்பட்டுள்ளது.

பொதுநலவாய நாடுகள் அமைப்பின் ஒரு உறுப்பினர் என்ற வகையில் இலங்கை பொதுநலவாய நாடுகள் அமைப்பின் "நீல சாசனத்தை" (Blue Charter) 2018 ஆம் ஆண்டு ஏற்றுக்கொண்டதுடன். அதற்கேற்ப கண்டல் தாவர சுற்றாடல் முறைமை மற்றும் வாழ்வாதாரம் குறித்த பொதுநலவாய நாடுகள் அமைப்பின் "நீல சாசனத்தின்" செயற்குழுவிற்கு தலைமைத்துவத்தை வழங்குகின்றது.

இயற்கைக்கும் மனிதர்களுக்கும் இடையிலான உறவுக்கும் தற்கால பூகோள சூழல் முகாமைத்துவத்திற்கும்இடையே ஒரு முழுமையான மாற்றத்தை ஏற்படுத்துவதற்கான தீர்க்கமான தேவை ஏற்பட்டுள்ளது.

நகரங்கள் மற்றும் நகர் பிரதேசங்களை புனர்நிர்மாணம் செய்யும்போதுகூட முடிந்தளவு சுற்றாடல் முறைமையை பாதுகாப்பது குறித்து நாம் விழிப்பாக இருக்கிறோம்.

இந்த பிரபஞ்சமும் அதன் வளங்களும் பொறுப்பாளர்கள் என்ற வகையில் எம்மால் முடியுமானளவு எமது பாதுகாப்பின் கீழ் உள்ளவற்றை பாதுகாத்து எதிர்கால தலைமுறைக்கு கையளிப்பதற்கு நாம் உறுதிகொள்ள வேண்டும் என அவர் தெரிவித்தார். (ஜ-4)

## மின்கம்பத்தில் ஏறிப் போராட்டம்

(கொழும்பு)

வெல்லம்பிட்டி - நாகஹமுல்ல சந்தியில் அதிக வலுகொண்ட மின்சார இணைப்புடைய மின் கம்பம் ஒன்றில் ஏறி நபர் ஒருவர் எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளார்.

குறித்த நபரின் எதிர்ப்பு நடவடிக்கைக்கு இதுவரை காரணம் கண்டறியப்படவில்லை.

அத்துடன் குறித்த பகுதிக்குத் தீயணைப்புப் பிரிவினர் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதோடு அப்பகுதியில்வாகன நெரிசல் ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.(ஜ-4)

## தீக்கிரையான பயறு செய்கை



(திருகோணமலை)

திருகோணமலை, கந்தளாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் பல ஏக்கர் பயறு செய்கைகளுக்கு இனந்தெரியாதோரால் தீ வைக்கப்பட்டுள்ளது.


கந்தளாய் பேராறு பகுதியில் அமைந்துள்ள வயல் நிலங்களில் விவசாயிகள் பயறு செய்கைகளை மேற்கொண்டு வருகின்ற நிலையில் இவ்வாறு இனந்தெரியாதோரால் தீ வைக்கப்பட்டுள்ளன.

தற்போது பயறு செய்கை அறுவடை செய்து வருவதோடு அறுவடைக்கு தயாரான பல ஏக்கர் செய்கைகள் தீக்கிரையாகியுள்ளன.

சம்பவம் தொடர்பான விசாரணைகளை கந்தளாய் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஜ-4)

# எலிக்காய்ச்சல் பரவும் அபாயம்

**(கொழும்பு) லெப்டோஸ்பிரோசிஸ் என அழைக்கப்படும் ஒருவித காய்ச்சலால் பாதிக்கப்பட்ட நோயாளிகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதுடன் நாட்டில் எலிக்காய்ச்சல் பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளதாகவும் சுகாதார அமைச்சு எச்சரிக்கை விடுத்துள்ளது.**



சுகாதார அமைச்சின் தலைமை தொற்று நோயியல் நிபுணர் வைத்தியர் சுதத் சமரவீர இது குறித்து எச்சரிக்கை விடுத்துள்ளதுடன், மழைக்காலம் என்பதால் நாட்டு மக்களை அவதானமாக இருக்குமாறும் சுட்டிக்காட்டியுள்ளார்.

தற்போது நாட்டில் 6 ஆயிரத்து 96 லெப்டோஸ்பிரோசிஸ் நோயாளிகள் இருப்பதாகவும் லெப்டோஸ்பிரோசிஸின் விளைவாக 70 இறப்புகள் பதிவாகியுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (ஜ)

# மீண்டும் கணக்காளர் நாயகத்தின் கீழ் ஜனாதிபதி செயலகம், பிரதமர் அலுவலகம்

(கொழும்பு)

கணக்காளர் நாயகத்தின் கீழ் ஜனாதிபதி செயலகம் மற்றும் பிரதமர் அலுவலகத்தை கொண்டுவருவதற்கு 20 வது திருத்தத்தில் அரசாங்கம் ஒரு திருத்தத்தை கொண்டுவரும் என தெரியவந்துள்ளது.

அரசாங்கத்தால் முன்மொழியப்பட்டுள்ள அரசியலமைப்பின் 20 ஆவது திருத்த வரைபில் மேலும் சில திருத்தங்களை அரசாங்கம் முன்வைக்கும் என சட்டமா அதிபர் ஏற்கனவே நீதிமன்றத்திற்கு அறிவித்துள்ளார்.

அதன்படி பாராளுமன்றத்தில் இடம்பெறும் குழுநிலை விவாதத்தின்போது 20 ஆவது திருத்தத்தில் சுமார் 10-இற்கும் மேற்பட்ட மாற்றங்களை அரசாங்கம் கொண்டுவரும் என்றும் அதில் பெரும்பாலானவை பொறிமுறை மாற்றங்களாக இருக்கும் என்றும் தெரிய வந்துள்ளது.

குறிப்பாக முன்னர் ஜனாதிபதி செயலகம் மற்றும் பிரதமர் அலுவலகத்தை கணக்காளர் நாயகத்தின் கீழ் இருந்து விலக்கியதற்காக அரசாங்கத்திற்கு எதிராக பல விமர்சனங்கள் எழுந்தன.

மேலும் இரண்டரை ஆண்டுகளுக்குப் பின்னரே பாராளுமன்றத்தை கலைக்க ஜனாதிபதிக்கு அதிகாரம் வழங்கும் என்ற ஒரு விதியும் அதில் உள்ளடக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

ஆனால் வர்த்தமானி செய்யப்பட்ட அரசியலமைப்பின் 20 வது திருத்தத்தில் ஒரு வருடத்தில் ஜனாதிபதியால் பாராளுமன்றத்தை கலைக்க முடியும் என குறிப்பிடப்பட்டிருந்தது.

எனவே சட்டமா அதிபர் நீதிமன்றில் தெரிவித்தமைக்கு அமைவாக அரசாங்கம் குழுநிலை விவாதத்தின்போது 20 ஆவது திருத்த வரைவுக்கான இவ்வாறான சில திருத்தங்களை முன்வைக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஜ-4)

## facebook. (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2132

### சுயா



அழகைப் பார்த்து வருவதல்ல காதல், அழகை வராமல் பார்த்துக் கொள்வதுதான் உண்மையான காதல்...!

### கஜன்

நீ எவ்வளவு உயர்ந்தவன் என்பது உன் படிப்பிலோ உன் பணத்திலோ அல்லது உன் அறிவிலோ அல்ல..



மற்றவர்களை நீ எப்படி மதிக்கிறாய் என்பதில் தான் உள்ளது.


### சுரேஷ்

100 வார்த்தைகள் வலியை ஏற்படுத்தாது ஆனால் ஒரு நல்ல நண்பனின் மௌனம் இதயத்தில் அதிக கண்ணீரை ஏற்படுத்தி விடும்...



### மீரா

யார் சொன்னது? பெண் மட்டும்தான் உயிரை சுமப்பாள் என்று



ஒவ்வொரு ஆணின் இதயத்தை தொட்டு பாருங்கள். அதில் ஒரு பெண் நினைவு உயிராக இருக்கும்..!!

### சந்தியா





### பூஜா

கோபம் வரும் போது தலை குனிந்து கொள்பவன் வாழ்க்கையில் நிமிர்ந்து நடக்கிறான்..! கோபம் வரும் போது நிமிர்ந்து நடப்பவன் வாழ்க்கையில் குனிந்துகொள்கிறான்..!

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# பிரிட்டன் உயர்ஸ்தானிகருடன் ஜயனாத் கொலம்பகே சந்திப்பு



(கொழும்பு)

பிரித்தானிய உயர்ஸ்தானிகர் சாரா ஹல்டன் இலங்கையின் வெளிவிவகாரச் செயலர் அட்மிரல் பேராசிரியர் ஜயனாத் கொலம்பகேவை நேற்று முன்தினம் சந்தித்தார்.

இச்சந்திப்பின் போது இரு தரப்பு வர்த்தகம், முதலீட்டை ஊக்குவிப்பதற்கான ஒரு வரைபடத்தை மையமாகக் கொண்ட கலந்துரையாடல் இடம்பெற்றதுடன் கல்வி, சுகாதாரம், சுற்றுலாத்துறைகளைப் பலப்படுத்தி ஒருங்கிணைந்து செயற்படுவது குறித்தும் கவனம் செலுத்தப்பட்டது. (ஜ-4)

# செய்தித்துளிகள்

## மின் கட்டணங்களை செலுத்த ஒருவருடகாலம் சலுகை

(கொழும்பு)

சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபையின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ள ஹோட்டல்கள், வாசஸ்தலங்கள் மற்றும் வணிக வளாகங்களுக்கு மின் கட்டணங்களை செலுத்த ஒரு வருட சலுகைக் காலம் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

பிரதேச பொறியியலாளர் காரியாலயங்களுக்கு இது தொடர்பில் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

கொரோனா வைரஸ் பரவல் காரணமாக பல்வேறு இன்னல்களுக்கு முகம்கொடுத்துள்ள நிலையில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அதன்படி மார்ச் மாதம் முதலாம் திகதி தொடக்கம் ஓகஸ்ட் 31 வரையான கட்டணங்களை செப்டெம்பர் மாதம் முதலாம் திகதி தொடக்கம் அமுலுக்கு வரும் வகையில் 12 மாதங்களுக்கு தவணை முறையில் செலுத்த முடியுமென தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஜ-4)

++++++++++++++++++++++++

## சுற்றிவளைப்பில் 421 பேர் கைது


(கொழும்பு)

மேல் மாகாணத்தில் நேற்று முன்தினம் காலை 6 மணி முதல் நேற்றுக் காலை 5 மணிவரையான காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட சிறப்பு சோதனை நடவடிக்கையில் 421 பேர் கைது செய்யப்பட்டனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர்களில் அநேகமானோர் (163 பேர்) ஹெரோயின் வைத்திருந்த குற்றச்சாட்டுக்காக கைது செய்யப்பட்டனர்.

அதேபோல் கஞ்சாவுடன் 103 பேரும் சட்டவிரோத மதுபானத்துடன் 88 பேரும் ஐஸ் உள்ளிட்ட ஏனைய போதைப்பொருட்களுடன் 31 பேரும் கைதுசெய்யப்பட்டனர். இதுதவிர ஏனைய குற்றச்சாட்டுகளுக்காக 36 பேரும் கைது செய்யப்பட்டனர். (ஜ-4)

# ஆன்மீகம்



## பகைவனையும் நண்பனாக்கும் ரசவாதம்!

(நேற்றைய தொடர்ச்சி)

பழி தீர்ப்பது அரக்க குணம். மன்னிப்பதுதானே மனிதகுணம்! கண்ணைப் பிடுங்கியவர்களின் கண்ணைப் பறிப்பது என்று ஆகிவிட்டால் உலகமே குருடாகிவிடும் என்பதை நாம் உணர்ந்து கொள்ள வேண்டாமா? பகைமை உணர்வு என்னும் நெருப்பிற்கு நாம் நெய் ஊற்றி வளர்த்தால், அது பழிவாங்க பாதகமான செயல்களைச் செய்யவும் தயங்காது. பழிதீர்ப்பது நம்மைத் தீராப்பழிக்கு ஆளாக்கிவிடும் என்பதைத் தெரிந்து கொள்ள வேண்டும். நாம் நன்கு அறிந்த இராமாயணக் கதையில் என்ன நடந்தது? சிறு வயதில் இராமபிரான் தன் கூன் முதுகைக் கேலி செய்து மண் உருண்டை எய்தான் என்பதை மனதில் வைத்துக் கொண்டே வன்மத்தை வளர்த்தாள் மந்தரை எனும் கூனி. அந்த சமயத்திலேயே அவனை அதட்டியிருக்கலாம்.

இது தவறானதல்லவா என்று தட்டிக் கேட்டிருக்கலாம். ஆனால், புகைவிட்டு எரியும்படி பகை உணர்வை வளர்த்தாள். அவன் பட்டாபிஷேகத்தைப் பறித்தாள். அதனால் என்ன நடந்தது? 'படு பாதகி' என்று தீராத பழியைத்தானே அவள் பட்டமாகப் பெற்றாள். அனைவர் முன்னிலையிலும் கூனிக்குறுகும் நிலைதானே அந்த கூனிக்கு ஏற்பட்டது? தன்னை எதிர்ப்பவனைத் தண்டிப்பவனுக்குப் பழி தீர்த்து விட்டோம் என்று அந்த ஒரு நாளில் ஒரு அற்ப சுகம் தோன்றும். ஆனால், அதைப் பொறுத்துக் கொண்டவனுக்கு அவன் வாழ்கிற காலம் வரை, ஏன் அவன் வாழ்ந்து முடிந்த பின்பும் வரலாறு அவனை வாழ்த்திக் கொண்டே இருக்கும். புத்தர், இயேசுநாதர், நபிகள் நாயகம், சோக்ரடீஸ், மகாத்மா காந்தி இவர்களை உலகத்தின் உதடுகள் உச்சரித்துக் கொண்டே இருப்பதற்குக் காரணம்?

பகைவர்களுக்கும் அருளிய அவர்களின் பண்புதான். பொறுத்தார்க்குப் பொன்றும் துணையும் புகழ் என்று போற்றுகிறார் திருவள்ளுவர். இயேசுநாதர் தன் சீடர்களுடன் இறுதி விருந்தில் பங்கேற்றார். அனைத்து சீடர்களின் கால்களையும் அவரே நீர் ஊற்றி சுத்தம் செய்தார். சீடர்களில் ஒருவனான யூதாஸ் தன்னைக் காட்டிக் கொடுப்பான் என்று அறிந்தும் அவனுக்கும் கருணை காட்டினார். அவன் பாதங்களையும் கழுவினார்.

சிலுவையில் அவரை அறைந்த போதும் 'பிதாவே! அறியாமல் செய்யும் இவர்களை மன்னியுங்கள்! என்று மனமுருகி வேண்டினார், கிரேக்க சிந்தனையாளரான சோக்ரடீஸ் தன் எதிரிகள் கொடுத்த கோப்பை விஷத்தையும் முகமலர்ச்சியுடன் அருந்தினார்.

கோப்பை விஷத்தைக் கொண்டு வந்தவனையும் கூட 'நலமுடன் வாழ்க' என்று கொண்டாடினார். சோக்ரடீஸின் இந்த மன்னித்தருளும் பாங்கை, தீர்க்கதரிசனத்தால் மனத்தினால் கண்டதுபோல் அன்றே மொழிந்திருக்கிறார் நம் ஆசான் திருவள்ளுவர். 'பெயக் கண்டும் நஞ்சுண்டமைவர் நயத்தக்க நாகரிகம் வேண்டுபவர்.' பித்தளையையும் தங்கமாக்கும் ரசவாதம் போல் பகைவனையும் நண்பனாக்கும் ரசவாதம்தான் நயத்தக்க நாகரிகம்.

அகில உலகமும் விரும்பிக் கொண்டாடும் அந்த நாகரிகம் அடைந்தவர்களாக நாம் அனைவரும் ஆனால், வன்முறை இல்லாத வல்லரசாக தேசம் பொலிவு பெறும்! 'முறையாக வாழ்வோர்க்கு எது நாகரிகம்? முன்னோர்கள் சொன்னார்கள் அது நாகரிகம்!' என்று பாடுகிறார் காவியக் கவிஞர் வாலி.

# சந்தைகளில் நேற்றைய விலை


| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 120 | 120 | 120 | 120 |
| உருளைக்கிழங்கு | 140 | 140 | 140 | 140 |
| பச்சைமிளகாய் | 350 | 300 | 260 | .300 |
| தக்காளி | 180 | 180 | 160 | 200 |
| மரவள்ளிக்கிழங்கு | 80 | 80 | 100 | 80 |
| கோவா | 120 | 150 | 120 | 120 |
| கரட் | 100 | 200 | 200 | 200 |
| பூசணி | 80 | 120 | 90 | 80 |
| புடோல் | 100 | 90 | 80 | 100 |
| வாழைக்காய் | 80 | 110 | 60 | 100 |
| சின்ன வெங்காயம் | 180 | 180 | 180-200 | 200 |
| பெரிய வெங்காயம் | 180 | 190 | 180 | 200 |
| பாகற்காய் | 250 | 300 | 250 | 240 |
| வெண்டிக்காய் | 100 | 100 | 70 | 100 |
| கருணைக் கிழங்கு | 100 | 120 | 120 | 120 |
| பயற்றங்காய் | 140 | 130 | 100 | 120 |
| லீக்ஸ் | 100 | 100 | 90 | 100 |
| பீற்றூட் | 80 | 100 | 100 | 100 |
| கறிமிளகாய் | 350 | 300 | 260 | 30 |
| முருங்கைக்காய் | 200 | 200 | 150 | 80 |
| போஞ்சி | 300 | 320 | 250 | 300 |
| கத்தரிதம்புள்ள | 100 | 80 | 120 | 100 |
| கீரை - 1 பிடி | 30 | 30 | 40 | 40 |
| தேசிக்காய் | 80 | 80 | 100 | 120 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 100 | 70 | 60-80 |
| இராசவள்ளி | 280 | -- | -- | -- |
| வெங்காயப்பூ | 240 | 250 | -- | -- |
| முள்ளங்கி | 80 | 80 | 70 | 80 |
| பொன்னாங்காணி | 40 | 35 | 50 | 40 |
| வல்லாரை | 20 | 70 | 20 | 30 |
| ஈரப்பலா | 50 | -- | -- | -- |



# சிறுவர் அரங்கம்

## வாசிப்பு மாதம் ஒக்டோபர்-2020

## வால் அறுந்த கரடி



முன்னொரு காலத்தில் இமயமலைச் சாரலில் பனி மிகவும் கடுமையாக இருந்தது. அங்கே சில செம்படவர்கள் மீன்பிடித்துக் கூடையில் வைத்திருந்தார்கள். ஒரு குள்ள நரி சில மீன்களைத் திருடிக் கொண்டு ஓடிற்று. அதன் எதிரில் ஒரு கரடி வந்தது.

"ஐயா நரியாரே உமக்கு இன்று நல்ல வேட்டைபோல் இருக்கிறதே. இவ்வளவு நல்ல மீன் எங்கே கிடைத்தது? என்று கரடி கேட்டது.

ஓர் இடத்தில் அருமையான மீன் இருக்கிறது. இன்றிரவு என்னோடு வந்தால் அவைகளை எப்படிப் பிடிப்பது என்பதை உமக்குக் காட்டுகிறேன் என்று குள்ளநரி சொல்லிற்று.

"அப்படியே ஆகட்டும். என்னுடைய தூண்டிலும் முள்ளும் எடுத்துக்கொண்டு வரட்டுமா?" என்று கரடி கேட்டது.

"தூண்டில் முள் வேண்டியதில்லை. நான் எப்போதும் என் வாலினாலேதான் மீன் பிடிப்பது வழக்கம். உமக்கு நீளமாக வால் இருப்பதால் நீர் என்னை விட நன்றாய் மீன் பிடிக்கலாம்" என்று நரி சொல்லிற்று.

இரவு வந்ததும் குள்ளநரி கரடியை இமயமலையின் அடிவாரத்திற்கு அழைத்துச் சென்றது. அங்கே ஒரு சிறிய ஓடை இருந்தது. அதில் தண்ணீர் பனிக்கட்டியாக இறுகிப் போய் இருந்தது. பனிக்கட்டியில் ஓரிடத்தில் கொஞ்சம் பிளவு இருந்தது.

"இங்கே உட்கார்ந்து உமது வாலைப் பனிக்கட்டியின் சந்தில் நுழைத்து வைக்க வேண்டும். நீண்ட நேரம் வைத்திருந்தால் மீன்கள் வந்து உமது வாலைப் பிடித்துக்கொள்ளும். பிறகு ஒரே மூச்சில் வாலைப் பிடுங்கி வெளியில் எடுக்க வேண்டும்" என்று குள்ளநரி சூழ்ச்சியாகச் சொல்லிற்று.

கரடி இதை நம்பிக்கொண்டு குள்ளநரி சொல்லிய படியே செய்தது. நெடுநேரம் வரையில் அசையாமல் உட்கார்ந்திருந்தது. அதனால் குளிர் தாங்க முடியவில்லை. மெல்ல உடலை அசைத்துப் பார்த்தது.

"ஐயோ என் வால் பனிக்கட்டியில் ஒட்டிக் கொண்டதே. மீன்களை வெளியில் இழுக்கட்டுமா?" என்று கரடி குள்ளநரியைக் கேட்டது. அதன் வால் பனிக்கட்டியுடன் அப்படியே உறைந்து போய் இருந்தது.

"இதற்குள் எடுத்துவிடக் கூடாது. இன்னும் கொஞ்சம் மீன்கள் சேரும் வரையில் பொறுமையுடன் இருக்க வேண்டும். நீர் நல்ல வலிமையுடையவர் தானே. இன்னும் கொஞ்ச நேரம் பொறுத்துக் கொள்ளக் கூடாதா?" என்று நரி சொல்லிற்று.

கரடியும் விடியற்காலை வரையில் பொறுமையுடன் காத்திருந்தது. ஆற்றங்கரையில் நாய்கள் குலைக்கும் ஓசை கேட்டது. கரடி துள்ளிக் குதித்தது. தன்னால் ஆன மட்டும் வாலை இழுத்துப் பார்த்தது. அது வெளியில் வரவில்லை. பனிக்கட்டியில் நன்றாக ஒட்டிக் கொண்டு இருந்தது.


மறுபடியும் மூச்சுப் பிடித்துக்கொண்டு ஒரே இழுப்பாக இழுத்தது. அதன் வால் "படீர்" என்று அறுந்து போயிற்று. குள்ள நரிக்குச் சிரிப்புத் தாங்க முடியவில்லை. அது சிரித்துக்கொண்டே ஓடிப்போய் விட்டது. பெரிய கரடிக்கு வால் போனதிலிருந்து அதற்குத் தோன்றிய குட்டிகளுக்கெல்லாம் வால் குட்டையாகவே ஆகி விட்டது.

தந்திர நரியுரை கேட்டதனால்
தன் வால் இழந்தது கரடியுமே

தொகுப்பு: புத்தூர் பொது நூல் நிலையம்

# ராஜராஜ சோழப்பேரரசின் வரலாறு

## குடி உயரக் கோன் உயரும்




வீரசோழ வடவாறு

சாலியர் எனப்படுபவர் நெசவுத் தொழில் செய்பவர்கள்.

அரண்மனை, திருக்கோயில் இவற்றைச் சார்ந்தவர்களுக்குத் தேவையான உடைகளைத் தரும் சாலியர்கள் உள்ளாலையில் வசிக்க அனுமதிக்கப்பட்டார்கள்.

இவர்களோடு கால்நடைகள் வளர்க்கும் மாயன்சுற்றி என்கின்ற இடையர்களும் வசித்து உள்ளார்கள்.

உள்ளாலையில் இன்னொரு பகுதி உண்டு. அது, போரில் இடுபடும் போது சிறைப்படும் மற்ற நாட்டு மன்னர்களின் மனைவிகள், அவர்கள் வீட்டுப் பெண்கள் வசிக்கும் பகுதி.

இந்தப் பகுதிக்கு வேளம் என்று பெயர். (வேளம் பகுதியில் பணி மகளிர், ஆயர்கள் திருமஞ்சனத்தார், திருப்பரிகலத்தார் ஆகியோரும் வசித்துள்ளார்கள்) வேளம் ஏற்றுதல் என்றால் அடிமைப்படுத்தப்பட்ட உயர்குடிப் பெண்டிரை வேலைக்காரியாகவும் போகத்துக்குரியவளாகவும் மாற்றுதல் என்று பொருள்.

இது, இன்றைய ஜனநாயகக் காலத்தில் அநியாயமாகப்பட்டாலும் அன்று இதுபோன்ற பல செயற்பாடுகள் இயல்பாக ஏற்றுக் கொள்ளப்படிருந்தன. ஒவ்வொரு யுகத்துக்கும் ஒவ்வொரு தர்மங்கள்.

உள்ளாலைக்கு வெளியே அதாவது புற நகர்ப் பகுதி புறம்படி என்றழைக்கப்பட்டது. இது பற்றிய பல தகவல்கள் தஞ்சைப் பெரிய கோயில் கல்வெட்டுக்களில் உண்டு.

புறம்பாடியில் பெருந்தெருக்கள், வேளங்கள், படைவீடு, அங்காடிகள், பேரங்காடிகள், கோயில், மடவிளாகங்கள், மடப்பள்ளித் தெருக்கள் போன்றவை இருந்திருக்கின்றன.

இப்புற நகரில் வீரசோழ வடவாறு என்கின்ற காவிரியின் கிளை நதி கிழக்கு நோக்கி ஓடி மக்களின் வாழ்வாதாரத்துக்கு உதவியிருக்கின்றது.

தெருக்கள் அனைத்திற்கும் ராஜராஜனின் விருதுப் பெயர்களே சூட்டப்பட்டன. உதாரணத்துக்கு ஜெயங்கொண்ட சோழப் பெருந்தெரு, ராஜ வித்யாதரப் பெருந்தெரு, வீரச்சோழப் பெருந்தெரு, மும்முடிச் சோழப் பெருந்தெரு, ராஜராஜனின் தாய் வானவன் மாதேவிப் பெயரிலும் ஒரு தெரு அமைக்கப்பட்டது.

**விலைவாசி**

விலைவாசியைப் பற்றி அறிந்து கொள்ளும் முன், அந்தக் கால அளவைகளைப் பற்றித் தெரிந்து கொண்டால் அடுத்து வருகின்ற வரிகள் உங்களுக்கு எளிதாக விளங்கும்.

சோழர் காலத்து நிறுத்தல் அளவைகள்: மூன்றே முக்கால் குன்றி மணி எடை-ஒரு பண வெடை; முப்பத்தி ரெண்டு குன்றி மணி எடை- ஒரு விராகன் எடை; பத்து விராகன் எடை- ஒரு பலம்; இரண்டு குன்றி மணி எடை- ஒரு உளுந்து எடை; ஒரு ரூபாய் எடை- ஒரு தோலா; மூன்று தோலா- ஒரு பலம்; எட்டு பலம் -ஒரு சேர்; நாற்பது பலம்- ஒரு வீசை; ஐம்பது பலம்-ஒரு தூக்கு; இரண்டு தூக்கு- ஒரு துலாம். ஒரு குன்றி எடை- நூற்றி முப்பது மில்லி கிராம்; ஒரு பணவெடை-நானூற்றி எண்பத்தெட்டு மில்லி கிராம்; ஒரு தோலா - அண்ணளவாக பன்னிரண்டு கிராம் (துல்லியமாக 11.7 கிராம்); ஒரு பலம்-முப்பத்து ஐந்து கிராம்; ஒரு வீசை-ஆயிரத்து நானூறு கிராம்; ஒரு விராகன்- நான்கு கிராம்.

(தொடரும்)

கண்ணில்லாத கழுகு வெறும் சிறகு கொண்டு பறக்க முடியாது. ஞானக் கண்ணில்லாத வாழ்வு அத்தகையது. – சின்மயானந்தர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## சிங்கள மாணவர்களுக்கு எடுத்துக் கூறுங்கள்

இனப்பிரச்சினைக்கான தீர்வு சாத்தியமாக வேண்டுமாயின், சிங்கள மக்களும் எமக்குப் பக்க துணையாக இருக்க வேண்டும்.

தமிழ் மக்களின் பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட வேண்டும். அவர்களும் எங்களைப் போல உரிமைகளோடு வாழ வேண்டும் என்ற சிந்தனையுடைய சிங்கள மக்கள் பலர் உள்ளனர்.

எனினும் அவர்களின் சிந்தனை பேரினவாதக் கோசத்துக்குள் அடங்கிக் கிடக்கிறது.

எனவே தமிழ் மக்களாகிய நாம் எமது நியாயமான கோரிக்கைகளை ஏற்றுக் கொள்ளக்கூடிய சிங்கள மக்களை எமக்குப் பக்க பலமாக ஆக்கிக் கொள்ள வேண்டும்.

இதற்கான உபாயங்களை நம் புத்திஜீவிகளும் அரசியல்வாதிகளும் சேர்ந்து தயாரிப்பது அவசியம்.

தமிழ் மக்கள் தொடர்பில் சிங்கள அரசியல்வாதிகளும் சிங்கள ஊடகங்களும் பரப்புகின்ற அபத்தமான பிரசாரங்கள், சிங்கள மக்களை மாயைக்குள் மடக்கி வைத்துள்ளது.

தமிழர் தாயகத்தில் சிங்கள மக்கள் குடியிருந்ததான கட்டுக்கதைகளும் திரிபுபடுத்தல்களும் தமிழ் மக்கள் தொடர்பில் தவறான கருத்துருவாக்கத்தைத் தென்பகுதியில் ஏற்படுத்தி வருகிறது என்பது மறுக்க முடியாத உண்மை.

இந்நிலையில் உண்மையைத் தெளிவுபடுத்தும் பணியை தமிழ்த் தரப்புகள் செய்தாக வேண்டும். இது விடயத்தில் எமக்கிருக்கக் கூடிய நல்லதொரு சந்தர்ப்பம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் கற்கின்ற சிங்கள மாணவர்களாவர்.

கடந்த காலங்களில் சிங்கள மாணவர்கள் தமிழ் விரிவுரையாளர்களிடம் கற்பதற்கான சந்தர்ப்பம் மிகக் குறைவாகவே இருந்தது.

ஆனால் யாழ்ப்பாணப் பல்லைக்கழகத்தில் கற்கின்ற சிங்கள மாணவர்கள் 99 வீதம் தமிழ் விரிவுரையாளர்களிடம் கற்கின்றனர்.

எனவே இஃது நமக்குக் கிடைத்த ஒரு நல்ல சந்தர்ப்பம். சிங்கள மாணவர்களை உடைய தமிழ் விரிவுரையாளர்கள்; தமிழ் விரிவுரையாளர்களிடம் கற்கின்ற சிங்கள மாணவர்கள் என்ற இருதரப்பு உறவு, சிங்கள – தமிழ் மக்களிடையே நல்லதொரு தொடர்பாடலையும் புரிதலையும் ஏற்படுத்தக்கூடியது.

ஆகையால் நம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் தங்களின் கருத்தூட்டலில் தமிழ் மக்களின் அவலங்களையும் அவர்களுக்கான உரிமை மறுப்புக்களையும் மெல்ல மெல்ல எடுத்துக்கூற வேண்டும்.

ஆசிரிய – மாணவர் உறவில்; இந்த எடுத்துரைப்பு நிச்சயமாக நேர்க்கணிய விளைவை சிங்கள மாணவர்களிடமும் அதனூடு சிங்கள மக்களிடமும் ஏற்படுத்தும்.

ஆக, இது விடயத்தில் கவனம் செலுத்துவது சாலச் சிறப்புடையது.

# அடுத்த தேர்தலை கண்காணிப்பது மிகவும் சவாலானதாகவே இருக்கும்

## மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையப் பணிப்பாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

அடுத்த தேர்தலை அல்லது சர்வஜன வாக்கெடுப்பை கண்காணிப்பது சவாலானதாக இருக்கும், என மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தின் பணிப்பாளர் கலாநிதி பாக்கியசோதி சரவணமுத்து தெரிவித்துள்ளார்.

தேர்தல் வன்முறைகளை கண்காணிக்கும் நிலையத்தின் மாவட்ட இணைப்பாளர்களுடனான சந்திப்பின்போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

ஏனெனில், மூன்றில் இரண்டு ஆணையை மீண்டும் உறுதிப்படுத்துவதற்காக அரசாங்கம் எல்லாவற்றையும் செய்யும் என்றும் அவர் மேலும்தெரிவித்து ள்ளார்.

ஜனாதிபதி தேர்தல், பொதுத் தேர்தல் அனுபவங்கள் குறித்து ஆராய்வதற்காகவும், சர்வஜன வாக்கெடுப்பு மற்றும் மாகாண சபைத் தேர்தலை எதிர்கொள்வது குறித்து கலந்துரையாடுவதற்காகவும், தேர்தல் வன்முறைகளை கண்காணிக்கும் நிலையத்தின் மாவட்ட இணைப்பாளர்களுக்கான கலந்துரையாடல் நடத்தப்பட்டிருந்தது. (ம-03)

### சரசாலை குருவிக்காட்டில்

## பொலித்தீன்களை அகற்றும் செயற்திட்டம் நாளை

(யாழ்ப்பாணம்)

" விதையனைத்தும் விருட்சமே " செயற்திட்டத்தின் ஊடாக "பிளாஸ்ரிக் அற்ற யாழை நோக்கிய பயணம் " என்னும் தொனிப்பொருளில் மூன்றாவது கட்ட நகர்வாக நாளை சனிக்கிழமை காலை 8.00 மணி தொடக்கம் மதியம் 12.00 மணி வரை சாவகச்சேரியில் உள்ள சரசாலை குரு விக்காட்டில் உள்ள பொலி த்தீன்களை அகற்றுவதற்கு ஒழுங்கமைப்புகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இச் செயற்திட்டத்திற்கு சமூக ஆர்வலர்களையும் தன்னார்வத் தொண்டர்களையும் கலந்து கொள்ளுமாறு செயற்திட்ட அமைப்பாளர் கேட்டுக் கொண்டுள்ளார் (ம-03)

## வாழ்வைப் பொன்னாக்கும் வைர வரிகள்

உயர்ந்த குறிக்கோளைத் தேர்ந்தெடுத்து அதை நோக்கி முழு ஈடுபாட்டுடன் உழைக்கத் தொடங்குங்கள். – சின்மயானந்தர்

## இந்து சமய தத்துவங்கள் ஐந்நூறு

ஈமச்சடங்குகள் எல்லாம் பொருள் செறிந்தவை யாகும். இறந்த தந்தைக்கு முன் மைந்தன் தோளில் நீர் சுமந்த குடத்தை வைத்துக் கொள்வான். நாவிதனார் தண்ணீர்க் குடத்துடன் மூன்று முறை சுற்றச் செய்து மூன்று ஓட்டை விட்டு அப்படியே உடைத்து விட்டுத் திரும்பிப் பார்க்காமல் போ என்பார். (தொடரும்)

## ஸ்ரீஸ்ரீ ரவிசங்கர் சுவாமியின் சிந்தனையில் இருந்து

### சத்தியம் பரம் தீமஹி

சத்தியம் பரம் தீமஹி- எனது விழிப்புணர்வில் (தெரிநிலை உணர்வில்) எல்லாம் கடந்த மேதன நிலையின் சத்தியமும் தெய்வீகமும் மேலெழுந்து உயர்ந்து விளங்குகின்றன. அறிவுதான் உலகைப் பிரிக்கிறது. அதே அறிவால், தெய்வீகத்தில் ஊறி, உலகை ஒன்று சேர்க்க முடியும். அறிவு உலகார்ந்த விடயங்களைப் பற்றி விவாதிக்கும் போது இருப்பதையெல்லாம் பிரிக்கிறது. அறிவானது ஞானம், விவேகம், சத்தியம் பற்றி விவாதிக்கும் போது எல்லாவற்றையும் இணைக்கிறது. அது மோன நிலையைத் தருகிறது. (மெய்மறந்த நிலை) அது தனது உண்மை இயல்பின் இரண்டற்ற நிலையை மறுபடியும் கண்டு கொள்கிறது.

நீ குறை கூறினாலும் கவிதை புனைந்தாலும் அல்லது ஞானத்தைப் பற்றிப் பேசினாலும் தங்கு தடையற்ற தொடர்ச்சிக்கு நீயே சாட்சியாக இருக்கிறாய். யாரோ ஒருவர் குறை சொல்கின்றார் அல்லது நியாயப்படுத்திப் பேசுகிறார். அவர்கள் முயற்சி ஏதுமின்றி மிக இயல்பாகப் பேசிக்கொண்டே போகின்றனர். அதேபோல் நீ ஆத்மஞானத்தைப் பற்றிப் பேசும் போது அல்லது முயற்சி ஏதுமின்றி மிக இயல்பாக ஒரு கவிதை புனையும் போது அறிவிலிருந்து தங்கு தடையற்ற தொடர்ச்சி இருக்கிறது. (தொடரும்)

## வீடு புகுந்து தாய், மகன் மீது வாள் வெட்டுத் தாக்குதல்

### நீர்வேலிப் பகுதியில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

நீர்வேலி சந்திக்கு அண்மையாக உள்ள வீட்டிற்குள் புகுந்த வன்முறைக் கும்பல் இளைஞன் மீது சராமாரியாக வாள்வெட்டுத் தாக்குதலை நடத்தியுள்ளது. மகனைக் காப்பாற்ற முற்பட்ட தாயார் மீதும் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இருவரும்படுகாயமடைந்த நிலையில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர் என்று கோப்பாய் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த வன்முறைச் சம்பவம் நேற்று முன்தினம் இரவு 8 மணியளவில்இடம்பெற்றுள்ளது.

சம்பவத்தில் பு.சிவா (வயது -30) அவரது தாயார் ரேணுகா (வயது -50) ஆகிய இருவர் மீதே வீடு புகுந்து இந்தத் தாக்குதல் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

3 மோட்டார் சைக்கிள்களில்வந்த 6 பேர்கொண்ட கும்பலே இந்தத் தாக்குதலை முன்னெடுத்துள்ளது என்று கோப்பாய் பொலிஸார் தெரிவித் தனர்.

வன்முறைக் கும்பல் வாள்கள், கம்பிகள் கொண்டே தாக்குதலை நடத்தியுள்ளது. வீட்டிலிருந்த பெறுமதியான பொருள்களை அடித்துச் சேதப்படுத்தியும் தீயிட்டு எரித்தும் அட்டூழியத்தில் ஈடுபட்டுவிட்டு வன்முறைக்கும்பல்தப்பித்துள்ளது.

கோப்பாய்பொலிஸார், மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ம-03)

## அறிந்துகொள்ள வேண்டிய ஆன்மீகத் தகவல்கள்

### அழகன் முருகப்பெருமானின் ஆயுதங்கள்

**கோழிக் கொடி**

முருகனுக்குக் கொடியாக விளங்குவது கோழி. கோழிக்கு சேவல் (குக்குடம்) என்றும் பெயர். சேவலாகிய கோழி ஒளியை விரும்புவது. எனவே அது அறியாமை என்னும் இருளைப் போக்கி மெய்யறிவாகிய ஒளியைப் பரப்பும் முருகனின் கொடியாக விளங்குவது பொருத்தமாகும்.

வைகறையில் கோழி கூவுதல் ஓங்கார மந்திரத்தை ஒளிவடிவில் உலகுக்கு உணர்த்துவது ஆகும். எனவே, கோழியை நாத தத்துவம் என்பர். நாதம் இல்லையேல் நாறிலமே இல்லை. சேவல் நம் உயிர்க்குக் காவல். சிவஞான வடிவாகவே சேவல் விளங்குகின்றது.

முருகன் கோழிக் கொடியேந்தி நம்மை எல்லாம் சிவஞானப் பேரொளியில் துய்க்கச் செய்து அருளுகின்றார்.

திருச்செங்கோட்டில் முருகப் பெருமான் இடது கரத்தில் சேவலைப் பிடித்துள்ள அரிய அழகுக் கோலம் அருணகிரியார் மனத்தில் என்றும் நீங்கரமல் அக்காட்சி வேண்டியே,

"சென்றே இடங்கள் கந்தா எனும் போது செஞ்சேவல் கொண்டு வரவேணும்" என்று செங்கோட்டு வேலவனை வேண்டுவார். (பாடல் 585, 'அன்பாக வந்து' - திருச்செங்கோடு)

"குற்றமற்றவர் உளத்தில் உறைவோனே! குக்குடக் கொடி தரித்த பெருமாளே"- என்பார் மற்றொரு திருப்புகழில் (பாடல் 1295; 'நித்தம் உற்றுனை' - பொதுப்பாடல்கள்). கோழி அக்னி தேவனின் அம்சமாகும். (தொடரும்)

## கொல்கத்தாவிடம் வீழ்ந்தது ராஜஸ்தான்

ஐ.பி.எல். கிரிக்கெட்டின் 12 ஆவது லீக் போட்டியில் கொல்கத்தா நைட் ரைடர்ஸ் - ராஜஸ்தான் ராயல்ஸ் அணிகளுக்கு இடையே நடைபெற்றது.

ராஜஸ்தான் ராயல்ஸ் டாஸ் வென்று பந்து வீச்சை தேர்வு செய்தது.

அதன்படி கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணியின் ஷுப்மான் கில், சுனில் நரைன் ஆகியோர் தொடக்க வீரர்களாக களம் இறங்கினர்.

சுனில் நரைன் 15 ரன்னில் ஆட்டமிழந்தார். அடுத்து வந்த நிதிஷ் ராணா ஷுப்மான் கில் உடன் இணைந்து சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தினார்.

10 ஆவது ஓவரின் கடைசி பந்தில் நிதிஷ் ராணா 22 ரன்கள் எடுத்த நிலையில் ஆட்டமிழந்தார்.

சிறப்பாக விளையாடி வந்த ஷுப்மான் கில் 34 பந்தில் 47 ரன்கள் எடுத்த நிலையில் ஆட்டமிழந்தார். அதன்பின் வந்த அந்த்ரே ரஸல் 24 ரன்னிலும், தினேஷ் கார்த்திக் 1 ரன்னிலும் ஆட்டமிழக்க கொல்கத்தாவின் ரன் விகிதம் குறைய ஆரம்பித்தது.

இதையடுத்து, 175 ரன்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் ராஜஸ்தான் அணியின் தொடக்க வீரர்களாக ஜோஸ் பட்லர் மற்றும் ஸ்டீவ் ஸ்மித் ஆகியோர் களமிறங்கினர்.

7 பந்துகள் ஆடிய ஸ்மித் 3 ரன்கள் மட்டுமே எடுத்திருந்த நிலையில் பட் கம்மின்ஸ் பந்துவீச்சில் அவுட் ஆனார். அடுத்து வந்த சஞ்சு சம்சங் 9 பந்து வீச்சில் 8 ரன்னில் ஆட்டமிழந்தார். சற்று நிதானமாக ஆடிய பட்லர் 16 பந்தில் 21 ரன்கள் எடுத்த நிலையில் வெளியேறினார். பின்னர் களமிறங்கிய ராஜஸ்தான் வீரர்கள் அனைவரும் அடுத்தடுத்து ஆட்டமிழந்து வெளியேறினார்.

இறுதியில் அதிரடியாக ஆடிய ராஜஸ்தான் அணியின் டாம் கரன் 36 பந்துகளில் 3 சிக்சர்கள் உட்பட 54 ரன்கள் குவித்து கடைசி வரை ஆட்டமிழக்காமல் களத்தில் இருந்தார்.

இறுதியாக 20 ஓவர் முடிவில் 9 விக்கெட்டுகளை இழந்த ராஜஸ்தான் ராயல்ஸ் அணி 137 ரன்கள் மட்டுமே எடுத்தது. இதனால், ராஜஸ்தான் ராயல்ஸ் அணியை 37 ரன்கள் வித்தியாசத்தில் வீழ்த்தி கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணி அபார வெற்றி பெற்றது. (4)

## அருண்குமார் அரைச்சதம்
## ஜொலிஸ்ரார் அணி அரையிறுதிக்கு தெரிவு



கே.சி.சி.சி.வெற்றிக் கிண்ணம்-2020 தொடரில் 3 ஆவது காலிறுதிப் போட்டி கடந்த 26 ஆம் திகதி கொக்குவில் இந்துக்கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

போட்டியில் ஜொலிஸ்ரார் அணி சென்றலைட்ஸ் அணியை 3 விக்கெட்டுக்கலால் வெற்றி பெற்று தொடரின் இரண்டாவது அரை இறுதிக்கு தகுதி பெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய சென்றலைட்ஸ் அணி 29.1 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 162 ஓட்டங்களை பெற்றது.

சாரங்கன் - 24, நிரோஜன் -26, செல்ரன் -26, சோபன் -16 ஓட்டங்களை பெற்றனர்.

களத்தடுப்பில் ஜொலிஸ்ரார் அணி சார்பாக வாமணன்-04, ஜனார்த்தன்-03, சங்கீதன், கிரிசோபன் தலா-01 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.


பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய ஜொலிஸ்ரார் அணி 29.1 ஓவர்களில் 07 விக்கெட்டுக்களை இழந்து 163 ஓட்டங்களை பெற்றனர். போட்டியில் உமாதரன் - 15, வாமணன்-14, அருண்குமார் ஆட்டமிழக்காது 73 ஓட்டங்களைப் பெற்றனர். இவரின் அரைச்சதம் ஜொலிஸ்ரார் அணியின் வெற்றிக்கு வழிவகுத்தது ஜனார்த்தனன்-12, சங்கீதன் ஆட்டமிழக்காது 17 ஓட்டங்களைப் பெற்றனர்.

களத்தடுப்பில் சென்றலைஸ் அணி சார்பாக ஜொலிஸ்ரார்தசோபன்-02, ஜேம்ஸ், கஜன்-01 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

இப் போட்டியின் மூலம் யாழ்.சென்றல் விளையாட்டுக்கழகம் நடத்தும் யாழ். நகரில் சிறந்த கழக அணித் தெரிவு நிகழ்விற்கு ஜொலிஸ்ரார் அணிக்கு 5.93 புள்ளிகளும், சென்றலைட்ஸ் அணிக்கு 2.32 புள்ளிகளும் வழங்கப்பட்டுள்ளது. (4)

அன்பு வாசகர்களே!
உங்கள் பிரதேச விளையாட்டுச் செய்திகளை Valampurisp@gmail.com அல்லது 076 636 3378 என்னும் Viber இலக்கத்துக்கு அனுப்பி வையுங்கள்.
உங்களை உலகறியச் செய்ய நாம் தயார்

## இலங்கை - பங்களாதேஷ் தொடர்
## காலவரையறையின்றி ஒத்திவைப்பு



பங்களாதேஷ் அணி இலங்கை சென்று விளையாட திட்டமிட்டிருந்த டெஸ்ட் தொடர் காலவரையறையின்றி ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

கொரோனா வைரஸ் தொற்றுக் காரணமாக கிரிக்கெட் போட்டிகள் அனைத்தும் கடந்த மார்ச் மாதத்தில் இருந்து ஒத்திவைக்கப்பட்டிருந்தன. ஜூலை மாதத்திற்குப் பிறகு மீண்டும் கிரிக்கெட் போட்டிகள் ஆரம்பித்தன.

அவுஸ்திரேலியாவில் நடைபெற இருந்த இருபது-20 உலகக் கிண்ண கிரிக்கெட் தொடர் ஒத்தி வைக்கப்பட்டது.

இந்த காலகட்டத்தில் பங்களாதேஷ் கிரிக்கெட் அணி இலங்கை சென்று டெஸ்ட் கிரிக்கெட்டில் விளையாட முடிவு செய்தது.

இலங்கையும் அதற்கு சம்மதம் தெரிவித்திருந்தது. இதன் மூலம் மீண்டும் இலங்கையில் சர்வதேச கிரிக்கெட் போட்டி தொடங்கும் என ரசிகர்கள் உற்சாகத்தில் இருந்தனர்.

இந்நிலையில் பங்களாதேஷ்- இலங்கை தொடர் காலவரையறையின்றி ஒத்தி வைக்கப்படுவதாக ஐ.சி.சி. தெரிவித்துள்ளது. (ஐ-4)

## பிரியலக்ஸனின் அரைச்சதம்
## சென்றலைட் காலிறுதிக்கு தெரிவு



கே.சி.சி.சி. வெற்றிக் கிண்ணம்- 2020 தொடரின் 2 ஆவது சுற்றின் 14 ஆவது போட்டி கடந்த 19 ஆம் திகதி கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

போட்டியில் சென்றலைட்ஸ் அணி AB அணியை 2 விக்கெட்டுக்களால் வெற்றி பெற்று காலிறுதிப்போட்டிக்கு தகுதி பெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய AB அணி 28 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 147 ஓட்டங்களைப் பெற்றது. போட்டியில் கஜீபராஜ் 41, ராகுலன் 38 , சிலோஜன் 11 ஓட்டங்களைப் பெற்றனர்.


களத்தடுப்பில் சென்றலைட்ஸ் அணி சார்பாக ஜெரிக்- 04, கஜன்-02, டார்வின், நிரோஜன், தசோபன்- ஒரு விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய சென்றலைட்ஸ் அணி 28 ஓவர்களில் 8 விக்கெட்டுக்களை இழந்து 148 ஓட்டங்களைப் பெற்றது.

போட்டியில் பிரியலக்ஸன் 55, கௌதமன் 43, டர்வின் 17 ஓட்டங்களைப் பெற்றனர். களத்தடுப்பில் AB அணி சார்பாக உத்தமன் - 4 , விஷ்ணு-2, ஞானா -1 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

இப்போட்டி மூலம் யாழ். சென்றல் விளையாட்டுக் கழகம் நடத்தும் சிறந்த கழக அணித் தெரிவு நிகழ்விற்கு சென்றலைட்ஸ் அணி 5.68 புள்ளிகளையும் AB அணி 2.27 புள்ளிகளையும் பெற்றுக் கொண்டது. (4)






வருடாந்த செயன்முறை நிகழ்வு மானிப்பாய் நகரசபை மண்டபத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை ஜே.கே.ஸ் தற்காப்பு கலையகத்தின் நிறுவுநர் எந்திரி ரொசிகரிந் தலைமையில் நடை பெற்றது. இந் நிகழ்வில் ஜே.கே.ஸ் தற்காப்பு கலையகத்தின் சிறுவர்களினால் தற்காப்பு செயன்முறைகளும் விளக்கங்களும் காண்பிக்கப்பட்டன. மேலும் மாணவர்களினால் தற்காப்புக்கலை உத்திகளும் ஓடு உடைத்தல், நெருப்பு வளையத்தினூடாக பாய்தல் போன்ற வியத்தகு துல்லியமான நிகழ்வுகளும் காண்பிக்கப்பட்டன. கலந்து கொண்ட அனைத்து மாணவர்களும் சான்றிதழ் வழங்கி கௌரவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## வடக்குக்கு...

வெல இன்று வடக்கிற்கான விஜயத்தை மேற்கொள்கிறார்.

இரண்டு நாட்களுக்கு நடைபெறும் பல்வேறு மக்கள் நலன் வேலைத் திட்டங்களை அமைச்சர் ஆரம்பித்து வைக்கவுள்ளார்.

இந்த விஜயத்தின்போது அமைச்சர் கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் அரசாங்க தகவல் திணைக்களத்தின் 25 ஆவது ஊடகப்பிரிவை ஆரம்பித்து வைக்கவுள்ளார்.

நிகழ்வில் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, தபால் சேவைகள் வெகுஜன ஊடக தொழில் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் எஸ். வியாழேந்திரன் அரசாங்க தகவல் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் நாலக கலுவெவ உள்ளிட்ட பலர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இதனைத் தொடர்ந்து யாழ். மாவட்ட செயலகத்தில் நடைபெறும் பல்வேறு நிகழ்ச்சிகளிலும் அமைச்சர்கள் கலந்து கொள்ளவுள்ளனர். (ம-3)

## கட்சியை விட்டு...

விடுதியில் நேற்று வியாழக்கிழமை நடைபெற்ற ஊடக சந்திப்பில் கருத்து தெரிவித்த அவர், கட்சிக்குள் நடக்கும் ஜனநாயக மீறலை பார்த்துக் கொண்டு இருப்பவன், தமிழர்களுக்கு எதிரான ஜனநாயக மீறலை எதிர்க்கத் தகுதியற்றவன் என்றும் கூறினார்.

நாம் எமது கொள்கை சார்ந்து பயணிக்கும்போது, ஒரு சிலரின் சுயநலம் மற்றும் சுயலாபத்திற்காக திசை திருப்ப முற்பட்டபோது அதனை கட்சிக்குள் இருந்து, தான் கடுமையாக எதிர்த்தாகவும் அவர் சுட்டிக் காட்டினார்.

அவர்களின் சுயலாப நோக்கிற்கு தான் முட்டுக்கட்டையாக இருந்தமையினாலேயே தன்னை கட்சியை விட்டு நீக்க பல முயற்சிகளை மேற்கொள்ள தொடங்கினார்கள் என்றும் சட்டத்தரணி வி.மணிவண்ணன் குறிப்பிட்டுள்ளார்.

கட்சிக்கு என நிதிக்கட்டமைப்பை உருவாக்க முயற்சித்த போதும் அது ஒரு சிலருக்கு பிடிக்கவில்லை என்றும் நிதிக் கட்டமைப்பை உருவாக்க நினைத்த தன்னை கடுமையாக எதிர்த்தார்கள் என்றும் கூறினார்.

இன்று தன்னை கொள்கை இல்லாதவன் எனக் கூறுபவர்கள் ஏன் முதலிலேயே கட்சியில் இருந்து துரத்தவில்லை என்றும் ஏன் தேர்தலில் போட்டியிட வேண்டும் என மன்றாடினார்கள் என்றும் கேள்வியெழுப் பினார்.

தமிழ்த் தேசியக் கட்சிகளின் உடைவு சிங்கள தேசிய கட்சி வடக்கு கிழக்கில் எழுச்சி பெற்று வருகின்ற நிலையில் புதிய கட்சியோ, அமைப்போ உருவாக்குவது பெரிய விடயமே இல்லை எனக் குறிப்பிட்ட சட்டத்தரணி வி.மணிவண்ணன் தான் உருவாக்கிய கட்சி கண் முன்னால் அழிவடைந்து செல்வதைப் பார்த்துக்கொண்டு இருக்கப் போவதில்லை என்றும் கூறினார்.

கட்சிக்குள் ஜனநாயக பண்பற்ற செயற்பாடுகள் தொடர அனுமதித்தால் தமிழ் மக்களுக்கு எதிரான அநீதிக்கு எதிராக போராட தகுதியற்றவனாக இருப்பேன் என்றும் எனவே மிக விரைவில் கட்சியின் பொதுச்சபையைக் கூட்டி முடிவெடுப்போம் என்றும் வி.மணிவண்ணன் தெரிவித்தார். (ம-3,6)

## 9 பவுண் தாலிக்...

பருத்தித்துறை பொலிஸாரிடம் கொடுத்த முறைப்பாட்டை அடுத்து பொலிஸார் விசாரணைகளை மேற் கொண்டு வருகின்றனர். (ம-3,60)

## குறிப்பிட்ட...

புறுத்தல் குறித்த முறைப்பாடுகள் குறித்து தெரிவிக்கப்பட்டது.

இந்த விடயம் தொடர்பாக ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையில் இலங்கை சார்பாக விளக்கமளிக்கும்போதே..ஐக்கிய நாடுகளுக்கான இலங்கையின் பிரதி நிரந்தர வதிவிடப் பிரதிநிதி டயானி மென்டிஸ் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

ஐக்கியநாடுகள் பொதுச் செயலாளரின் வருடாந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளை இலங்கை அரசாங்கம் ஏற்கெனவே பகிரங்கமாக நிராகரித்துள்ளது என அவர் அங்கு மேலும் தெரிவித்துள்ளார்.

இலங்கை அரசாங்கம் கருத்து சுதந்திரம், சிவில் சமூகத்திற்கான தளம் ஆகியவற்றை பாதுகாப்பது குறித்து அர்ப்பணிப்புடன் உள்ளது என தெரிவித்துள்ள டயானி மென்டிஸ், ஊடகவியலாளர்கள், மனித உரிமை ஆர்வலர்கள், சிவில் சமூகத்தினருக்கு எதிரான சம்பவங்கள் குறித்த முறைப்பாடுகள் விசாரணை செய்யப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

தேசிய பாதுகாப்பு நலன் தொடர்பாக வழமையான பாதுகாப்பு வலையமைப்புகளை இயக்குவதற்கு அப்பால் பாதுகாப்பு தரப்பினரும் புலனாய்வு பிரிவினரும் நாட்டின் எந்த குழுவினரையும் விசேடமாக கண்காணிக்கும் நடவடிக்கையில் ஈடுபடவில்லை எனவும் டயானி மென்டிஸ் தெரிவித்துள்ளார்.

உலகெங்கிலும் தீவிரவாத சக்திகள் நவீன வழிமுறைகளைப் பயன்படுத்தி வருகின்ற இந்த தருணத்தில், தனது தேசிய பாதுகாப்பு தொடர்பாக பலவீனமாக காணப்படும் எந்த நாடும் கவலைதரும் விளைவுகளை எதிர்கொள்ள வேண்டியிருக்கும் எனவும் இதன் காரணமாக அனைத்து தரப்பினரும் இந்த யதார்த்தத்தினை புரிந்துகொள்ள வேண்டும் எனவும் அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார். (ம-3)

## கட்டாயப்படுத்த...

தவோ முடியாது என்றும் சரத் வீரசேகர தெரிவித்தார்.

அத்தோடு சுதந்திர இறையாண்மை கொண்ட இலங்கையின் உள் விவகாரங்களில் இந்தியா தலையிட முடியாது என்றும் சுட்டிக் காட்டினார்.

இந்தியா - இலங்கை ஒப்பந்தத்தின் கீழ் 13ஆவது திருத்தம் நமது அரசியலமைப்பில் அறிமுகப்படுத்தப்பட்டது.

அதன்படி இந்தியா பல நிபந்தனைகளை பூர்த்தி செய்ய வேண்டியிருந்தது, அவற்றில் ஒன்று விடுதலைப் புலிகளை நிராயுதபாணியாக்கப்பட்டது, அது ஒரு போதும் நடக்கவில்லை. இந்தியாவால் அதைக்கூட நிறைவேற்ற முடியவில்லை.

எனவே, இந்தோ - இலங்கை ஒப்பந்தம் எந்த அளவிற்கு பயனுள்ளதாக இருக்கும் என்பது கேள்விக்குரியது என்றும் இராஜாங்க அமைச்சர் சரத் வீரசேகர தெரிவித்தார்.

அத்தோடு 19 இன் மூலம் இழக்கப்பட்ட ஜனாதிபதியின் அதிகாரங்களை திரும்ப வழங்கும் முகமாக 20ஆவது திருத்தம் கொண்டு வரப்படுவதாக அவர் கூறினார்.

நிறைவேற்று அதிகாரம் இன்றி நாட்டினை நிர்வகிக்க முடியாது எனச் சுட்டிக் காட்டிய அவர் இருப்பினும் 19ஆவது திருத்தத்தில் பிரதமருக்கு இருந்த அதிகாரத்தினை குறைப்பதற்கான முயற்சி இதுவல்ல என்றும் குறிப்பிட்டார். (ம-3)

## கஞ்சாவுடன்...

பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் 30 வயதுடைய ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்டவரை பருத்தித்துறை நீதிமன்ற நீதவான் வாசஸ்தலத்தில் ஆஜர்படுத்திய போது அவரை 6ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டார். (ம-3,60)

## தான்...

மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.

எதிர்க்கட்சி தலைவர் அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனைக் கூறினார்.

20ஆவது திருத்த சட்டமூலம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது. நிலையியல் கட்டளைக்கமைய திருத்த சட்டமூலத்தை பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கு முன்னர், துறைசார் நிபுணர் குழுவில் சமர்ப்பிக்கப்பட்டிருக்க வேண்டும்.

பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் சட்டமூலங்களில் உள்ளடக்கப்பட்டுள்ள ஒவ்வொரு சரத்தையும் ஆழமாக ஆய்வு செய்வதையே நிபுணர் குழு செய்து வருகின்றது.

இந்த குழு நல்லாட்சி அரசாங்கத்தில் உருவாக்கப்பட்ட குழுவாகும். நல்லாட்சி அரசாங்கம் இந்த குழுவின் தலைமைத்துவத்தையும் எதிர்த்தரப்பினருக்கே வழங்கியிருந்தது.

சபை முதல்வர் துறைசார் நிபுணர் குழுவில் 20ஆவது திருத்த சட்டமூலத்தை சமர்ப்பிக்காமலே பாராளுமன்றத்தில் சமர்ப்பித்துள்ளார்.

அரசாங்கம் நிலையியற் கட்டளைக்கு புறம்பாக தான்தோன்றித்தனமாக பாராளுமன்றத்தில் 20ஆவது அரசியலமைப்பு திருத்த சட்டமூலத்தை சமர்ப்பித்துள்ளது.

இந்நிலையில் திருத்தம் தொடர்பில் முழுமையான விவாதம் நடத்துவதற்கு கூட இடமளிக்காது தங்களுக்கு இருக்கும் பெரும்பான்மை பலத்தை வைத்து நிறைவேற்றிக் கொள்ளவே முயற்சிக்கின்றது என்றும் அவர் கூறினார். (ம-3)

## மும்பை வெற்றி



**மும்பை 191/4** (20 ஓவர்)
**பஞ்சாப் 143/8** (20 ஓவர்)
மும்பை 48 ஓட்டங்களால் வெற்றி
ஆட்டநாயகன் பொலார்ட் (மும்பை)


**வாசனா சம்பத**
சீட்டிழுப்பு இலக்கம் 1618 திகதி 2020/10/01
ஆங்கில எழுத்து W வெற்றி இலக்கங்கள் 01 02 30 55
தேசிய லொத்தர் சபை

**மெகா பவர்**
திகதி 01/10/2020
சீட்டிழுப்பு இலக்கம் 0629
வெற்றி எழுத்து T சுப்பர் இலக்கம் 05 வெற்றி இலக்கங்கள் 30 41 71 75

**கொவிசெத** உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 01-10-2020
சீட்டிழுப்பு இலக்கம் 2557
ஆங்கில எழுத்து D வெற்றி இலக்கங்கள் 09 23 37 74
தேசிய லொத்தர் சபை

**மஹஜன சம்பத**
திகதி 2020/10/01
சீட்டிழுப்பு இலக்கம் 4262
ஆங்கில எழுத்து C வெல்லப்பட்ட இலக்கங்கள் 7 0 8 1 3 8
தேசிய லொத்தர் சபை

**සංවර්ධන වාසනාව** அபிவிருத்தி அதிர்ஷ்டம் — உத்தியோகபூர்வ முடிவுகள்
வெற்றி வாரம் 371 திகதி 01.10.2020 வர்ணம் நீலம்
ஆங்கில எழுத்து S வெற்றி இலக்கங்கள் 18 19 29 விதி எண் 3
எதிர்வரும் சுப்பர் பரிசுப்பொதி ரூ. 12,393,572
6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.
வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்
தொ. பே.: 0112 333 546/47 Web: www.dlb.lk

**அத கோடிபதி** ADA KOTIPATHI
வியாழக்கிழமை சீட்டிழுப்பு இல: 1058 வர்ணம் : நீலம் சீட்டிழுப்பு திகதி: 2020.10.01
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 74,566,565/-
வெற்றி இலக்கங்கள் 02 19 60 70 ஆங்கில எழுத்து G
ரூ. 500/- பரிசுக்கான விசேட இலக்கம் 2742
ரூ. 100/- பரிசுக்கான விசேட இலக்கம் 181
அபிவிருத்தி லொத்தர் சபை
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

**சனிதா** Shanida
வியாழக்கிழமை சீட்டிழுப்பு திகதி: 2020.10.01 சீட்டிழுப்பு இல. : 3388 வர்ணம் : சிவப்பு
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 43,554,897.40
வெற்றி இலக்கங்கள் 42 52 55 71 ஆங்கில எழுத்து N
ரூ. 500/- பரிசுக்கான விசேட இலக்கம் 7215
அபிவிருத்தி லொத்தர் சபை
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

**SUPER BALL**
சீட்டிழுப்பு வாரம் 1232 நிறம் பச்சை
சீட்டிழுப்பு திகதி 01.10.2020 தினம் வியாழக்கிழமை
வெற்றி எழுத்தும் இலக்கங்களும் R 28 44 59 61
51,422,181.20
SUPER 500 விசேட இலக்கம் 1 6 8 7

**ராசி** அதிர்ஷ்டம்
திகதி 01/10/2020 வெற்றி வாரம் 2939
வர்ணம் கபிலம்
வெற்றி இலக்கங்கள் 14 45 54 59 மிதுனம்
6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.
ரூ.500 பரிசுக்குரிய 9354
ரூ.100 பரிசுக்குரிய 640
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை 60,66,780

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



தோற்றம்
20.03.1970

மறைவு
03.09.2020

அமரர்

## கலாபதி அருந்தவநாதன்

கடந்த 03.09.2020 வியாழக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்த எமது குடும்பத் தலைவி அமரர் கலாபதி அருந்தவநாதன் அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் நேற்று (01.10.2020) வியாழக்கிழமை கீரிமலை புனித தீர்த்தக் கரையில் நடைபெற்றதுடன் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் நாளை (03.10.2020) சனிக் கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறவுள்ளதால் அத் தருணம் தாங்களும் தங்கள் குடும்பசகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

கால தேவன் கிழித்துவிட்ட
கோலக் கவிதை கலாபதியே!
வான் மதி நின் முகத்தையும்
தேன் மலர் உம் இனிமையையும்
என்றும் சாற்றி நிற்க ......
நீங்காத உம்
நினைவுகளுடன் நாம்.

இவ் அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்.

நுணாவில் பிள்ளையார் கோவிலடி,
சரசாலை வடக்கு,
சரசாலை.

ந. அருந்தவநாதன் (கணவர்)
(இ.போ.ச. பருத்தித்துறை சாலை)
குடும்பத்தினர்

(4078)


FALC FRENCH LANGUAGE CENTRE

பிரெஞ்ச் Courses

Embassyஆல் அங்கீகரிக்கப்பட்ட International Diploma
(DELF A1, A2, B1, B2)
V. ஜெகன் (Trained in France)

(C-392)

40, பலாலி வீதி, ஆரியகுளம்.
0779 789 456 / 021 221 7781

23\2, சோமசுந்தரம் அவெனியு,
கச்சேரி. Near the Fuel Station.
0779 789 456 / 021 221 9497

திருமணமாகி U.K. செல்வோர்க்கான IELTS Life Skills A1,B1,
Spoken English மற்றும் Work / Student Visa கான IELTS வகுப்புக்கள்.

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532

**தேவை**

கட்டட ஒப்பந்த நிறுவனம் ஒன்றிற்கு
வெல்டிங் வேலை தெரிந்த (Welder)
வேலையாள் தேவை.
(4346)

077 985 1946
076 316 5730

**காணி விற்பனைக்கு**

நெடுங்குளம், கொழும்புத்துறை,
யாழ்ப்பாணத்தில்
4 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.
(2 பரப்புக்களாக பிரித்தும் கொடுக்கப்படும்.)
பரப்பு ஆறு இலட்சம்
தரகர் தேவையில்லை
(4100)
077 468 3354 / 076 221 2037

**அமெரிக்க லொத்தர் விசா**

பதிவுகள் ஆரம்பம்
08-10-2020
நீங்களும் இந்த ஆண்டு அமெரிக்க
லொத்தர் விசா அதிஸ்டசாலி ஆகலாம்.
இறுதி நேர ஏமாற்றத்தினை தவிர்த்திட
உடனடியாக கடவுச்சீட்டினை
எடுத்து வைத்துக்கொள்ளுங்கள்
என்றும் உங்கள் மீது அக்கறையுடன் V2 TRAVELS
0768226244
(C-308)

**விரைவு பொதிகள் சேவை**

V2 TRAVELS
UK- 1025/= Kg
0768226240
எமது நேரடிக்கிளைகள்
- யாழ்ப்பாணம்
- கிளிநொச்சி
- சாவகச்சேரி
- நெல்லியடி
- கொடிகாமம்
- மானிப்பாய்
- புதுக்குடியிருப்பு
- சுன்னாகம்
- பருத்தித்துறை
- வல்வெட்டித்துறை

(C-308)

**கனடாவில் வேலைவாய்ப்பு / கல்வி கருத்தரங்கு**

மிகவும் குறைந்த செலவில் கனடாவில் நிரந்தர பிரஜை ஆகுவதற்கான வாய்ப்புக்கள்

Home support worker / child care provider
வருடத்திற்கு 5000 வீசா வாய்ப்புக்கள்

யாழ்ப்பாணத்தில் கற்று
கனடாவில் வேலை செய்யலாம்

அடிப்படைக்கல்வித்தகுதி :- A/L
- வயதெல்லை :- 19 முதல் 50 வரை

அனுமதி இலவசம்

ஞாயிறு காலை 11 மணி
04-10-2020

CANADA MIGRATION PILOT CIMS
(C-308)

Saaruban Sivaratnam
Regulated Canadian Immigration Consultant
(MBA,B.Eng) - RCIC # 519684
Member of Immigration Consultants of Canada Regulatory Council
Member of Canadian Association of Professional Immigration Consultants
CAPIC ACCP

CIMS COLLEGE
49A, சப்பல் லேன், யாழ்ப்பாணம்
0777069777 / 0777068777


# ஈரவிழிகளுடன் ஈராண்டுகள்



அமரர்

## பத்மநாதன் ஆதவன்

ஆண்டு இரண்டாச்சு
ஆறவில்லை நம்மனசு
மண்ணிலே உன்வாழ்வு
கானல் நீரானதுவோ

தேறவே முடியாமற்
திக்கறியாப் புட்களானோம்

இன்னுயிர் துறந்துநீ
இறையோடு கலந்தாலும்
வானில் ஓர் தாரகையாய்
வந்தெமக்குக் காட்சி கொடு

வண்ணமலராய் மலர்ந்தெம்
வாசலில் உன்முகம்காட்டு

கலையாத உன்நினைவோடு
கண்களில் நீர்சொரிய
விளக்கின்றி இருளோடு
வழிகடந்து செல்கிறோம்

சாந்திகொள் என்றென்றும்
சாந்திபெறு ஓம் சாந்தி

எம்முடன்
13.07.1987

நினைவுடன்
02.10.2018

என்றும் உன் நினைவுகளுடன்
உறவுகள்

(C-451)

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 02.10.2020 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.